# தேர்ந்த கட்டுரைகள்

வெளியீடு-23



A challenge in Angola

*In the biggest killing field*

பெரும் கொலைக்களமான அங்கோலவில் ஒரு சவால்



Veddha cry for ... r deal

... வேடுவர்கள் ... எழுப்புகின்றார்கள்

A northern knock

*The battle of Pooneryn*

Understanding the handicapped child

Nobel's noble vision clashed with narrow nationalism of his time

Dealing with depression

Aideed - the man who held the U.N. hostage

SLAF has vital role in fight against Tigers

ON THE HARAPPAN TRAIL

போரும் சமாதானமும்

வெளியீட்டு வாரியம்,
அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
05 03-1994.

JPL
C3023
3023.cc
102652

2
320.512

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

தேர்ந்த
கட்டுரைகள்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
19-3-1994
யாழ்ப்பாணம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

KOHA JPL

வெளியீடு - 23

102652

வெளியீட்டு வாரியம்,
அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

05-03-1994

விலை: 35/-

## வாசகர்களுக்கு

தேர்ந்த கட்டுரைகள் வரிசையில் இது 23 ஆவது வெளியீடாகும்.

இக்கட்டுரைகளில் வரும் தகவல்கள் சில சரியானவை அல்ல. கட்டுரைகளை வாசித்து அதில் வரும் தகவல்கள், கருத்துக்களிலுள்ள சரியானவற்றையும், தவறானவற்றையும் பகுத்தறிய வேண்டிய கடமை வாசகர்களாகிய உங்களின் திறமையிலேயே அடங்கியுள்ளது.

பல்வேறுபட்ட பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்தும் இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை நீங்கள் வாசிப்பதிலும், பேணுவதிலும் காட்டும் ஆர்வம் எம்மை மேலும் ஊக்குவிக்கும்.

## உள்ளே..

KOHA JPL

102652

| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. நல் வாழ்க்கை வேண்டும் என்று வேடர்கள் ஓலமிடுகின்றனர் | 1 — 4 |
| 2. மனநோய் எந்தக்குடும்பத்திலும் ஏற்படும் இந்த நோய்க்குட்படாமல் தடுத்துக்கொள்ளும் சக்தியுடையவர் ஒருவரும் இல்லை இந்தநோய்க்கு அழுத்தம், அழக்கம் தனி இயல்பான காரணங்களல்ல. | 5 — 6 |
| 3. ஐக்கிய நாட்டுப் படையினரை பணயக்கைதிகளாக வைத்திருந்த திரு. அயிடீட் அவர்கள் | 7 — 8 |
| 4. வலுவிழந்த குழந்தையைப் புரிந்து கொள்ளுதல் | 9 — 11 |
| 5. மனச்சோர்வு | 11 — 14 |
| 6. ஹரப்பா நாகரீகத்தைத்தேடி | 14 — 17 |
| 7. வரலாற்றில் மாறுதல் அடைந்து வரும் பெண்களின் சமுதாயப் படி நிலை | 18 — 21 |
| 8. அரசாங்கத்தின் யுத்த தந்திரத்திற்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்ததந்திரம் | 22 — 25 |
| 9. புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை விமானப்படை முக்கிய பங்கை வகிக்கின்றது | 26 — 28 |
| 10. வடக்கிலிருந்து கிடைத்த பலத்த அடி பூநகரி யுத்தம் | 29 — 32 |
| 11. பூநகரியின் அவல ஓசையும் அண்மை வரலாற்றில் இராணுவ வழிநடத்தல்களும் | 33 — 37 |
| 12. உலக மக்களின் கல்வியறிவில்லாத பெண்களே பெருந்தொகையினராக உள்ளனர் | — 38 |
| 13. வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் | 39 -- 40 |
| 14. பெரும் கொலைக் களமான அங்கோலாவில் ஒரு சவால் | 41 — 44 |
| 15. திரு. நோபல் அவர்களின் உன்னதமான நோக்குடன் அவர்களுடைய காலத்தில்] நிலவிய குறுகிய தேசியவாதம் முரண்பட்ட தகவலிலிருந்து... | 45 — 46 |
| 16. போரும் சமாதானமும் | 47 — 50 |


# சமத்துவத்தை நோக்கிய பயணமாக

எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம் காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமது மனக் குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக்கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வுதோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும் பெண்ணின விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப்பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழி சமைத்துக்கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கி பயணமாகப் பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்கு தள்ளி விட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

ஒரு விடுதலை இயக்கத்துடன் அணி சேர்ந்துகொள்வதன்மூலமே பெண்ணினம் தனது விடுதலை நோக்கிய இலட்சியப்பாதையில் வெற்றி பெறமுடியும். வீரமும் தியாகமும், துணிவும், தன்நம்பிக்கையும் கொண்ட புரட்சிப் பெண்களாகமாற முடியும். பெண் விடுதலைக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கும் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுது தான் எமது போராட்டமும் முழுமை பெறும்.



**எனது மக்களின் விடுதலைக்காக**

தலைவர் பிரபாகரனின்
கருத்துத் தொகுப்பு
என்ற நூலிலிருந்து

# நல்வாழ்க்கை வேண்டும் என்று வேடர்கள் ஓலமிடுகின்றனர்

சண்டே ஒப்சேவர் — 17.10.93

பல்லாயிரம் ஆண்டுகளாக வேடர்கள் குறிப்பிடத்தக்க வேறுபாடுடைய தனித்துவம் வாய்ந்த இனக்குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர். புறோ (Brow) என்பவர் 1978இல் வேடர்களைப் பற்றி எழுதியிருப்பது:- "மிகப் புகழ்பெற்ற அதே நேரத்தில், சிலரே அறிந்த மக்களில் வேடுவ இனத்தவரும் ஒருவராவர் என்று மனித இன வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது" செலிக்மான்ஸ் என்பவர் 1911இல் அவர்களைப் பற்றி (வேடர்களைப் பற்றி) எழுதியிருப்பது:

"தற்பொழுதும் வாழ்கின்ற மிகப்பழமை வாய்ந்த மரபுக்குடிகளில் ஒன்றான இனம்... இன்று எண்ணிக்கையில் குறைந்தும் அழிவுறுந் தறுவாயிலும் இருக்கின்றது'' என்பதே.

ஆகவே இக்காரணத்திற்காக, தங்கள் தனித்துவ இன வாழ்க்கை வரலாறு பற்றிய சுய அறிக்கையை விளம்பரம் செய்ய வேண்டிய நிலையில், வேட்டுவ இனம் இருக்கின்றது.

தனிமையாக ஒதுங்கிவாழும் குடியேற்றம், வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்துதல், சமயம், மொழி, பழக்கவழக்கம், சமுதாய அமைப்பு முதலிய இலங்கை வேடசமூகத்தின் குணாதிசயங்களைப் பற்றிய அடிப்படைத் தத்துவங்களை, 1990இல் தர்மதாசாவும், சமரசிங்காவும் மிக நுட்பமாக வெளியிட்டுள்ளனர்.

செலிக்மான்ஸ் என்பவரின் காலத்தில் வேடர்களின் இயற்கை வாழ்விடங்கள் காடு, கிராமம் அல்லது கரை ஓரப்பகுதிகளாக இருந்ததாகக் கூறுகிறார். காட்டு வாழ்க்கை நடத்தி வேடர்கள் காலப்போக்கில் தங்கள் வாழ்க்கையை கிராமப் புறங்களுக்கேற்ற மாதிரி மாற்றி அமைத்துக் கொண்டனர். தங்கள் குலமரபுக்கேற்ப சிறு சிறு தனிக்குழுக்களாகவோ அல்லது 'வறுகே'களாக வாழ்ந்தனர். காட்டு உயிரின வாழ்க்கைச் சூழல் இவர்களின் வாழ்க்கையை நிர்ணயித்தது. இயற்கையின் கொடையும் இவர்களின் தேவையும் சமநிலையிலிருந்தது. கிராம வாழ்க்கைக்குத் தங்களை உகந்தமாதிரி மாற்றிக் கொண்டனரே என்றாலும் ஒரே இடத்திலிருந்து வேளாண்மை செய்வதிலும் பார்க்க நாடோடிகள் வாழ்க்கை நடத்தவே அவர்கள் கூடுதலாக விரும்பினர்.

> ...கிழக்கு மாகாணத்தின் கல்ஓயா நீர்ப்பாசனத்திட்டத்தால் (1949 - 52) வேடுவ சமூகம் பாரிய விளைவை அனுபவித்தது. இத்திட்டத்தின்படி பாரிய நீர்த்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரம் கட்டப்பட்டது. இந்த நீர்த்தேக்கத்தால் வேடுவரின் சில சிறந்த வேட்டை நிலப்பகுதிகளும் அவர்கள் வசித்து வந்த குகைகளும் நீர்வாங்கு தளமாக வெள்ளப்பெருக்குக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்டன...

## வேடுவரின் சனத்தொகை

சரித்திர ஆவணங்கள் மற்றும் குடிசன மதிப்பீட்டுப்பத்திரங்கள் மூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் வேடர்களின் எண்ணிக்கையும் அவர்களின் வதிவிடங்களும் காட்டப்பட்டுள்ளன. இலங்கையில் இரண்டாவது குடிசன மதிப்பீடு 1881 இன்படி 2228 வேடர்கள் கணக்கிடப்பட்டுள்ளனர். 1911இல் இத்தொகை 5,332 ஆக கூடியிருந்தாலும் அடுத்து வந்த மதிப்பீட்டின்படி மிகக்குறைவான எண்ணிக்கையே காட்டப்பட்டுள்ளது. 1963 மதிப்பீட்டின் பின் ஒரு தனி இனமாக வேடர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படாவிட்டாலும், 1985இல் இலங்கை வேடர் இனம் 2000 பேர் இருக்கும் என்று ஹைன்ட்மான் 1987 இல் மதிப்பிட்டுள்ளார்.

புவிப்பிரதேசரீதியில் இவர்களின் வாழ்வைவிட மாற்றங்களைக் கவனிக்கும் பொழுது, இவர்கள் எண்ணிக்கையில் குறைந்திருப்பது மட்டுமல்லாமல் காடுகளின் எல்லைப் புறங்களை நோக்கிப் பின்வாங்குவதையும் கவனிக்க முடிகிறது.

பல பகுதிகளிலுமிருந்து தரப்பட்ட பெயர்களைப் பார்க்கும் பொழுது வேடுவ இனத்தின் இயற்கையான வாழ்விடங்கள் 120 ஆகக் கணிக்கலாம். பிந்தனை, பல நூற்றாண்டுகளாக வேடுவரின் முக்கிய வாழ்விடமாக இருந்து வந்திருக்கிறது. இதை 'மகா வெடி றட்ட' என்று அழைக்கப்படும் இலங்கையின் மத்திய மலைநாட்டின் கிழக்கிலுள்ள வரண்ட பிரதேசத்தில், முக்கோண வடிவிலான இப்பள்ள நிலப்பிரதேசம் (பிந்தனை) வடக்கில் வடமத்திய மாகாணத்திலிருந்து, மகாவலிகங்கை

யால் துண்டிக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தின் சுற்றுப்புற சூழ் நிலைமைகள் வேட்டையாடவும், பொருள்கள் சேகரிப்பதற்கும் மிக தகுந்த இடங்களாக இருப்பதால் வேடுவரின் வாழ்க்கைக்குகந்ததாக அமைகிறது. இப்பகுதியின் மண் வகையும் காலநிலையும் நெற்பயிர் செய்வதற்கு தகுதியற்றவையாக உள்ளன.

வறண்ட பிரதேசக்காடுகளில் விரும்பியமாதிரி வேட்டையாடல், பொருட்கள் சேகரித்தல், மாற்று இடங்களில் பயிர்செய்தல் போன்றவற்றிற்கிருந்த நிலப்பிரதேசம். கடந்த அரைநூற்றாண்டில் குறுகி விட்டது. முக்கியமாக சுதந்திரத்திற்குப்பின் குடியேற்றம், நீர்பாசனத்திட்டம் போன்றவற்றால் வேடர்களின் பாவனைப்பிரதேசங்கள், வறண்ட பிரதேசக்காடுகளில் மிகக் குறைவாகவே ஆக்கப்பட்டன. ஆனால் தேசிய ரீதியில் நெற்பயிர்ச்செய்கை நிலங்கள் 1946க்கும் 1982க்கும் இடைப்பட்ட காலத்தில் 35%மாக பெருக்கப்பட்டது. அதுவும் கிழக்கு, ஊவா மாகாணங்களில் வெகுவிரைவாக நெற்பயிர்ச் செய்கைக்கான பிரதேசம், கூடிய பகுதியை விழுங்கியதால், ஒதுங்கி வாழ்ந்த வேட இனத்தவர் மேலும் பாதிக்கப்பட்ட ஆபத்தான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இப்படிப்பட்ட காரணங்களின் விளைவாக இலங்கையின் காட்டுப்பிரதேசம் 1950தில் 44% திலிருந்து 1980தில் 24%. மாகக் குறைந்து விட்டது. இன்று (1993) 20%.மாக இருக்கிறது.

முக்கிய திட்டங்களில், கிழக்கு மாகாணத்தின் கல்ஓயா நீர்ப்பாசனத்திட்டத்தால் (1949 - 52) வேடுவ சமூகம் பாரிய விளைவை அனுபவித்தது. இத்திட்டத்தின்படி பாரிய நீர்த்தேக்கமான சேனநாயக்கா சமுத்திரம் கட்டப்பட்டது. இந்த நீர் தேக்கத்தால் வேடுவரின் சில சிறந்த வேட்டை நிலப் பகுதிகளும், அவர்கள் வசித்துவந்த குகைகளும் நீர் வாங்கு தளமாக வெள்ளப்பெருக்குக்குள்ளாகி மூழ்கடிக்கப்பட்டன. அத்தோடு அவர்களை மீளக் குடியமர்த்தும் முயற்சிகளால், வேடர்களின் பரம்பரை வாழ்க்கை முறைகளைக் கிழறுத்து அவர்களுக்கு முறைகேடு விளைவிக்கப்பட்டது. இதுமட்டுமல்லாலாமல், சட்டப்படியோ கள்ளத்தனமாகவோ காடுகள் வெட்டி அழிக்கப்பட்டதாலும், நிலப்பரப்பின் மாற்றுத்திட்டங்களாலும் வேடர்களின் சுற்றாடற் சூழ்நிலை மிகமோசமான வகையில் முக்கியமாக அறுபதுகளில், மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இன்று மிகப்பாரிய நீர்ப்பாசனக் குடியோற்றத்திட்டமாக விளங்கும் மகாவலி அபிவிருத்தித் திட்டம், வேடர்களின் இயற்கை இருப்பிடமாக விளங்கிய பிந்தனை, தம்மன்கடுவ, கிழக்கு மாகாணம் முதலிய பிரதேசத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கி விழுங்கி விட்டது.

இத் திட்டத்தின் 'சி. வி.' பிரிவுகளின்படி அபிவிருத்தி செய்யவேண்டிய 150,000 ஹெக்டர் நிலப்பரப்பின் வேலை முடியுந்தறுவாயிலுள்ளது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஏறக்குறைய 35,000 குடும்பங்கள் இப்பிரதேசங்களில் குடியேற்றப்பட்டு இருக்கின்றனர்.

வேடுவர்கள் தங்கள் பரம்பரை வாழ்க்கை முறையை தொடர்ந்தும் நடத்த முடியாதவாறு அமைவதற்கு, குறுகிக்கொண்டு போகும் காடுகளே கூடியவரையில் உடனடித் தாக்கத்திற்குக் காரணமாகவுள்ளது. அண்மைப்பகுதிகளிலுள்ள சிங்களவர், தமிழர்களுடன் முழுமையாக இணைந்த வேடர்கள் தங்களைக் கிராமவாழ்க்கைக்கு தகுந்தமாதிரி மாற்றியமைத்துக் கொண்டனர். இம்மக்களுக்கு மீள் குடியேற்றத்திட்டங்களில் மறுசீரமைப்பு செய்து கொடுத்தல் அல்லது அவர்களுக்கு அடிப்படை இனியவாய்ப்பு வசதி வழிவகைகளைச் செய்து கொடுத்தல் போன்ற சட்ட முறைப்படியான பல நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சொந்த நிலவசதி, வீட்டு வாய்ப்பு நல உதவிகள், கல்வி, சுகாதார வசதிகள் அவற்றுள் அடங்கும்.

## தம்பனை நாகரிகம்

பரம்பரையாக வேடர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் இன்றும் நிலைத்துநிற்கும் கிராமங்களில் ஒன்று தம்பனை. இக்கிராமம் மதுறு ஓயாவிற்கும் மகாவலிக்கும் இடைப்பட்ட சமவெளியில் அமைந்துள்ளது. வேடுவத்தலைவன் திசாமினி இக்கிராமத்தில், வாழ்வதாகவும் தம்பனை வேடர்களின் கிராமங்களில் முக்கியமானதாக விளங்குகிறது.

பல அபிவிருத்தித் திட்டத் தலையீடுகளுக்குப் பின்பும், வேடரின் இயற்கை வாழ்விடமான தம்பனை, வேடருடைய காட்டு ஆட்சி எல்லைப்பரப்பைக் கொண்ட இடங்களில் ஒன்றாக இன்றும் விளங்குகிறது. செலிக்மான் என்பவர் 1909தில் இப்பகுதிக்கு வருகைதந்தபொழுது, குறைந்தது இருபது குடும்பங்கள், ஓரளவிற்கு நன்றாகக் கட்டப்பட்ட வீடுகளில் வாழ்ந்தனர் என்றும், அவர்கள் எருமை வளர்ப்பிலும் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறியிருக்கிறார். இவ்வேடர் வெளியாரோடு மட்டுப்படுத்தப்பட்ட பண்டமாற்று வியாபாரம் செய்தனர். இங்கு வந்த வெளிநாட்டவர், மற்றும் உள்நாட்டு மக்கள் மூலம், தம்பனை வேடர்களை வெளியுலகத்திற்கு அறிமுகப்படுத்தினாலும், தங்கள் வேடுவ பாசையை இன்றைய சந்ததியினர் வரைக்கும் காப்பாற்றி வந்திருக்கின்றனர்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மூன்று இயற்கைவள ஒதுக்குப் பகுதிகளில் ஒன்றானதே மதுரு ஓயா தேசியப் பூங்காவாகும். 1983 இல் விலங்கு தாவரப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இப்பூங்கா பிரகடனப்படுத்தப்பட்டது. 58,850 ஹெக்டர் நிலப்பகுதியைக் கொண்ட இப்பகுதிக்குள் பல பரம்பரைக் குடியமர்வுகளும், வேடுவ இனத்தவரின் முக்கிய இயற்கை வாழ்விடங்களும் அமைந்துள்ளன. 1981 ஆம்

ஆண்டு நடத்திய ஆய்வின்படி 4616 மக்கள், வேடர்களும், வேடரல்லாதவருமாக கலந்து இப்பகுதியில் வாழ்ந்திருக்கின்றனர். அரசாங்கம் இவர்களைக் குடியெழுப்ப எண்ணியிருந்தது. இத்திட்டத்தால் வேடருடைய கிராமங்களாகிய கேரகோடை, கொத்தபக்கினா, கெடேயாய, கந்தபனவிலா முதலானவற்றில் வாழ்ந்தவரே பாதிப்புக்குள்ளாகாமல் இருந்தனர். மகாவலித்திட்டத்தின் கீழ் நில அபிவிருத்தி, குடியேற்றம் போன்றவற்றிற்காக காடுகள் அழிக்கப்பட்டதால், 150-200 வரையிலான யானைகள் வாழ்விடமில்லாமல் தவித்தன. இந்த யானைகளை மேற்கூறிய தேசிய பூங்காவில் வாழவைப்பதே அரசின் நோக்கமாக இருந்தது. அத்தோடு உல்கிட்டிஓயா, றத்கிந்தைஓயா, மதுறுஓயா முதலியவற்றின் நீர்த்தேக்கங்களுக்கு நீர்வாங்கு தளமாகவும் இப்பகுதியைப் பாதுகாக்க அரசு திட்டம்போட்டிருந்தது. இத்தலையீட்டினால் (அரசின்), தம்பனை வேடுவர்கள் தங்கள் வேட்டைநிலங்கள், பொருட்கள் சேகரிக்கும் பகுதிகள், சேனைப்பயிர்ச்செய்கை நிலங்கள் போன்றவற்றை இழந்து மிகப் பாரியதாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

வேடர்கள், சொந்தபந்த உறவுகளிலிருந்து ஒதுக்கப்பட்ட நிலை, சுற்றுச்சூழல் நிலவரங்கள் அவர்கள் பழக்கப்பட்ட அனுபவம், பரம்பரை வேடவாழ்விடங்களுக்கண்மையில் வசிப்பது போன்ற வேடரின் வாழ்க்கைச் சரித்திரத்தைக் கருத்திற்கொண்டு, தேசிய பூங்காவின் மதுறுஓயாவில் குடியமர்த்தப்பட்ட வேடர்களை 1983 இல் திரும்பவும் ஹென்னனிகலையில் குடியமர்த்த, மகாவலி அதிகார நிபுணர்கள் திட்டம் தீட்டினர். அவர்கள் நாகரிகப்படி வருங்கால வாழ்க்கையை வேடர்கள் தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற எண்ணத்தை மனதிற்கொண்டு, வேடர்கள் எல்லோரும் ஒரு கோட்டத்தில் குடியமர்த்தப்பட்டனர். வேட்டையாடும் வசதிகள் அப்பிரதேசத்தில் செய்துகொடுக்கப்படாததால், தங்கள் வாழ்க்கை முறைகளையும் வேடர்கள் மாற்றவேண்டியிருந்தது. ஒரு குடும்பத்திற்கு ஒரு ஹெக்டர் நிலம் கிடைத்தது. நீர்ப்பாய்ச்சி நெற்பயிர் விளைச்சல் செய்யவேண்டும். 131 வேடுவக்குடும்பங்கள் தங்கள் பழைய வாழ்க்கையை விட்டு புதிய வாழ்க்கை முறையைப் பின்பற்றியுள்ளனர் என்று எங்கள் ஆய்வுமூலம் காண முடிகிறது.

வேடர்களில் சிலரும் வேடரல்லாதவர்களில் பலரும் தேசிய பூங்காவாழ்க்கையைவிட்டு வேறுபுதிய இடங்களில் குடியேறி புதிய வாழ்வுமுறையைப் பின்பற்ற விருப்பங்கொண்டனர். இவர்களின் முந்திய கிராமங்களிலில்லாத கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் இப்புதிய குடியேற்றப்பகுதிகளில் கிடைத்தபடியால், இவற்றால் மேற்கூறப்பட்டவர்கள் ஈர்க்கப்பட்டனர். 1984 இல் சிறிகமகே இக்குடியேற்ற வாசிகளின் கஸ்டங்களையும் குறைகளையும் விளக்கிக் காட்டியுள்ளனர். இக்கிராமங்களில் சேனைப்பயிர்ச்செய்கைக்கு இடம் கிடைக்கவில்லை; காட்டு மிருகங்களால் பயிர்கள் நாசப்படுத்துவது அதிகம். ஆசிரியர்களை நியமிப்பதிலும் வரவு குறைவாகவும் இருப்பதால், பரம்பரை வேடர் வாழ்விடத்தின் மையத்திலுள்ள கந்தேகன்வில பாடசாலை அனேகமாக அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் கலுஅப்பு, தப்பல் பண்டியா தலைமையின் கீழ் வேடப்பகுதி மக்கள் குழு, புதிய குடியேற்றங்களுக்கு நகர்வுசெய்ய விருப்பந்தெரிவித்தனர். தம்பனையும் அதன் சுற்றுப்புறங்களிலுமிருந்தும் குடிபெயர்ந்தவர்கள் எப்பொழுதும் தங்களுக்கு மாற்றுப்பயிர்ச்செய்கைக்கு நிலம் பற்றாமல் இருப்பதாக குறைகூறிக்கொண்டே இருந்தனர். இவர்கள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தாலும், இதற்காக நிலம் கொடுப்பதற்கு அதிகாரிகளுக்கு சட்ட வழிவகை செய்யப்படவில்லை. பரம்பரைத் தலைவரான வயதில் முதிர்ந்த கலுப்பு, அவர்களின் சேனைப்பயிர்ச் செய்கையில் வேடுவர் அதிக விருப்பங்கொண்டுள்ளனர் என்று அவர்களின் விருப்பை விளக்கிக் காட்டியுள்ளார்.

வேடர்களின் விருப்பு விவகாரத்தை ஒரு முடிவிற்குக் கொண்டுவர 1990 நடுப்பகுதியில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எத்தனித்தார். இதன்காரணமாக கண்டியில் நடந்த கூட்டத்தில் ஜனாதிபதியோடு, திசகாமி தன் பரிவாரங்களோடு சந்தித்தபொழுது, இதில் நிலச்சீர்திருத்த அமைப்பு உத்தியோகத்தர், மகாவலி திட்டத்தினர், வனவாழ்வு பாதுகாப்பு இலாகா போன்றவற்றின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் 38 குடும்பங்களுக்கு 1,500 ஏக்கர் நிலப்பரப்பை வேடர்கள் கேட்டதாகவும் இது நிறைவேற்றப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த வேடர்களின் மகாநாட்டிற்குப்பின் அதில் எடுத்த முடிவைப்பற்றி, வேடர்களின் சட்டத்தரணிக்கு, ஜனாதிபதியின் செயலகத்திலிருந்து அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

❀ அரசாங்க வர்த்தமானியில் அறிவித்த மதுறுஓயா தேசியப் பூங்காவின் நிலப்பகுதியிலிருந்து, வேடர்களின் குடியிருப்புப் பகுதிகளாகிய கொத்தபக்கினியா, கேரகோடை, புலுகஹதென்ன, கந்தேகன்வில ஆகிய பகுதிகளையும் அடக்கிய ஏறக்குறைய 1500 ஏக்கர் நிலப்பரப்பின் எல்லைபிரித்து வரையறுக்கப்படும்.

❀ உயிரின் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேற்கூறியபகுதியை பாதுகாப்பான வாழ்விடமாகப் பிரகடனப்படுத்தல்.

❀ வேடுவரின் வன்னிய (வன்னியட்டோ) நாகரிக வாழ்க்கையைப் பாதுகாத்துப் பேணிவளர்ப்பதற்கு திட்டவட்டமான நடவடிக்கை எடுத்தல்.

❁ இவற்றைச் செயன்முறைப்படுத்த காட்டுப் பாதுகாப்பு இலாகா இயக்குனரின் தலைமையில், அரச மற்றும் அரசசார்பற்ற அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குழு அல்லது பொறுப்பு மன்றம் அமைத்தல் முதலியனவாகும்.

இப்படியாக வேடர் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சிபார்சு ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியுமானால், வேட இனத்தவரையும் அவர்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்கள் விரும்பிய பழைய நிலைக்கு திரும்பவும் உயர்த்திவிட முடியும். ஆனால் தங்கள் பரம்பரை வாழ்க்கை முறைப்படி வாழ விருப்பம் கொண்டு வாழ்க்கையை நடத்திய வேடர்கள், தங்கள் தனிமைப் படுத்தப்பட்ட சிறு கிராமங்களில் புகுத்தப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் சூழ்நிலைகளால் ஏற்பட்ட மாற்றங்களின்காலப் போக்கோடு, ஈடு செலுத்தி சமாளித்து வாழமுடியாமல் தவிப்பதைப் பார்க்க முடிகிறது. ஆகவே வலிமை வாய்ந்த காப்புறுதிப் பத்திர அடிப்படையில் மேற்கூறிய நோக்குகளை வலியுறுத்தி நடைமுறைப் படுத்தினாலொழிய, இத்தொன்முதற் குடியான வேடர்கள் துயர் மிகுந்த, மகிழ்ச்சியில்லாத வாழ்க்கை விதியை மேற்கொள்ளவேண்டி இருக்கும் நிலையில் விடப்படுவர்.

அண்மைக்கால இலங்கைச் சரித்திரத்தில், உத்தியோக பூர்வமான கவனக் குறைவும், திட்டங்களை ஏற்ற நோத்தில் நடைமுறைப் படுத்தாமல் காலந் தள்ளிப் போடும் போக்குமே, இவ்வேடுவ மக்கள் ஓரங்காட்டப்படுவதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. சீரில்லாத முறையில் திரும்பவும் எல்லைகளைக் குறிக்கத் தொடங்கியதால், இவர்கள் மேலும் கைவிடப்பட்ட நிலையிலிருக்கும் அதேநேரத்தில், இவர்களின் சொந்த பூர்வீக நிலப் பகுதிகளில் சடுதியாக எழுந்த அபிவித்தி முன்னேற்றங்களால் இவர்கள் தனிப்படுத்தப்பட்டு திக்குத்திசையில்லாப் பாதையில் விடப்பட்டனர். உத்தியோக பூர்வ அங்கீகாரம் பெறாமல் இருந்த வேடரின் உரிமைகளை, 1990இல் நடந்த வேடர் மாநாட்டின் பின்பே முறைப்படி அங்கீகரித்தனர்.

இனம், ஒழுக்கத்தத்துவம் என்ற அடிப்படையிலேயே இந்தப் பழங்குடி மக்களின் வாழ்விடங்களின் எல்லைகள் குறிக்கப்பட்டன என்று குறை காணப்பட்டது. தங்கள் வாழ்விடங்களிலிருந்து சம்பிரதாய ரீதியான பரம்பரை விவேகத்தைப் பெறவும், தங்கள் வாழ்க்கை முறைப்படியும், வருவாய்க்கேற்ற வழியிலும், சமயபூசைகள், சடங்கு முறை நடவடிக்கைகளைத் தங்கள் விருப்பப்படி நடத்தவும், சுற்றுப்புறச் சூழ்நிலைக்கேற்ப இவர்கள் பழக்கப்பட்டுள்ளனர்.

ஈஜனி லிண்டன் என்பவர் 1991இல் வேடர்களைப் பற்றி எழுதியது:-

இந்நாட்டுத் தொன்முதற்குடிகளின் பிரதேசங்களில், அபிவிருத்தியின் பேரில் அத்துமீறி நுழைவதால், அவர்களுடைய நிலங்கள் அவர்களுக்கே (இல்லாமல்) கிடைக்காமல் போவதுமல்லாமல், அவர்களைப் பற்றிய (அறிவே) பெயரே மறைந்து விடும் என்றார். வேடரின் நிலங்களில் மக்களை, 'திருப்ப அமர்வு' என்ற குடியேற்றம் செய்ததால், தொன்மையான காலந்தொட்டே நிலைத்து நின்ற வேட மொழி அங்கு அழிந்து போவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. சில சடங்கு முறை, சமய நடவடிக்கை முதலியன குடியேறிய இடங்களுக்கும் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப தங்கள் பரம்பரைச் சூழலோடு பிணைக்கப்பட்டவையாயிருக்கின்றன. என்றாலும் மற்ற இடங்களில் இவர்கள் குடியமர்த்தப் பட்டதால் கலாசார மாற்றத்தின் அதிர்ச்சி அல்லது உளநூல் சார்ந்த உள்மனப் போராட்டம் ஏற்படக்கூடும் எனக் கூறப்படுகிறது.

## விட்டுக்கொடுக்கும் பண்பு மனப்பான்மை

வேடர்கள் தங்கள் சம்பிரதாயப்படி வாழ வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டபின் அவர்களுக்கு நன்றாகப் பழக்கப்பட்ட சூழ்நிலையிலுள்ள ஹென்னனிகலையில் அவர்களைக் குடியமர்த்த மகாவலி நிபுணர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் சில வேடர் அங்கு பொருத்தமான வாழ்க்கையை மாற்றி அமைக்க முடியாமல் இருந்தனர். அவர்களின் வேட்டையாடும் வாழ்க்கை, பொருட்கள் சேகரிக்கும் சூழ்நிலை முதலியன சோர்வுற்று மறைவதோடு, அவர்களின் சமூக நாகரிக வாழ்க்கையும் படிப்படியாகத் தேய்வுறுகிறது. மேற்கூறிய திட்டங்களால் வேடர் வாழ்க்கை முறைகளில் சில மாற்றங்கள் ஏற்படும் என்பது உண்மையாயினும், அவர்கள் பரம்பரையாக வாழ்ந்த பிழைப்பு வளங்கள் குறைந்து கொண்டே போகும் பொழுது, மேற்கூறிய சில மாற்றங்கள், ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வந்த அவர்களின் பழைய வழக்கமான வாழ்க்கை முறைகளை மேவமுடியாது. இவற்றை எல்லாம் எண்ணிப்பார்க்கும் பொழுது, வேடர்களைத் தங்கள் விருப்பப்படி வாழவிட்டுக் கொடுக்கும் பண்பே சிறந்த மதிநுட்பமாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஜவஹர்லால் நேரு சொன்ன வார்த்தைகள் குறிப்பிடத்தக்கவை:-

''படிப்படியாக மாற்றங்கள் வரவிட வேண்டும். அதுவும் வேடஇனத்தவர் தாங்களாகவே தங்கள் மாற்று வாழ்க்கை வழிகளைத் தேர்ந்தெடுக்க விட்டுவிட வேண்டும்''.

# மனநோய் எந்தக் குடும்பத்திலும் ஏற்படும்... இந்த நோய்க்குட்படாமல் தடுத்துக் கொள்ளும் சக்தியுடையவர் ஒருவரும் இல்லை. இந்நோய்க்கு அழுத்தம், அழுக்கம் தனி இயல்பான காரணங்களல்ல

செறிஓமி பொற்ரீஜ்

(சண்டே டைம்ஸ் — 17.10.93)

"நீண்ட வாழ்வுக்கு உள உறுதியையும், உடல் உறுதியையும் அளிக்க ஆரோக்கிய வாழ்வுமுறை ஒரு காரணக்கூறாகும்." "ஆரோக்கியமனம், ஆரோக்கிய உடலைக் கொடுக்கும்." ஒருவரின் தசைநார்கள் விரிந்து காணப்படுவதனால் அவருடைய மனம் ஆரோக்கிய நிலையில் உள்ளது எனக்கருதலாகாது. சனிற்றி(SANITY) என்ற சொற்பதம் சனோ(SANO) என்ற இலத்தீன் சொற்பதத்திலிருந்து தோன்றியது. இவ்வாறு இங்கிலாந்தின் மனநோயாளர் மருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரான பேராசிரியர் அன்றூ சிம்ஸ் (ANDREW SIMS) அவர்கள், உலக மனநோய் மருத்துவ சுகாதார தினத்தன்று (ஒக்ரோபர் 9ம் தேதி) சகாநாய சன சமூக மனநோயாளர் மருத்துவ சுகாதார நிலையத்தில், உளநோயாளர்களுக்கும், சமூகத் தொண்டர்களுக்கும் மத்தியில் சொற்பொழி வாற்றிக் கொண்டிருந்தார்.

> *காலையில் இருந்து மாலை வரைக்கும் திருப்திகரமாக கடமைகள் முடிவுற்றதும், இரவில் நல்ல தூக்கம் ஏற்படுகிறது. இதனால் சில சமயங்களில் உணர்வுகளும், மன எழுச்சியும் உண்டாகின்றன. கவலைப்படுதலும், மகிழ்ச்சியடைதலும் மனிதனின் இயல்புநிலைக் கூறுகளாகும். ஆனால் நேற்றைய நாளை மறந்துவிட்டு, அடுத்தநாள் மகிழவுடன் விழித்தெழும் உள உறுதியுடையோர் எத்தனைபேர்?*

"மனநேயாளாரர்கள்" என அழைக்கப்படுவோர் மீது கேலியாகத் திணித்து அதனை சித்தரித்துத் தொலைக் காட்சியில் நிகழ்ச்சிநிரலாகக் காண்பிக்கப்படுகின்றது. பாலியல் சம்பந்தப்பட்டோர், இளவயதினர், வயதுமுதிர்ந்தோர் சொற்களை மதியாதோர், இவர்களுக்கு எதிராகப்பிரச்சார நடவடிக்கைகளில் பிரித்தானிய சமூகத்தினர் ஈடுபடுகிறார்கள். ஆனால், நிலைத்த உளநினைவு மாறாட்டத்தால் பீடிக்கப்பட்டு வருந்தும் மன நோயாளிகளின் வருத்தத்தைப் போக்குவதற்கு யார் ஒருவரேனும் இதுகாறும் முன்வரவில்லை.

இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், எவ்வளவு தொகையாகப் பெறும் நோபல் பரிசுகளைக் காட்டிலும், முக்கியமாக வயது முதிர்ந்தோருக்குக் கிடைக்கும் சிகிச்சை ஒரு பெரிய மகத்தான சாதனையென தாம் உணர்வதாக பேராசிரியர் சிம்ஸ் குறிப்பிட்டார்.

இந்த மனநோயைப்பற்றியும் இதற்குரிய சிறப்பியல்புக் கூறுகள் பற்றியும் அதிகமான பழங்கதைகளும், தப்பெண்ணங்களும் உள்ளன. இவைகள் அறியாமையினால் தோன்றும் அச்சத்தால் ஏற்படுபவையாகும். இந்நோயினைப்பற்றி விளக்கமான, விதிமுறைக் கட்டுப்பாடான, நல்ல பல தகவல்கள் இல்லை.

ஒருவர் தேகசுகயீனமுற்று குணமடைவது போன்று, மனச்சோர்வுடையோர் அல்லது நீண்டநாள் நோய்வாய்ப்பட்டோர் குணமடையலாம் இதனை நாங்கள் மக்களுக்குத் தெரிவித்தல்வேண்டும். "எல்லா மனநோயாளர்களும், ஆபத்தானவர்கள், இவர்களை ஊர்ஜிதப்படுத்தமுடியாது. இவர்கள் சமூகத்திலிருந்தும் விலக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படல் வேண்டும். பழைய புராணக் கதைகளைத் தள்ளிவிட வேண்டும்." இவ்வாறு சிறிலங்கா மனநோயாளர் சுகாதார ஆலோசனைச்சபை (S.C.M.H) வெளியிட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஏராளமான மன நோயாளர்கள் சமூகத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும். இவர்கள் அச்சமுடையவர்கள். இவர்கள் சமூகத்தில் ஒரு வேலையைச் செய்வதற்குரிய திடநம்பிக்கையும், உறுதியும் அற்றவர்கள்" என்பது மனநோயாளருக்குரிய மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயமாகும். இது ஒரு கைநூலில் வெளிபிடப்பட்டுள்ளது. மறுபுறத்தில் நோக்கும்பொழுது வீட்டிலிருந்துகொண்டு பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயம் பற்றிப் பேசுபவர்களை மனநோயாளர் எனத்தண்டிப்பதா? மக்கள் கொண்டுள்ள மனநோயைப்பற்றிய தப்பெண்ணங்களையும் மனநோயாளர்களுடைய பிள்ளைகள் எல்லோரும் மனநோய்வாய்ப்பட்டிருப்பார்கள் எனத் துண்டுப்பிரசுரம் ஒன்றினால் சகாநாய வெளியிட்டிருந்தது.

ஒரு குடும்பத்தில் ஒருவர் கடுமையான மனநோய்வாய்ப்பட்டிருந்ததால், முக்கியமாக அக்குடும்

பதிதினைச் சார்ந்த சிலர் பரம்பரையாக இந்நோய் வாய்ப்படலாம் என அத்துண்டுப்பிரசுரம் கூறுகின்றது. மனநோயாளியின் ஒவ்வொரு பிள்ளையும் மனநோய்வாய்ப்படமாட்டார்கள்.

பரம்பரையாக இந்நோய் ஏற்படுகின்றது என்பது ஒரு காரணி. இதை ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டும். இவ்வாறு பேராசிரியர் சிம்ஸ் உறுதிப்படுத்தினார். ''அநேகமாக இந்த மனநோய் சாதாரணமான வாழ்க்கையினை அடிக்கடி தற்காலிகமாகத் தகர்த்துக்கொண்டிருக்கும். தகுந்த சிகிச்சையாலும், புனர்நிர்மானத்தாலும், இந்நோயினை சாதாரண வாழ்க்கைக்கு மாற்றிவிடலாம்.'' இவ்வாறு அத்துண்டுட்பிரசுரம் கூறுகின்றது.

## மனநோய்

மனநோய் ஒருவரின் புத்திக்கூர்மையையும், அவரினது விவேகத்தையும், மற்றைய அக்கமுறையான விசேச குணத்தையும் அழித்துவிடும் என ஒரு பொய்யான எண்ணத்தைத் தருகின்றது. மனநோயில் இருந்து குணமடைபவருக்கு முன்னரிலும் பார்க்கக் குறைந்த நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. இதனால், மனநோயாளி தனது இயற்கையான புத்திக்கூர்மையையும் மிகுந்த ஆற்றலையும், இழந்துள்ளான் எனக் கருதலாகாது. உலகப் பிரசித்தி பெற்ற கலைஞர்களும், இசைவாளர்களும் இம்மனநோய்வாய் பட்டு வருந்தினர். பொருத்தமற்ற விவாகத்தினாலும், உலகளாவிய விவாகரத்தினாலும். தெளிந்த தொடர்பு அற்ற குடும்பவாக்கையாலும், கெட்ட செயல்கள் ஏற்பட்டு சமூகத்தில் பிரச்சனைகள் தோன்றுகின்றன. ''உறவுமுறைகள் தொடர்ந்து நீடித்துநிற்காததால் ஏராளமான மனமுறிவுகள் ஏற்படுகின்றன. விவாகசம்பந்தமான வ்யாதிகளைக் குணப்படுத்துவதிலும், காளைப்பருவம் எய்தியோருக்கு பொருத்தமான விவாகத்தை ஏற்படுத்துவதிலும், நீண்ட உறவுமுறைத் தொடர்புகளை கல்வியறிவால் போதிப்பதிலும், பிரித்தானியாவிலுள்ள நாங்கள் இப்பொழுது இவைகளை கருத்தில் கொண்டு, நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றோம்.'' இவ்வாறு பேராசிரியர் சிம்ஸ் விளக்கினார்.

இன்னும் ஒரு மனநோயாளர் மற்றவர்களுடன் நெருங்கிப் பழகுவதனால் பெண்ணோ அல்லது ஆணோ இந்த நோயினின்றும் குணமடையலாம். ''நரம்புத்தளர்ச்சி உடையோருக்கு வெறும் புத்திமதி கூறுவதில் பயனில்லை.'' ''மனச்சோர்வடைதல் உமது குற்றம் அதனால் ஒருவன் குற்றவாளியாகின்றான்'' இவ்வாறு பேராசிரியர் சிம்ஸ் தமது கருத்தை விளக்குகிறார். இதற்கு உதாரணமாக ஒரு நிறுவனத்தின் இயக்குனர் தான் செய்த வேலைகள் மிகவும் குறைவாக இருந்ததால், அவர் மனச்சோர்வுற்று ஒரு குற்றவாளி என உணர்ந்து அத்தொழிலிலிருந்து விலகிவிட்டார். அவர் இவ்வாறு மனச்சோர்வுற்று குற்றவாளி என உணராது, சிகிச்சை பெற்றிருந்தால் கடமையிலிருந்திருப்பார். புலவர் வில்லியம் கூப்பர் கடுமையான மனச்சோர்வடைந்தது போன்று, உண்மையான இறைபக்தியுடையோர், மன்னிக்கமுடியாத பாவச்செயல்களுக்கு பயந்து மனச்சோர்வடைகின்றனர்.

அழுத்தம், அடிக்கடி அதிக வேலைகள் செய்வதனால், அல்லது சலிப்புத்தன்மையால், சோர்வு உணர்ச்சியால், ஏற்படுகின்றது. இன்னும் அழுத்தம் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து அச்சமடைவதாலும் உண்டாகின்றது. கடமையில் தவறுதலாலும் உண்டாகிறது.

## சாதாரண மனக்கோளாறுகள்

அநேகமாக நூற்றுக்கு ஒரு வீதமான சிறீலங்காவில் பெரியளவில் மனக்கோளாறு காணப்பட்டுள்ளது. 12.5 வீதத்திற்கு சிறிய அளவில் மனக்கோளாறால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த மனக்கோளாறு உடையோர் ஆரம்பத்திலே தகுந்த சிகிச்சை பெறுவார்களாயின், சாதாரண வாழ்க்கைக்கு இவர்களை மாற்றிவிடலாம்.

வாழ்நாட்களின் செயற்பாடுகளில் ஊக்கமில்லாது இருத்தல், மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள், அவர்கள் செய்யும் வேலைகளில் காணப்படும் மாற்றங்கள் அவர்கள் நடமாடும் சூழல், அவர்களின் நடத்தையிலுள்ள வித்தியாசங்கள், கற்பனையில் ஈடுபட்டு அதன்மேல் ஆசைப்படுதல், ஐயுறுதல் இவைகள் அனைத்தும் மனநோய்க்குரிய வழமையான அறிகுறிகளாகும். இன்னும் இவர்கள் கேட்கப்படாத ஓசையைக் கேட்பதுபோலவும், இல்லாத பொருட்களை காண்பதாகவும், நடந்துகொள்வார்கள். இவர்களின் உடம்பில் ஏற்படும் தசைநார் நோவு, தலையிடி, தூக்கமின்மை இவைகள் இந்த நோய்க்கு அடிப்படையான காரணிகள் அல்ல.

''இவ்வாறான அறிகுறிகள் நீடிக்குமானால், கடுமையான மூளைக்கோளாறு எனக்கருதல் வேண்டும். அநேகமான மக்கள் இந்த அறிகுறிகளில் சிலவற்றை, அழுத்தம் ஏற்படுகின்ற காலங்களில் தற்காலிகமாகக் கொண்டுள்ளனர். இவைகளிலிருந்தும் கூடிய விரைவில் சுகமடையலாம்.'' இவ்வாறு சகாநாய துண்டுப்பிரசுரம் கூறுகின்றது.

மற்றவர்களுடன் பழகுவதற்கு முன்னர், எத்தனை சிறிலங்கர்கள், தங்கள் நினைவுகளையும், உறவுமுறைத் தொடர்புகளையும், கையாள சிந்திப்பதற்கு தாமதிக்கின்றார்களா? காலையிலிருந்து, மலைவரைக்கும் திருப்திகரமாக கடமைகள் முடிவுற்றதும், நல்ல தூக்கம் இரவில் ஏற்படுகின்றது. இதனால் சிலசமயங்களில் உணர்வுகளும் மனஎழுச்சியும் உண்டாகின்றன. கவலைப்படுதலும், மகிழ்ச்சியடைதலும், மனிதனின் இயல்புநிலைக் கூறுகளாகும். ஆனால் நோயை நாளை மறந்துவிட்டு, அடுத்தநாள் மகிழ்வுடன் விழித்தெழும் உள உறுதியுடையோர் எத்தனைபேர்?

# ஐக்கியநாட்டுப் படையினரை பணயக் கைதிகளாக வைத்திருந்த திரு. அயிடீட் அவர்கள்

(டெயிலி நியூஸ் — 23.11.93)

எந்த விதமான அவமதிப்பையும் பொறுத்துக் கொள்ளாத ஒருவராகத் திரு. அயிடீட் அவர்கள் விளங்குகின்றார். சோமாலியாவின் சனாதிபதியாக தான் வருவதற்கு தடையாக இருந்ததன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை தனக்கு அவமானத்தை ஏற் படுத்திவிட்டதாக உணர்ந்த திரு. முகமது பாரா அயிடீட் (MOHAMED FARAH AI DEED) அவர் கள், சீர்குலைந்திருந்த மொகதிசு (MOHA DISHU) நகரில் நிலைகொண்டிருந்த ஐக்கிய நாட்டுப்படை யினரை எதிர்த்துப் போர்புரிந்தார்.

சர்வாதிகாரியான திரு. முகமது சியாத் பாரே (MOHAMED SAID BORRE) அவர்களைப் பணிய வைத்தவரும், 29,000 பேரைக்கொண்ட ஐக்கிய நாட்டுப் படையினரை அவர்களது விடுதிகளிலிருந்து வெளியேறாதவாறு தடுத்து வைத்திருந்த போர் வீரர்களைக் கொண்ட இவரை, இவரின் ஆதர வாளர்கள் தங்கள் பாதுகாவலராக வும், செயல் வீர னாகவும் போற்று கின்றனர்.

> *வியட்னாமில் நடைபெற்ற யுத்தத்தின்போது ஏற்பட்ட இழப்புக்களுக்குப் பின் மிகவும் பாரிய இழப்பை சந்திக்க வேண்டியிருந்ததும், அக்டோ பர் 3-ஆம் திகதி இடம் பெற்றதுமான சம்பவத் தில் 18 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்ட பின் தனது நிலைப்பாட்டை மாற்றிய அமெ ரிக்கா திரு. அயிடீட் அவர்களைத் தேடும் முயற் சியைக் கைவிட்டது.*

கொடுங்கோன்மை ஆட்சி நிலவிய அந் நாட்டின் சட்டத் தையும் ஒழுங்கை யும் நிலைநாட்டச் சென்ற ஐக்கிய நாட்டுப் படையின ரைக் கொன்ற கரந்தடிப்போர் வீரர்களுக்குத் தலை மைதாங்கும் இவரை, ஐக்கிய நாடுகள் சபை பயங்கர வாதியாகவும், குற்றவாளியாகவும் கருதுகின்றது.

''எந்தவொரு காலத்திலும் இந்தப் பயங்கர வாதியுடன் நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபடப் போவதில்லை'' என அமெரிக்கக் கடற்படைத் தள பதியாகவிருந்து ஓய்வுபெற்றவரும், மொகாதிசு நகரிலுள்ள ஐக்கிய நாட்டுச் சபையின் சிறப்புப் பிரதிநிதியாக இருப்பவருமான அட்மிரல் ஜெனதான் ஹோவ் (ADMIRAL JANATHN HOWF) அவர்கள் ஜூலை மாதத்தில் கூறியிருந்தார்.

வியட்னாமில் நடைபெற்ற யுத்தத்தின்போது ஏற்பட்ட இழப்புக்களுக்குப் பின் மிகவும் பாரிய இழப்பை சந்திக்க வேண்டியிருந்ததும், அக்டோபர் 3 ம் திகதி இடம்பெற்றதுமான சம்பவத்தில் 18 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டபின் தனது நிலைப்பாட்டை மாற்றிய அமெரிக்கா திரு. அயி டீட் அவர்களைத் தேடும் முயற்சியைக் கைவிட்டது.

அமெரிக்காவைப் பின்பற்றி ஐக்கிய நாடுகள் சபையும் திரு. அயிடீட் அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியைக் கைவிட்டது. இதற்கிணங்க திரு. அயிடீட் அவர்களைத் தேடும் முயற்சியை நிறுத்திய பாதுகாப்புச் சபை, திரு. அயிடீட் அவர் களே பொறுப்பாகவிருந்ததாக இதுவரை கருதப் பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் 70 அமைதிகாக் கும் படையினரின் இறப்பைப்பற்றி விசாரணை செய்வதற்காக விசாரணைக் குழுவொன்றை அமைத்தது.

மொகதிசு நகரில் ஐக்கிய நாட்டுப் படையின ரால் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக் கப்பட்டிருக்கும் 40 பேர் சம்பந்தமாக நடவடிக் கையை மேற்கொள்ளும்படியும் பாதுகாப்புச்சபை அதன் செயலாளர் நாயகம் பூட்ராஸ் காலி அவர்களைக் கோரியுள்ளது. இந்த 40 பேரில் திரு. அயிடீட் அவர் களின் உதவியா ளர்களான மூவர் விடுதலை செய்யப் படலாம்.

பாகிஸ்தானைச் சேர்ந்த 24 அமைதி காக்கும் படை யினரை ஜூன் மாதம் 5 திகதி கொல்லச் சதித் திட்டம் வகுத்தவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வரைக் கைதுசெய்வதற்கு உதவுவோருக்கு 25,000 டொலர்கள் வெகுமதியாக வழங்கப்படும் என மொகதிசு நகரில் திரு. அயிடீட் அவர்களின் கரந்தடி வீரர்கள் ஏற்படுத்திய அழிவால் மனமுடைந்த ஐக் கிய நாடுகள் சபை அறிவித்தது.

திரு. அயிடீட் அவர்களின் இனமான கபீர்கெடிர் (CABERGEDIR) இனத்தைச்சேர்ந்த அவரின் ஆதர வாளர்களும், அவர் தலைமையிலுள்ள சோமாலிய தேசிய ஒற்றுமை முன்னணியினரும் (SOMALI NATIONAL ALLIANCE S. N. A. ORGANIZ- ATION) இதற்கு எதிர்நடவடிக்கையாக ''கோவ் விலங்கு'' என தங்களால் அழைக்கப்படும் மனித ரைக் கைப்பற்ற உதவுவோருக்கு தாங்கள் சன் மானம் வழங்கப்போவதாக அறிவித்தனர்.

இந்த விடயத்திதில் கொள்கை அளவில் மாற் றம் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும், அமைதி காக்கும் படையினரை கொல்வதற்கு காரணமாக இருந்தவர்கள் அதற்குப் பதில் சொல்லியாகவேண்

PUBLIC LIBRARY

டும் என தான் இப்பொழுதும் நம்புவதாக திரு. கோவ் அவர்கள் செய்தியாளர்களுக்கு செவ்வாயன்று கூறியிருந்தார்.

திரு. சியாட் பாரே அவர்களை வீழ்ச்சியுறச் செய்வதற்காக நடாத்தப்பட்ட போர் காரணமாக ஏற்பட்ட பஞ்சத்தினால் சுமார் 300,000 பேரை இழந்த சோமாலியாவை மீண்டும் கட்டியெழுப்ப மேற்கொண்ட முயற்சியில் அயிடீட் அவர்களையும் இணைத்துச் செல்ல ஐக்கிய நாடுகள் சபை முயன்ற வேளையில் திரு. அயிடீட் அவர்களுக்கிடையேயும், ஐக்கிய நாடுகள் சபைக்கிடையேயும் ஏற்பட்ட பகையுணர்ச்சி பிளவை ஏற்படுத்தியுள்ளது.

திரு. அயிடீட் அவர்களின் படையினரும், அவருடன் இணைந்திருந்த அவரின் இனத்தைச் சார்ந்த கரந்தடி வீரர்களும் 1991 ம் ஆண்டிலிருந்து 1992ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதியில் நடாத்தியதும், சோமாலியாவை இருள் சூழ்ந்த காலத்திற்கு இட்டுச் சென்றதுமான இரண்டு போரின்போது திரு. சியாட் பாரே அவர்களைத் தோற்கடித்தனர்.

தனது ஆதரவாளர்களால் ''தளபதி'' என அழைக்கப்படும் திரு. அயிடீட் அவர்கள், திரு. சியாட் பாரே அவர்கள் வகித்த சனாதிபதி பதவியைத் தான் வகிப்பதற்கான வாய்ப்பு தனக்கு கிட்டியிருப்பதாக எண்ணியிருந்த வேளையில், அப்கால் மரபினரின் தலைவரான அலி மாடி முகமது அவர்களுடன் இணைந்துகொண்ட அவருக்கு எதிரான இனத்தவர்கள் அதற்குத் தடையாகவிருந்தனர்.

நகரம் இயங்கமுடியாத நிலை ஏற்படும் வரை இரு பகுதியினரின் படையினரும் ஒருவரை மற்றவர் எதிர்த்துப் போரில் ஈடுபட்டதன் காரணமாக இத்தாலி நகரைப் போன்று மிகவும் எழிலுடன் விளங்கிய அந்தத் தலைநகரம் மண்மேடாக்கப்பட்டதுடன் அங்கு வாழும் மக்களும் மற்றவர்களால் வழங்கப்படும் உணவில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

தனது நாட்டில் நிலவும் பஞ்சம் மீது ஐக்கிய நாடுகள் சபை கொண்ட கவலைதான், அதிகாரத்தைப் பெறத் தடையாகவிருக்கும் எனச் சந்தேகமுற்ற திரு. அயிடீட் அவர்கள், தலைநகரிலுள்ள மக்களின் துயர்துடைக்க வழங்க இருக்கும் பொருட்களை கொள்ளையடிக்கும் தனது ஆட்களைத் தடுப்பதற்கு ஐக்கிய நாட்டுச் சபையினால் 1992 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட பாகிஸ்தானிய அமைதி காக்கும் படை அந்தப் பணியை மேற்கொள்ளாதவாறு தடுப்பதில் வெற்றி கண்டார்.

நாட்டின் இறமையைக் காப்பாற்றுவதற்காகவே தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகக் கூறிய இவர், அந்தப் பிராந்தியத்தில் இஸ்லாம் மதத்தை அழிக்கவும், நிலநெய் வளங்களைக் கொண்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஐக்கிய நாடுகள் சபை மூலம் பொம்மை அரசாங்கம் ஒன்றை உருவாக்கவும் அமெரிக்கா திட்டமிடுவதாகக் குற்றஞ்சாட்டினார்.

இதனால் ஆத்திரமுற்ற அமெரிக்கா, பஞ்சத்தால் இன்னலுறும் மக்களுக்கு விநியோகிக்கும் பொருட்களை கொள்ளை அடிப்பதைத் தடுப்பதற்கும், பஞ்சத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் 30,000 துருப்பினரை டிசம்பர் மாதத்தில் அனுப்பியிருந்ததுடன் திரு. அயிடீட் அவர்களை திரு. அலி மாடி அவர்களுடன் உறவை ஏற்படுத்தவும் நிர்ப்பந்தித்தது.

கூட்டாட்சி முறையான பாரளுமன்றம் ஒன்றை உருவாக்க தேர்தல்களை நடாத்துதல், பெருந்தொகையான நிதியை நாட்டின் அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபை வழங்குதல், படை வலிமையைக் குறைத்தல் ஆகிய விடயங்களைக் கொண்டதும், ஐக்கிய நாடுகள் சபையால் முன்வைக்கப்பட்டதுமான சமாதானத்திட்டத்தில் திரு. அயிடீட் அவர்கள் ஏப்ரல் மாதத்தில் கைச்சாதிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்காவால் கையளிக்கப்பட்ட பாகிஸ்தானிய அமைதிகாக்கும் படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் மறைந்திருந்து தாக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சமாதானத்திட்டம் ஜுன் மாதம் 5ம் திகதி கைவிடப்பட்டது. இந்தத் தாக்குதலின் போது 24 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்கள் உருச்சிதைக்கப்பட்டிருந்தன.

இந்தக் கொலைக்குத் திரு. அயிடீட் அவர்களே பொறுப்பு என ஐக்கிய நாடுகள் சபை அவர் மீது குற்றம் சுமத்தியது. தங்கள் தலைவரான அயிடீட் அவர்களுக்கு நெருக்கதலைக் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட முயற்சி காரணமாகவும், ஐக்கிய நாட்டுப்படையின் கடும் போக்குக் காரணமாகவும், வெறுப்புற்ற சோமாலிய மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளதாக இந்த விடயம் பற்றி திரு. அயிடீட் அவர்களின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பெலெற் குவென் (BELAT HUEN) என்ற மத்திய பட்டணத்தில் 1936-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி பிறந்த திரு. முகமது பரா ஹசன் (MOHAMED FRAH HASSAN) அவர்கள், ஒட்டகங்களை மேய்ப்பவரான தனது தந்தையின் பெயரை, தனது செல்லப் பெயராக ஆக்கிக் கொண்டார். ஐக்கிய நாடுகள் சபையின் ஆணைக்குழு அமைய சோமாலியாவை ஆண்டுவந்த இத்தாலியில் 1950-ஆம் ஆண்டுகளில் அவர் தனது இராணுவப் பயிற்சியைப் பெற்றார்.

1960-ம் ஆண்டில் நாடு சுதந்திரம் அடைவதைத் தொடர்ந்து புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவத்தில் மேலாளராகப் பணியேற்ற இவர் பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தை மேஜர் ஜெனரல் முகமது சியாம் பாரே அவர்கள் கவிழ்த்த இருவாரங்களுக்குப்பின் சியாட் பாரே அவர்களுடைய அரசாங்கத்தைக் கவிழ்க்க சதித்திட்டம் வகுத்ததாக சந்தேகிக்கப்பட்டு 1969-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ஆம் திகதி சிறையிலிடும்வரை அப்பதவியில் நீடித்திருந்தார்.

1975-ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம்வரை அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். எத்தியோப்பியாவின் ஒருபகுதியாகவும், சோமாலி இனத்தவர்களைக் கொண்டதுமான ஒகடன் (OGADAN) மீது 1977-ம் ஆண்டில் சோமாலியா படையெடுத்த போது, சியாட் பாரோ அவர்கள், திரு. அயிடீட் அவர்களை மீண்டும் இராணுவ ஆலோசகராக இணைத்துக்கொண்டார்.

இந்தியா, சிங்கப்பூர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் தூதுவராக 1984-ம் ஆண்டில் பதவியேற்கும்வரை திரு. அயிடீட் அவர்கள் இராணுவத்தில் கடமையாற்றினார். திரு. சியாட் பாரே அவர்களின் ஆட்சியிலிருந்த சோமாலியா 1988-ஆம் ஆண்டில் பிளவுபட ஆரம்பித்ததை தொடர்ந்து சோமாலியாவுக்கு அழைக்கப்பட்ட இவர் அங்கிருந்து தப்பியோடி சர்வாதிகாரி சியாட் பாரே அவர்களைப் பதவியிலிருந்து கவிழ்த்து ஐக்கிய சோமாலியக் காங்கிரசை உருவாக்க உதவினார்.

# வலுவிழந்த குழந்தையைப் புரிந்து கொள்ளுதல்

(டெயிலி நியூஸ் - பத்திரிகை- 01- 10- 1993)

ஜே. பி. பதிரான,
(வலுவிழந்த் குழந்தைகளுக்கான,
உலகச் சபை"யின், தென் கிழக்காசியப்
பிராந்தியத்தின் செயலாளர்),

உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் வலுவிழந்த குழந்தைகளில் உளத்திறக் கூறுகளில் குறைபாடுள்ள குழந்தைகளின் நலன்காக்கும் பணியும், கண்பார்வையற்ற மற்றும் காதுகேளாத குழந்தைகளுக்குக் கட்டாயமாகக் கல்வியை ஊட்டுதலும், முடமாக்கப்பட்ட குழந்தைகளுக்குக் கூடுதலான வசதிகளை ஏற்படுத்துவதுமான நலன் காக்கும் பணிகள் அண்மைக் காலத்தில் மக்களுக்குக் கிடைக்கின்ற போதிலும், அனாதைக் குழந்தைகள், தாங்கள் வாழும் சூழல் காரணமாகத் துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளவயதிலேயே குற்றச் செயல்களில் ஈடுபட்ட இளங்குற்றவாளிகள் ஆகியோரை பாதுகாக்கும் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன், முடமாக்கப்பட்ட குழந்தைகளின் நலன்காக்கும் பணியை ஒப்பிடுகையில், அதன் முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதைக் காணக் கூடியதாக விருக்கின்றது. தனது அழியாப் புகழ் பெற்ற "ஏ கிறிஸ்மஸ் கரோல்" என்ற கதை மூலம் திரு. சால்ஸ் டிக்கின்ஸ் அவர்கள் சித்தரித்துக் காட்டியுள்ள ரைனிரிம் போன்ற முடமாக்கப்பட்ட குழந்தைகள் படும் அல்லல்களை நினைத்துப் பார்ப்பதற்கும் அவர்களின் துன்பங்களைத் துடைக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்துலக குழந்தைகள் தினம் மக்களைச் சிந்திக்க வைக்கின்றது.

குழந்தை ஒன்றுக்கு புரிந்துகொள்ளும் ஆற்றலை உருவாக்குவது மிகவும் கடினமான விடயமாகவிருக்கின்ற அதேவேளையில், உடல் ரீதியாக வலுவிழந்துள்ள குழந்தையொன்றைப் புரிந்து கொள்வது முக்கியமானதாக இருப்பதுடன், கடினமாகவும் இருக்கின்றது. குழந்தையொன்றின் நலனில் அக்கறையுள்ள பெற்றோர், மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அந்தக் குழந்தைக்குள்ள குறைபாட்டைத் தங்களால்இயன்றளவு தீர்த்துவைப்பதற்கு ஆவல் கொண்டிருப்பதன் காரணமாக அவர்கள் அந்தக் குறைபாட்டிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவதால், இந்தக்கஷ்டம் ஏற்படுகின்றது. நாளொன்றுக்குப் பல மணித்தியாலங்களை இந்தக் குறைபாட்டைக் கவனிப்பதற்காகவே செலவிடவேண்டியுள்ளதால் ஒருவரின்குறைபாடே அவரின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்றது.

குழந்தை ஒன்றுக்கு புரிந்து கொள்ளும் ஆற்றலை உருவாக்குவது மிகவும் கடினமான விடயமாகவிருக்கின்ற அதேவேளையில், உடல் ரீதியாக வலுவிழந்துள்ள குழந்தையொன்றைப் புரிந்து கொள்வது முக்கியமானதாக இருப்பதுடன், கடினமாகவும் இருக்கின்றது. குழந்தையொன்றின் நலனில் அக்கறையுள்ள பெற்றோர், மருத்துவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் அந்தக் குழந்தைக்குள்ள குறைபாட்டைத் தங்களால் இயன்றளவு தீர்த்து வைப்பதற்கு ஆவல் கொண்டிருப்பதன் காரணமாக அவர்கள் அந்தக் குறைபாட்டிலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துவதால், இந்தக் கஷ்டம் ஏற்படுகின்றது. நாளொன்றுக்குப் பல மணித்தியாலங்களை இந்தக் குறைபாட்டைக் கவனிப்பதற்காகவே செலவிட வேண்டியுள்ளதால் ஒருவரின் குறைபாடே அவரின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்றது.

மேலும் குழந்தையொன்றைப் பார்ப்பதற்கு, அதன் தந்தையின் நண்பர்கள் வரும்போது அல்லது அதன் பெற்றோர்கள் தங்கள் நண்பர்களுடன் அந்தக் குழந்தையைப் பற்றிப் பேசும்போது, எவ்வளவு தூரத்திற்கு அந்தக் குழந்தையால் நடக்க முடியும், எவ்வளவு நேரத்திற்கு அது தன் கைகளை உபயோகிக்க முடியும். போன்ற உரையாடல்கள் இடம்பெறுகின்றதேயல்லாது, முழு மனிதனாக அந்தக்குழந்தை வளர்க்க வேண்டியதுபற்றிப் பேசப்படுவதில்லை.

## சுதந்திரம்

குழந்தை தன் குறைபாட்டிலிருந்து விடுபடுவதற்கு எங்களால் இயன்ற உதவியை அளிக்க வேண்டியது அவசியமாகிலும், அந்தக் குழந்தையே நாளைய மனிதன் என்ற அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. உடல் ரீதியாக வலுவிழந்த குழந்தையைப் புரிந்து கொள்வது என்பது அது குழந்தைப் பராயத்தில் இருக்கின்றதென்பதைப் புரிந்து கொள்வதும், அது முழு மனிதனாக வளர்ச்சியடையத் தடையாகவிருக்கும் அதன் உடல் ரீதியான குறைபாடுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு நடந்து கொள்வதுமாகும். குழந்தை

குறைபாட்டுடன் பிறந்தாலென்ன, அல்லது குழந்தைப் பராயத்தில் அந்தக் குறைபாடு தோன்றினாலென்ன, உடல் ரீதியான செயலாற்றலைக் கடுமையாக அல்லது சாதாரணமாக அந்தக் குறைபாடு பாதிப்பதாக இருந்தாலென்ன, மூளை தாக்கப்பட்டு உண்டாகும் முடக்குவாதமாக இருந்தாலென்ன, பிறவியிலேயே ஊனமுற்று அல்லது வேறு எவ்விதமான உடல் ரீதியான குறைபாடுகள் இருந்தாலென்ன இந்த விதிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## தனிமனிதச் சிறப்பியல்பு

தனக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பெறமுடியாது, ஏமாற்றமடையும் போதே குழந்தையின் தனிமனிதச் சிறப்பியல்புடன் அதன் குறைபாடு இயைபுடையதாகவிருக்கின்றது. அன்பு, சுதந்திரம், மனநிறைவு, உணர்ச்சியைத் தெரியப்படுத்துதல், உள்ளத்தை உற்சாகப்படுத்துதல், வழமையாகச் செய்யப்படும் விடயங்கள், முயற்சி, மதிப்பு, நோக்கத்தை நிறைவேற்றுதல் ஆகிய பத்தையும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் எனக் கூறலாம்.

மற்றவர்களின் அன்பை குழந்தை ஏற்றுக் கொள்ளவும், தான் மற்றவர்களில் அன்பைச் செலுத்தவும் செய்யும் உரிமை உணர்வே அன்பு எனப்படும். தனது குடும்பத்திடமிருந்து இதைப் பெறவே குழந்தை முதலாவதாக விரும்புகின்றது. உடல் ரீதியான குறைபாடுகள் இதற்குப் பல வழிகளில் தடையாகவுள்ளன. இதனால் குடும்பமும் கூடுதலான சிரமத்திற்கு உள்ளாகின்றது. நீண்டகாலத்திற்கு மருத்துவ மனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதன் காரணமாக குடும்பத்துடனான தொடர்பை குழந்தை இழக்கக்கூடியதாக இருப்பதுடன், வேறுவிதமாகச் சிந்திக்கும் மனப்பாங்கையும் பெறுகின்றது. குறிப்பாக, தாயே அன்பைச் செலுத்த வேண்டும். தாய்க்குப்பின் குழந்தையின் வயதையொத்தவர்களும், குடும்பத்தைச் சாராத மற்றவர்களும் அன்பு செலுத்த வேண்டும்.

நாம் குழந்தைகள்மீது அன்பைச் செலுத்துகின்றோம். அது தொடர்ந்தும் எங்கள் அன்பைப் பெற்றுக்கொண்டேயிருக்கின்றது. ஆனால் எங்கள் மீது தான் அன்பைச் செலுத்த முடியவில்லையே என்று அது உணர்கின்றது. தான் மற்றவர்களிடமிருந்து வேறுபட்ட ஆள் எனவும் தன்னால் எதுவும் முடியாது எனவும் இந்தக் குழந்தையை இது எண்ண வைக்கின்றது. சிலவேளைகளில் குறிப்பாக அந்தக் குழந்தை வளர்ச்சியடைந்து வரும்போது, நண்பர்களைத் தேடிக்கொள்ள கஷ்டப்படுவதுடன் தான் எவராலும் வேண்டப்படாத ஆள் எனவும் எண்ணுகின்றது மற்றவர்களின் அன்பும், ஆதரவும் தங்களுக்குக் கிடைக்குமென உடல் ரீதியாக வலுவிழந்த குழந்தைகள் நம்பாததனால் அவர்களுக்கு அன்பும் ஆதரவுமே தேவையென அவர்கள் உணருகின்றார்கள்.

குழந்தையாக இருக்கும்போது, மற்றவர்களில் முழுமையாகத் தங்கியிருக்கும் குழந்தை அந்த நிலையிலிருந்து விடுபட மேற்கொள்ளும் கடும் முயற்சியே சுதந்திரமாகும். இப்படி நீண்டகாலத்திற்கு மற்றவர்களில் தங்கியிருக்கும் வலுவிழந்த குழந்தைகள் தாங்கள் நினைத்தவாறு செயலாற்றத் தங்கள் உடல் இடங்கொடுக்காததால், ஏமாற்றத்தையும் அச்சத்தையும் அடைகின்றார்கள் இதனால் ஏற்படும் விளைவுகள் வேறுபடுகின்றது. சில குழந்தைகள் தங்கள் முயற்சியைக் கைவிட்டு, மற்றவர்களில் தங்கியிருப்பதை ஏற்பதுடன் மேலும் அதிகமாகத் தங்கியிருக்க விரும்புகிறார்கள். இதன்மூலம் அவர்கள் தாங்கள்முதிர்ச்சியுறுவதற்கு மேற்கொள்ளும் முயற்சியைத் தடை செய்கின்றார்கள்.

தங்களால் இயன்றளவில் கடும்முயற்சியை மேற்கொண்ட சிலர் வெறுப்பும் ஆத்திரமும் அடைந்திருப்பர். ஏனையோர் "நானாகவே இதைச் செய்யப்போகின்றேன்" "என்னால் இதைச் செய்ய முடியும்" ஆகிய இரண்டிலுமுள்ள வேறுபாட்டைக் காணப்புகுந்து மற்றவர்களில் அதிகமாகத் தங்கியிருப்பதை ஏற்றுக் கொள்வர். தேவைக்கு அதிகமான பாதுகாப்பைப் பெறும் குழந்தைகள் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான முயற்சியை மேற்கொள்ள அஞ்சுவார்கள். குழந்தைப் பராயத்தில் ஏற்பட்ட உடல் ரீதியான குறைபாடுகள் விளைவித்த அதிர்ச்சி காரணமாகச் சில குழந்தைகள் மற்றவர்களில் தங்கியிருப்பதைத் தாங்களாகவே நீடித்துக் கொள்கின்றார்கள்.

## நிறைவு

குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் செயலாற்றும் ஆற்றல் தனக்கு உண்டு என்னும் நம்பிக்கையே நிறைவை ஏற்படுத்துகின்றது. அதிகமான நம்பிக்கையுடனேயே செயலாற்ற ஆரம்பிக்கும் குழந்தை தன்னால் செய்யக்கூடியது என்ன? என்பதை விரைவில் அறிந்து கொள்கின்றது.

மனநிறைவென்ற உணர்ச்சியை உருவாக்க ஒருவரின் உடலமைப்பு முக்கியமான பங்கை வகிக்கின்றது என்பதை திரு. பிரியட் (Freud) அவர்களும் அவருக்குப்பின் திரு. போல் ஸ்கில்டர் (Poulschilder) அவர்களும் வேறு பலரும் தெளிவுபட எடுத்துக் காட்டியுள்ளனர். "குழந்தை வளர்ச்சியடையும் ஆரம்பகாலத்தில் நோய் காரணமாகவோ அல்லது மற்றவர்களால் அவதானிப்பதன் மூலமாகவோ அதன் உடலின் பகுதி ஒன்றில் கூடிய கவனஞ் செலுத்தப்படும்போது, உடலமைப்பைச் சீரழிக்கும் அந்தப்பகுதிக்கு உள ரீதியான முக்கியத்துவம் கூடுதலாகக் கொடுக்கப்படுகின்றது" என திரு. பென்ரர் (Bender) அவர்கள் கூறுகின்றார்.

எனவே நடக்க முடியாத குழந்தையொன்றுக்கு அதன் உடலிலுள்ள குறைபாடு கவலையை மேலும்

அதிகரிப்பதுடன், இந்தக் கவலை அதன் தனிமனிதச் சிறப்பைப்பற்றியும் கவலை கொள்ளவைக்கின்றது. நிறைவை ஏற்படுத்துவதன் அவசியம் காரணமாகவே ஒரு அம்சத்தில் குறைந்த நிலையிலுள்ள குழந்தையொன்று வேறொரு அம்சத்தில் கூடிய நிலையை அடைந்து, அந்தக் குறையை ஈடுசெய்யும் தனது கொள்கையை திரு ஆட்லர் (Adlar) அவர்கள் வகுத்தார்.

சில குழந்தைகளால் இதைச் செய்ய முடிகிறது. சிலரால் இதைச்செய்ய முடிவதில்லை. அநேகமான குழந்தைகள் தங்கள் உடல்ரீதியான குறைபாடு தங்கள் சுயமதிப்புக்கு பங்கம் விளைவிப்பதாக எண்ணுவதால் தங்கள் தகுதி நிலையையும் குறைத்துக் கொள்கிறார்கள். குழந்தையில் ஏற்படும் எதிர்விளைவுகளை திரு. பாக்கர் (Barker) அவர்களும், மற்றவர்களும் அறிந்துகொள்ள இந்தச் சமூக உளரீதியான அணுகுமுறை உதவக் கூடியதாகவிருக்கின்றது. ''குறைபாடுள்ளவர்களைப்பற்றி சமூகத்தில் நிலவும் போக்கு வலுவிழந்தவர்களின் மதிப்பைக் குறைக்கக் கூடியதாகவிருக்கின்றது''

மதம், இனம் போன்றவற்றால் வேறுபட்டிருக்கும் மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் பாகுபாடுகளும், சமூக அழுத்தங்களும் சிறிய எண்ணிக்கையாகவுள்ள வலுவிழந்த மக்களுக்கு எதிராகவும் காட்டப்படுவதாக திரு. பாக்கர் அவர்கள் கூறுகின்றார்.

## உணர்ச்சியை வெளிப்படுத்துதல்

ஒவ்வொரு குழந்தையும் தனது உணர்ச்சிகளை, அவை சரியானவையாகவிருந்தாலும் சரி, தவறானவையாகவிருந்தாலும் சரி வெளியிடத்தகுந்த ஆட்களைப் பெற்றுக் கொள்வதே உணர்ச்சியை வெளிப்படுத்துதல் ஆகும். குழந்தை வளர்ந்து வரும்போது, தனது உணர்ச்சியை வெளிப்படுத்துவதைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். ஆனால் மற்றவர்கள் அக்குழந்தையின் உணர்ச்சியை முழுமையாகவோ அளவுக்கு மீறியோ கட்டுப்படுத்தக்கூடாது. வலுவிழந்த குழந்தைகள் தங்கள் வாழ்வில் பெரும் ஏமாற்றங்களைச் சந்திப்பதால், அவர்கள் தங்கள் தவறான உணர்வுகளை அச்சமின்றி வெளியிடத்தக்க வாய்ப்பு இருக்கவேண்டும். அதே நேரத்தில் அவர்களில் மற்றவர்கள் தங்கள் அன்பையும், மனநிறைவையும் இழக்காமலும் பார்த்துக்கொள்ள வேண்டும். தங்கள், சரியான உணர்ச்சிகளை வெளிப்படுத்தச் சாதாரணமான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளாத குழந்தைகளுக்குப் புதியனவற்றை ஆக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தான் மற்றவர்களில் கொண்ட அன்பையும் வெறுப்பையுமிட்டு வலுவிழந்த குழந்தைகள் சில வேளைகளில் அச்சமடைவதுண்டு. இந்த அச்சத்தை அந்தக்குழந்தை வெளியிட உதவுவதன் மூலம் தன்னைத்தானே அது நன்கு புரிந்துகொள்ள நாம் உதவுகின்றோம்.

சாதாரணமான குழந்தைகளின் மனோவலிமையில் வேறுபாடு இருப்பதுபோன்று உடல் ரீதியாக வலுவிழந்து குழந்தைகளின் மனோவலிமையிலும் வேறுபாடுண்டு. சிலர் மெதுவாகவும், சிலர் விரைவாகவும் கற்றுக் கொள்கின்றார்கள். மருத்துவமனை அல்லது தாபனம் ஒன்றில் நிலவிய சூழ்நிலை காரணமாக அல்லது ஆற்றலின்மை கட்டுப்படுத்துவதன் காரணமாக தாங்களாகவே உலகை ஆராய்ந்து அறியும் ஆற்றலை குழந்தைகள் இழக்கின்றார்கள். சாதாரணமான குழந்தை மற்றவர்களைப் போலல்லாது இயல்பாக வளர்ச்சியுறும் வகையில் இந்தக் குழந்தைக்கு உற்சாகமளிப்பதுடன், பல வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி அவர்களுடைய அனுபவத்தை விரிவாக்க உதவ வேண்டும்.

ஏதேனும் பணியொன்றில் வலுவுள்ள குழந்தைகள் ஈடுபட்டிருக்கும்பொழுது, அவர்களின் பற்றார்வம் சிதறடிக்கப்படுவதை நாம் கண்டுள்ளோம். குறிப்பிட்ட குழந்தையொன்றின் தேவையற்ற பற்றார்வம் எப்போது ஏற்படும் என்பதை நாம் முன்கூட்டியே கூறமுடியாதாகையால் அதை எங்களால் தடுக்கமுடியாது. வலுவிழந்த குழந்தைகளுடன் பணியொன்றில் ஈடுபடும்பொழுது எழக்கூடிய கவலையை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை நன்கு சிந்திப்பதன் மூலம் தவிர்த்துக்கொள்ளலாம். முடமான குழந்தையொன்றைப் புதிய இடத்திற்கு மாற்றும்போது அக்குழந்தை அந்த இடத்தை அல்லது அங்குள்ள எவரையும் விரும்பாதுவிட்டால், அந்த மாற்றம் அதற்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவிருக்கின்றது.

குழந்தை வேறிடத்திற்கு மாற்றப்படுகின்றது என்பதை அதை மாற்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, அதற்குத் தெரியப்படுத்துவதுடன், மாற்றுவதற்கான காரணத்தையும் அதற்கு விளக்கிக் கூற வேண்டும். ''ஒரு பொதியைப் போல் அங்குமிங்கும் தள்ளப்படுகின்றோம்'' மெனக் குழந்தையொன்று இதைப்பற்றி' விபரித்துள்ளது.

# மனச்சோர்வு

கசலாமுனிர்
(டெயிலி நியூஸ் - 23.11.93)

அனைவருக்கும் மனச்சோர்வு விரைவிலேயும், தொடர்ச்சியாகவும் ஏற்படலாம். அது காலநிலை போன்று எதிர்பாராத ஒன்றாய் ஒரு ஒத்துவராத மனிதரைப்போல அல்லது நாங்கள் திட்டமிட்டு செயற்படுத்தப் போகும் கருத்திற்குத் தடையாகவிருக்கும் எதிர்சக்தி போன்றும் இருக்கும்.

அது ஒரு சரீர சுகக் குறைவோ அல்லது சல தோஷத்தாலோ, அசிரணத்தாலோ ஏற்படலாம். ஒவ்வொருவரும் இப்படியான தன்மைவாய்ந்த மனச்சோர்வை அனுபவித்து அதனால் விடுபட்டு அதை மறந்துவிடுகின்றோம். இந்த மனச்சோர்வு நமது வாழ்வில் அதிகமாக ஏற்படும்போது அதை நீக்கி அதிலிருந்து விடுபடவும் அதன் காரணத்தை அறியவேண்டியும் உள்ளது. இவ்வகை மனச்சோர்வடைந்தவர்கள் உற்சாகமற்ற மனநிலையில் தங்களுடைய உணர்ச்சிகளுக்கு ஈடுகொடுக்க முடியாதிருக்கின்றார்கள். நல்வாழ்த்துக்களை கூறவிரும்புவோர் இவ்விதமான துன்பத்திலுள்ளவர்களுக்கு

102652

அறிவுரை கூறி அந்த அதிர்ச்சியிலிருந்து உடனடியாக விடுவித்துக் கொள்ளும்படி வற்புறுத்தவேண்டும். இந்த அதிர்ச்சி அவர்களுடைய உடல் வலுவைக் குறைத்து அவர்களை எதையும் செய்ய முடியாதவர்களாக்கிவிடும்.

ஒருவர் முயற்சி செய்யாதிருப்பின் அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த நிலையில் ஒரு மருத்துவரைத் தவிர வேறு ஒருவரால் எதையும் செய்யமுடியாது. மருத்துவர் நோயாளிக்கு மனச்சோர்வுக்கு எதிரான மாத்திரையைக் கொடுப்பார்.

நீ மேலும் சுகமாக இருக்கவேண்டும் என்று எண்ணினால் மாத்திரம் போதாது. மனச்சோர்வினால் பீடிக்கப்பட்ட ஒருவர் மனச்சோர்விலிருந்து விடுபடவிரும்பினால் சுகமடைய முயற்சிசெய்யவேண்டும். சுகமடையவேண்டும்என்று விரும்புவதும் சுகமாயிருக்க முயற்சிப்பதும் இவை இரண்டும் வேறு வேறாக இருப்பினும் அவை ஒன்றை ஒன்று சார்ந்தவையே.

நீ மனச்சோர்வினால் பீடிக்கப்பட்டதிலிருந்து சுகமாக வேண்டுமென்று எண்ணி உனக்கு நீயே உதவ விரும்பினால் அன்றி உனக்கு உதவமுடியாதென்று விளங்கிக்கொள். ஒரு அனாவசியமான பாதிப்பிலிருந்து வெளியேற நீ கண்டிப்பாக நேர்மையாக இருக்க வேண்டும். முதலாவதாக உன்னுடைய தேக நிலைமையை அறிந்துகொள். ஒரு மருத்துவரோடு உரையாடி நீர்முறையாகச் சாப்பிட்டு வாழ்கின்றாயா? என்று உறுதிசெய்துகொள்.

*நீ மனச்சோர்வினால் பிடிக்கப்பட்டதிலிருந்து சுகமாக வேண்டுமென்று எண்ணி உனக்கு நீயே உதவ விரும்பினால் அன்றி உனக்குஉதவமுடியாதென்று விளங்கிக்கொள். ஒரு அனாவசியமான பாதிப்பிலிருந்து வெளியேற நீ கண்டிப்பாக நேர்மையாக இருக்க வேண்டும். முதலாவதாக உன்னுடைய தேக நிலைமையை அறிந்துகொள். ஒரு மருத்துவரோடு உரையாடி நீ முறையாகச் சாப்பிட்டு வாழ்கின்றாயா? என்று உறுதிசெய்துகொள்.*

நீ உணவருந்த போதிய நேரத்தை எடுத்துக்கொள். நிறைவான உணவை உட்கொள்ளுதல் முக்கியமானது. சுருக்கமாகக் கூறுவதானால் தேவையான உணவை உட்கொள்ளாவிட்டால் அதற்காக கட்டாயமாக வருந்தவேண்டியிருக்கும். போதியளவில் உணவை உட்கொள்ளுதல், சத்துள்ள உணவை உட்கொள்ளுதல், அதாவது பழவகைகளையும், காய்கறி உணவையும், இலை வகைகளையும், இறைச்சி வகைகளையும், இனிப்புப் பண்டங்களையும், சுவையான உணவையும் சாப்பிடலாம். ஒருவரின் உணர்ச்சியை ஒத்தே எண்ணங்கள் உருவாகும். எல்லாவற்றிலும் கட்டுப்பாடாக இருந்தால் சந்தோஷமாக இருக்கலாம். சுகமில்லை என்ற உணர்வு இருப்பின் சலிப்பையும், இயலாத தன்மையையும் ஏற்படுத்தும்.

உன்னுடைய சுற்றாடல் உன்னுடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் உருவாக்கும். என்றாலும் எல்லாருக்கும் தாங்கள் வசிக்கின்ற இடங்களைத் தெரிவுசெய்யக்கூடிய பாக்கியம் கிடைப்பதில்லை. ஒருவருக்கு தான் விரும்பியவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியாதிருக்கும். அதனால் பெரும்பாலும் தாங்கள் வசிக்கும் இடங்களை தங்களுக்கு மனநிறைவைத் தரத்தக்கதாகவும், சந்தோசம் அளிக்கக்கூடியதாகவும் அமைத்துக்கொள்ள முடியும். தங்களுடைய வாழ்க்கைச் சூழலை அமைதியாகவும், கவர்ச்சியுடையதாகவும் மாற்றமுடியும். மந்தமான நிலைவராமல் தடுப்பதுதான் மனச்சோர்வு ஏற்படாமல் தடுக்க ஒரேவழி உனக்கு மனச்சோர்வு ஏற்படுமெனத் தோன்றினால், வாழ்க்கையில் சிறிய அளவிலான அபிலாசைகளை ஏற்படுத்திக்கொள். தாங்கள் வசிக்கும் இடங்களைப் பொறுத்தே அநேகமானோருக்கு மனச்சோர்வு ஏற்படலாம். மந்தமான சூழ்நிலையில் ஒருவருக்குப் பாதகமானநிலை ஏற்படும். மேலும் மனதிற்கு இசைந்த பகுதிகளில் மாறியிருக்க முடியுமானால் அப்படிச்செய்யலாம். அப்படிச் செய்ய முடியாவிட்டால் சலித்துப்போகாதே உன்னுடைய பகுதியில் வாழ்க்கையைச் செழிப்புறச்செய்துகொள். அங்கு வசிப்பவர்களை மேலான மாற்றங்களை ஏற்படுத்தும்படி அவர்களை உற்சாகப்படுத்து. அப்படிச் சிறப்பாக அமைக்க நாங்கள் உதவ வேண்டும். நகரச் சூழல் வசதிகள் இல்லாத இடங்களில் சூழல் நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை நடைமுறைப்படுத்துவதில் எங்கள் அசைவற்ற நிலை நீங்கிவிடும். நடைமுறைப்படுத்த இயலாவிட்டால் உனக்கு இயலுமானவரையிலும் வாழ்க்கையை சிறப்புறச் செய்துகொள். உன்னுடைய சூழலை பிரகாசமான நிற வர்ணங்களைக்கொண்டு ஒளி ஊட்டலாம். படுக்கையை, மேசையை, குழியலறையை, சமையலறையை, சூழலை பூச்செடிகளாலும் அலங்கரித்தால் அபூர்வமான தோற்றமளிக்கும். நியாயமான காரியக்கிரமப்படி வாழ்வது முக்கியமாகும்.

நீ தனியே வாழ்ந்தால் நியாயமான காரியக் கிரமப்படி வாழ்வது முக்கியமாகும். மனச் சோர்வினால் பீடிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதைத் தெரிந்துகொள்ளாமல் வாழ்க்கைப் பாதையைவிட்டு விலகிவிட்டோம் என்று கூறுவார்கள். தங்களை மனச்சோர்வுற்றதாக மாற்றிய காரணங்களை ஆராயப் பயப்படுவார்கள். அவர்கள் காரியக் கிரமமில்லாமலும் தங்களுடைய

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

வாழ்க்கையை அமைத்துக்கொள்ள கற்பனைத்திறன் இன்மையாலும் வாழ்க்கையில் திருப்திப்படமாட்டார்கள், அநேகமான பெண்கள் வீட்டிலேயே இருப்பதால் இம்மாதிரியாகப் பீடிக்கப்பட்டு இதிலிருந்து விடுபடமுடியாமல் தங்களுடைய தாக்கத்தை குழந்தைகளின்மேல் சாதிப்பார்கள். வாரந்தோறும் நீண்டநேரம் வேலைசெய்யும் ஆண்களும் இதனால் பாதிக்கப்படுவதுண்டு. ஆனால் பெண்களிலும் பார்க்க குறைவாக இருக்கின்றார்கள். சொந்தமான வீடுகளும், பிள்ளைகளும் இருக்கவேண்டும் என்று விரும்பியவர்களுக்கும், திருமணமாகாதபெண்களுக்கும் இந்நோய் ஏற்படுவதுண்டு. இவர்கள் தங்கள் வாழ்கையில் குறிக்கோள் ஒன்றை முன் வைத்து வாழ்வதுதான் சிறந்தமுறை.

நீ மனச்சோர்வினால் பீடிக்கப்பட்டு உன் நிலைமையை மாற்றிக்கொள்ள துணிவும் விருப்பமும் இருந்தால் உனக்கு ஊக்கமளிக்கத்தக்க குறிக்கோள்ஒன்றில் மனதைச் செலுத்தி பரிசோதித்துப் பார்க்கலாம். உன்னுடைய சொந்த முயற்சியில் உனக்கு ஊக்கமளிக்கத்தக்க கருமத்தில் மற்றவர்களோடு இணைந்து மகிழ்ச்சியோடு ஈடுபடு. அப்படிச் செய்வதில் உனக்குச் சிரமம் இருந்தால் அதை நிறுத்திவிடு.

மக்கள் உண்மைநிலையோடு ஒத்துப்போக மறுத்தால் அதனால் அடிக்கடி பாதிப்படைவர். அவர்கள் வேறு ஏதேனும் செய்யவோ, அல்லது வேறுவிதமாகத் தோற்றமளிக்கவோ விரும்புவார்கள். அவர்கள் இந்த விசித்திரமான எண்ணங்களை கைவிட்டு வாழ்வதில் தங்களுடைய காலத்தை செலவிடுவார்கள்.

துரதிஷ்டவசமாக அவர்கள் மனிதர்களைச் சந்திப்பதைக் தவிர்த்து நாளாந்தவாழ்க்கையில் சுறுசுறுப்பாக பங்குபற்றுவதை விளக்கிக்கொள்வார்கள். தங்களைச் சூழவுள்ள வாழ்க்கையிலிருந்து தப்பிக்கொள்வது அவர்களுக்கு உதவியாகவிராது சிக்கலை ஏற்படுத்தும் சிலர் தங்களுடைய குறிக்கோளின்படி வாழ மிகக் கடினமாக உழைப்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் பரிதாபகரமாகத் தோல்வியுறுவார்கள். இது அவர்களின் குறைபாட்டின் காரணமாகவன்றி இந்த இனம் அநேகமாக துக்ககரமான நிலைக்கு ஆளாவார்கள். ஆனால் எல்லோரும் அல்லாத மிகச்சிலரே இந்நிலைக்கு உள்ளாவார்கள். இவர்கள் சில காரியங்களை சரியாகக் கையாளுவதில்லை. அவர்கள் தங்களின் நிலையை உணராமல் உண்மையான நிலைக்குவர மறுப்பார்கள். தோல்வி அவர்களுக்கு கசப்புணர்வையும், வெறுப்புணர்வையும், இயலாமையையும் தோற்றுவித்து முடிவாக மனச்சோர்வு அடைவார்கள.

ஒருவர் சந்தோசமாக இருக்கவேண்டும் என்றால் தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் சுயநிலையில் இருக்கவேண்டும். இத்தன்மையை ஏற்று மிகக்கூடிய நன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முற்படுவது சலிப்பைத்தரும் ஏனென்றால் உண்மைக்கும், போலித்தனத்திற்கும் உள்ள வேறுபாடு அதிகரித்துக்கொண்டேயிருக்கும்.

சில வேளைகளில் ஒருவனோ, ஒருத்தியோ தாங்கள் வித்தியாசமானவர் என்று கூறிக்கொள்வார்கள். அநேகமாக இதன் பொருள் என்னவென்றால் அவர் தன்னை உணரவில்லை என்பதாகும். இவர்கள் தங்களைச் சூழ உள்ளவர்களோடு நிச்சயமாக ஒற்றுமையாக நடந்துகொள்ளவில்லை என்பதாகும். உதாரணமாக உனக்கு சங்கீதத்தில் விருப்பம் உண்டு. அது மேலைத்தேய சங்கீதமாயிருக்கலாம் அல்லது கர்நாடக சங்கீதமாக இருக்கலாம். ஆனால் உங்கள் குடும்பமும் நண்பரும் அதை விரும்பவில்லை என்றோ, விரும்புகின்றார்கள் என்றோ கூறுகின்றார்கள். அதை நீங்கள் ஏற்றுக் கொண்டு உங்களுக்கு விருப்பமான சங்கீதத்தை இரசிக்கலாம். அப்படியாக மற்றவர்கள் உங்களுக்கு விருப்பமானதை ஏற்கவில்லை என்று கவலையுறாமல் இருக்கலாம். ஆனால் அவர்களோடு சேர்ந்து சந்தோசமடையக் கூடிய வேறு விடயங்களும் இருக்கலாம்.

மனச்சோர்வு உடையவர்கள் மற்றவர்கள் தங்களை விரும்ப வேண்டும் என்றும் தங்களை நாடுபவர்களாக இருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். தங்களைச் சுற்றியுள்ளவர்கள் தங்களின் எதிர்பார்ப்புக்களை போதியளவு உணர்கின்றார்கள் இல்லையென எண்ணுகின்றார்கள். உங்களை மற்றவர்கள் நேசிக்க வேண்டும் என்று அதிகம் எதிர்பார்க்கிறீர்களா? என்று எண்ணிப் பாருங்கள் தங்களின் ஒவ்வொரு மனக்கிளர்ச்சிக்கும் மன அலைச்சலுக்கும் அனுதாபம் பெற்றுக் கொள்ள சிறுபிள்ளைகளைப் போல் எதிர்பார்க்கின்றார்கள்.

தங்களுடைய உறவுகளில் திருப்தியடையாத திருமணமான தம்பதிகள் குடும்பங்கள், சிநேகிதர்கள் மனச்சோர்வடையலாம். பாலியல் சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் அல்லது அதற்கு அப்பாலுள்ள விருப்பங்களும் ''என்னை விரும்புகின்றாயா'' என்பதும் ''நான் விரும்பியவற்றைத் தருவீர்களா'' என்பதும் பிரச்சனைகளுக்குரிய சமமான கேள்விகள் ஆகும். இப்படியான நிலைமைகளில் வயது வந்தவர்களுக்கிடையில் விரும்பத்தக்க மன ஒற்றுமை ஏற்படாது.

உனக்கு இப்படியான எண்ணங்கள் உண்டாகும் எனின் வாழ்க்கைப்பாதை கடினமாக இருக்குமென்று நீ உறுதியுடன் எதிர்பார்க்கலாம். நீ எந்நேரமும் சலிப்புடனும் மனச்சோர்வுடனும் இருப்பாய் ஏனென்றால் மற்றவர்களிடமிருந்து நீ எதிர்பார்த்தளவு அன்பையோ, பாசத்தையோ, பாராட்டையோ, தாராளமாகப்பெற்றுக்கொள்ள முடியாது.

3023 CC
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
PUBLIC LIBRARY
JAFFNA

மற்றவர்களுடைய போக்கை விளங்கிக் கொண்டு உன்னுடைய மனப்பான்மையை ஏற்றவாறு மாற்றியமைத்து நடத்தல் வேண்டும்.

நாங்கள் ஏற்கனவே கூறியது போல மனச் சோர்வு ஒரே தன்மையான காரியக் கிரமத்தினா லும் ஏற்படும். நீ தினமும் ஒரே மாதிரியான வேலையைத் திரும்பத் திரும்பச் செய்து நாளாந் தம் சந்திக்கிறவர்களையும் தினமும் சந்தித்து வந் தால் உனது வாழ்வு ஒளிபெறாது.

இப்போதுள்ளது போன்று நீ பழக்கப்பட்ட வேளையில் சிறிதளவு மாற்றம் ஏற்படுத்தக்கூடியதா யிருக்கின்றதா? என்று உன்னைக்கேட்டுப்பார். அல்லது அதை விறுவிறுப்பாக்க மனத்திடத்து டன் சிறிதளவு ஊக்கத்தை ஏற்படுத்த இது ஒழுங் கற்ற சிக்கலை ஏற்படுத்தாமல் இருந்தால் உன்னு டைய காரியக்கிரமத்தை வேறுபடுத்தல் வேண்டும்.

நீ ஆரம்பமாக செய்யும் வேலைகளை உடனே யும் சிறப்பாகவும் செய்யக்கூடிய வழிமுறைகளைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

ஆராய்ந்து புதியவர்களோடு பழகக்கூடியதாக புதிய அபிலாசைகளைத் தெரிவு செய். நாளாந்தம் தொலைக்காட்சியை பார்ப்பதைவிட்டு நீ ஒரு விடு முறையை எடுத்துக் கொண்டு மாற்று நடவடிக்கை களில் ஈடுபடலாம். ஒரு புதிய உணவு விடுதிக்குப் போகலாம். உன்னைப்பற்றிய புதிய நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். உன்னுடைய தோற் றத்தில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். உன்னுடைய நடைமுறைகளை வேறுபடுத்திக் கொள்ளலாம்.

வர்ணங்களில்மனதைச்செலுத்தி. உன்னுடைய மனச்சோர்வைப் பற்றிச் சிந்திப்பதை விலக்கி உலகத் தையும், மற்றவர்களையும் அவதானித்துப் பார்த்து உன்னுடைய வாழ்க்கையைச் சந்தோசமாகச் செய்ய தேவையானதைப் புரிந்துகொள்.

# ஹரப்பா நாகரீகத்தைத் தேடி

(டெயிலி நியூஸ் - 23.11.93)

மதுபாலா

கிறிஸ்துவுக்கு முன் 2400 - 1700 ஆம் ஆண் டளவில் செழிப்புற்றிருந்ததெனக் கருதப்படும் ஹரப்பாவில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்ட போது கண்டெடுக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு ஹரப்பா நாகரிகம் என அறியக்கூடிய தாக இருந்தது. இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரி கம் புராதனமானதும், சிறப்பானதுமான நான்கு நாகரீகங்களில் ஒன்றாக விளங்குவது மாத்திரமன்றி, எகிப்திய அரச பரம்பரை அல்லது சுமேரியர்கள் ஆதிகாலத்தில் கொண்டிருந்த நிலப்பரப்பை விடக் கூடுதலான நிலப்பரப்பிலும் வளர்ச்சியுற்றிருந்தது. இந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்த வளங்களை அங் கிருந்த மக்கள் நன்கு பயன்படுத்தியதால் இந்த நாகரீகம் வளர்ச்சியுற்றது.

சதுரங்கவிளையாட்டுக்குப்உபயோகிக்கப்படும் சதுரங்கப் பலகை போன்ற அமைப்பைக் கொண்ட நகரங்களுடன் கோட்டையும், நுட்பமாக அமைக் கப்பட்ட வடிகால் அமைப்பு முறையும், அழகான மட்பாண்டங்களும், நிறுவை மற்றும் அளவை யைக் கண்டறிவதற்கான படிக்கல் வகைகளும், வெண்கலப் பொருட்களும் தங்கள் இனத்தின் மொழியைச் சார்ந்தவை எனப் பலர் உரிமை கோரிய போதிலும் பூமணி வைரத்தின் மீது செதுக் கப்பட்ட சின்னங்களோ அல்லது இரு மொழிக ளைக் கொண்ட சின்னங்களோ காணப்படாமை யால் அது எந்த இனத்தினருடைய மொழி என அடையாளம் காணமுடியாத ஓவியத்தைப் போன்ற எழுத்துக்களும் இந்த நாகரீகத்தின் சிறப்பம்சங்க ளாக விளங்குகின்றன. மொஹஞ்சோதாரோவி லும், ஹரப்பாவிலும் அகழ்வாராச்சி மேற் கொண்ட போது இந்தத் தனிச்சிறப்பான அம்சங் களைக் காணக்கூடியதாகவிருந்தது.

1947ஆம் ஆண்டில் இந்தியா பிரிக்கப்பட்ட பின் இந்துநதிப்பள்ளத்தாக்கில் இருக்கும் மொஹஞ் சோதாரோவும், ஹரப்பாவும் இவற்றைப் போன்று வேறு பல இடங்களும் பாகிஸ்தானின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்புக்குள் வந்தன. அதன் பின், இந்தியாவின் தொல்பொருள் ஆராச்சியாளர்களின் விடா முயற்சி காரணமாக ஹரப்பா நாகரீகம் நில விய இடங்கள் மாத்திரமன்றி ஹரப்பா நாகரீகத் திற்கு முற்பட்ட மற்றும் பிற்பட்ட நாகரீகங்க ளைக் கொண்டிருந்த இடங்களும் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டன. இப்படிக் கண்டுபிடிக்கப் பட்ட 93 இடங்களில் பல இடங்கள் அகழ்வா ராச்சிக்கு உட்படுத்தப்பட்டன.

இந்துநதிப் பள்ளத்தாக்கில் கண்டுபிடிக்கப் பட்ட இடங்களுடன் ஒப்பிடுகையில் சரஸ்வதி ஆற் றுப் படுக்கையிலேயே மிகவும் அதிகளவு எண்ணிக் கையான இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தியாவின் வடக்கேயுள்ள ஜம்முகாஷ்மீர் பிரதேசத்தின் மண்டாவிலிருந்து தெற்கேயுள்ள மகாராஷ்டிரா பிரதேசத்தின் தைமாபாத் வரையி லும், மேற்கேயுள்ள குஜராத் பிரதேசத்தின் தேசல்பூர், குர்ச் ஆகிய இடங்களிலிருந்து கிழக்கே யுள்ளதும் உத்தரப்பிரதேச மாநிலத்திலுள்ளது மான சகரன்பூர் மாவட்டத்திலுள்ள குலாஸ் என்ற இடம் வரையுமான ஹரப்பா நாகரீகம் நிலவிய நிலப்பரப்பை இந்தியா தற்போது தன்னகத்தே கொண்டுள்ளது.பஞ்சாப்பிலுள்ள நோபார், மண்டா ஹரியானாவிலுள்ள பனாவாலி, உத்தரப்பிரதேசத்

திலுள்ள குலாஸ் மற்றும் அலம்சிர்பூர், ராஜஸ்தானிலுள்ள கலிபங்கன், குர்ச்சிலுள்ள லோதால், சுர்கோதாடா மற்றும் தோலவிரா, குஜராத்திலுள்ள தேசல்பூர், றோஜ்தீ மற்றும் குண்டாசி மற்றும் மகாராஷ்திராவிலுள்ள தைமாபாத் ஆகிய இடங்களிலேயே அகழ்வாராச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராஜஸ்தானின் வடபாகத்தில் உள்ளதும், ஆதிகாலத்தில் சரஸ்வதி என அழைக்கப்பட்டதும், தற்போது வறண்டுபோய் இருப்பதுமான கக்கார் ஆற்றின் இடதுபக்க கரையோரமாக இருக்கும் கலிபங்கன் டில்லியின் வடமேற்கே 310 கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது. இந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராச்சியின் போது மேற்குப் பக்கத்தில் சிறிய மண்மேடும், கிழக்குப் பக்கத்தில் பெரிய மண்மேடுமாக இரண்டு மண்மேடுகள் காணப்பட்டதுடன், ஹரப்பா மற்றும் மொஹெஞ்சோதாரோ நாகரீகம் நிலவிய இடங்களிலுள்ள மண்ணையும் இவை ஒத்திருந்தன.

ஹரப்பா நாகரீகம் நிலவியபோது அமைக்கப்பட்டிருந்த நகரங்கள் எப்படி இருந்தன என்பதை அறிந்து கொள்ள இந்த அகழ்வு ஆராச்சி உதவியது. இருப்பினும் ஹரப்பா கோட்டைக்கு அடியிலுள்ள பகுதிகளில் ஹரப்பா நாகரீகம் நிலவிய காலத்திற்கு முன் மக்கள் வாழ்ந்ததை இங்கு பெறப்பட்ட சான்றுகளிலிருந்து அறிய முடிகின்றது.

ஹரப்பா நாகரீகத்திற்கு முன் வாழ்ந்த மக்களின் பாதுகாப்புக்காக அவர்களின் குடியிருப்புக்களைச் சுற்றி அமைக்கப்பட்ட மதில்கள் கழி மண் கற்களால் கட்டப்பட்டு உறுதி வாய்ந்தவையாக இருந்தன. மதிலால் சூழப்பட்டிருந்த பகுதியிலிருந்த வீடுகளும் கழிமண் கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. அக்காலத்தைய மட்பாண்டங்களுக்கும் அதைத் தொடர்ந்து வந்த ஹரப்பா காலத்துக்குரிய மட்பாண்டங்களுக்கும் இடையே காணப்பட்ட வேறுபாடு அக்காலத்தின் பண்பின் தனிக்கூறாக விளங்குகின்றது. இருப்பினும் குடியிருப்புக்குத் தென் கிழக்கிலும் நகரத்தின் சுவருக்கு வெளியேயும் உழப்பட்ட வயல் நிலம் போன்று ஒன்றைக் கண்டுபிடித்தமை இந்த ஆய்வு மூலம் பெறப்பட்ட முக்கிய சான்றாகும். அகழ்வு ஆராட்சி மூலம் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட உழப்பட்டிருந்த வயல்களுக்குள் இதுவே மிக மூற்பட்டது எனக் கருதப்படுகின்றது.

> *இயற்கையாகவே சிறிய மண்மேட்டை கொண்ட இந்த இடத்தில் ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் கழிமண்ணும் கழிமண் கற்களும் இட்டு வலுப்படுத்தப்பட்டிருந்தது. ஐந்து படிநிலைகளில் அங்குள்ள மக்கள் தொடர்ச்சியாகக் குடியேறியிருந்ததை அகழ்வு ஆராய்ச்சி தெரியப்படுத்துகின்றது. இவற்றில் முதல் நான்கு படிநிலையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் ஹரப்பா நாகரீகம் நிலவிய காலப்பகுதியிலும், ஐந்தாவது படிநிலையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் ஹரப்பா நாகரீகத்தைப் போன்ற நாகரீகம் நிலவிய காலப்பகுதியிலும் இடம்பெற்றுள்ளன.*

ஹரப்பா நாகரீகம் நிலவிய காலப் பகுதியில் குடியிருப்புக்களின் அமைப்பு முறை மாற்றப்பட்டிருந்தது. நகரின் கோட்டைக் கோபுரங்கள் மேற்குப்புறத்திலும், தாழ்ந்த நிலப்பகுதியிலிருந்த நகரம் கிழக்குப்புறத்திலும் அமைக்கப்பட்டு இரண்டு தனித்தனியான பகுதிகளை இந்தக் காலப்பகுதியில் காணக்கூடியதாகவிருந்தது. கிழக்குப் பக்கமாகவுள்ள இயற்கைச் சமவெளியில் அமைந்திருந்த நகரத்திற்கு வழங்கும் முக்கியத்துவத்தை விட அதிக முக்கியத்துவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டே இந்தக் காலத்திற்கு முன்னதாகவிருந்த குடியிருப்புக்களின் இடிபாடுகளுக்கு மேலாகக் கோட்டை கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. இரண்டு சமனான ஆனால் வெவ்வேறான உருவப்பாங்கைக்கொண்டதும், எதிர்ப்பக்கங்கள் சமமாகவும் இணைவாகவும் உள்ள வரை - உருவம் போன்றதுமாகக் கோட்டைத் தொகுதி இருந்தது. அவை யாவும் களிமண் கற்களாலேயே கட்டப்பட்டிருந்தன.

கோட்டையின் தென் பாகத்திலுள்ள அரைப் பகுதி மதம் அல்லது வேறு வைபவங்களுக்காகப் பயன்படுத்தி இருக்கக்கூடும் என நம்பப்படும் 5 அல்லது 6 அரங்க மேடைகளைக் கொண்டிருந்ததுடன், அதன வடபாகத்திலுள்ள அரைப்பகுதி மேல்மட்டத்தவர் வாழும் இல்லங்களைக் கொண்டிருந்தது.

தாழ்ந்த நிலப்பரப்பிலிருந்த நகரமும் பாதுகாக்கப்பட்டே இருந்தது. சுவரால் சூழப்பட்ட நகரத்திலிருந்த தெருக்கள் வடக்கிலிருந்து தெற்கையும், கிழக்கிலிருந்து மேற்கையும் நோக்கிச் செல்வதால் அந்தப் பகுதி துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடிகால்கள், கிணறுகள், வாசல் படிகள் போன்றவற்றை அமைப்பதற்குச் சூட்டினால் கெட்டியாக்கப்பட்ட செங்கற்கள் உபயோகிக்கப்பட்டிருந்த அதேவேளையில் களிமண் கற்களால் வீடுகள் கட்டப்பட்டிருந்தன.

நகரத்தின் இந்த இரண்டு பிரதானமான பகுதிகளுடன் தாழ்வான நகருக்குக் கிழக்குப்புறமாக 80

மீற்றர் தொலைவில் மூன்றாவது ஒரு பகுதியும் காணப்படுகின்றது. இங்குள்ள கட்டிடம் நான்கு அல்லது ஐந்து பலிபீடங்களைக் கொண்டுள்ளதாலும், சிறிதாக இருப்பதாலும், இது மத வைபவங்களுக்கு உபயோகிக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதக்கூடியதாகவிருக்கின்றது.

அகழ்வு ஆராய்ச்சியின்போது கண்டெடுக்கப்பட்ட பொருட்களுள், முத்திரையிடுவதற்காகக் பயன்படுத்தப்பட்ட உருளை வடிவக்கல்லும், செந்நிற மண்ணைக்கொண்டு உருவாக்கப்பட்டதும், தாக்குவதற்கு ஆயத்தமான நிலையிலுள்ளதுமான எருது ஒன்றின் உருவமும் முக்கியமானவை ஆகும்.

கம்பே குடாவின் மேற்பகுதியிலுள்ளதும், அகமதாபாத்தின் தென்மேற்குப் பக்கமாக 80 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளதும், கடற்கரையோரமாய் உள்ள தாழ்நிலத்திலுள்ளதுமான லோதாலில் அகழ்வு ஆராய்ச்சி மேற்கொண்டபோது சபரமதி மற்றும் பாகவோ நதிகள் சந்திக்கும் இடத்திலிருந்து வடமேற்குப்பக்கமாக 16 கிலோ மீற்றர் தொலைவில் அது இருப்பதால் வெள்ளப்பெருக்குக்கு அது அடிக்கடி உள்ளாக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவிருந்தது. அதே வேளையில் இந்த இரண்டு நதிகளிலும் நீர் வழிப்போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பையும் இந்த இடம் பெற்றிருந்தது. இயற்கையாகவே சிறிய மண்மேட்டை கொண்ட இந்த இடத்தில் ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால் கழிமண்ணும் கழிமண்கற்களும் இட்டு இது வலும்படுத்தம்பட்டிருந்தது. ஐந்து படிநிலைகளில் அங்குள்ள மக்கள் தொடர்ச்சியாகக் குடியேறியிருந்ததை அகழ்வு ஆராய்ச்சி தெரியப்படுத்துகின்றது. இவற்றில் முதல் நான்கு படிநிலையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் ஹரப்பா நாகரீகம் நிலவிய காலப்பகுதியிலும் ஐந்தாவது படிநிலையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்கள் ஹரப்பா நாகரீகத்தைப் போன்ற நாகரீகம் நிலவிய காலப் பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. குடியிருப்புகள் சற்சதுரமாக அமைக்கப்பட்டிருந்ததுடன் கோட்டையும், தாழ்ந்த நிலப்பரம்பிலுள்ள நகரத்தையும் கொண்ட இரு பிரிவுகளாக இருந்தது. நுழைவாசல் மற்றும் மடைவாய் போன்றவற்றுக்குத் தேவையான இடைவெளி விடப்பட்டதும். சுட்ட செங்கற்களால் அணைச்சுவர் எழுப்பப்பட்டதும், 24 36 மீற்றர் நீள்சதுரமுமான நீர்த்தேக்கம் இந்த ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்ட தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாக இருக்கின்றது. கப்பல்களைச் செப்பணிடும் இடமாக இது இருந்திருக்கலாம். எனக் கருதப்படுகின்றது. அங்கு காணப்பட்ட பாரசிகக் குடாவில் இருந்ததைப்போன்ற வட்டமான முத்திரை அச்சு; மேற்கு ஆசியாவுடன் கடல்வாணிபம் இடம்பெற்றிருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. அங்கு காணப்பட்டவற்றுள் தராசுகள், தராசுப்படிகள், கத்திகள் மற்றும் மீன் பிடிப்பதற்கு உபயோகிக்கப்பட்ட செப்பு அல்லது வெண்கலத்தினால் உருவாக்கப்பட்ட தூண்டில்கள் ஆகியனவும் அடங்கும். ஹரப்பா நாகரீகம் நிலவிய காலத்திலிருந்து அழகான மண்பாண்டங்களுடன் இத்துநதி. நாகரிகத்தைச் சார்ந்ததும், அந்தப் பிராந்தியத்திற்கே உரித்தானதெனத் தெளிவாகத் தெரியப்படுத்துவதுமான புது மாதிரியான உருவமைப்பைக்கொண்ட சிலமட்பாண்டங்களும் அங்கு காணப்பட்டன.

இதேபோல், சிந்துவிலிருந்து தரைமூலமாகப் புகுந்த நாகரீகம் இந்துநதிப் பள்ளத்தாக்கில் நாகரீகத்துடன் எப்படிக் கலந்தது என்பதைக் குஜாரத் மாநிலத்தின் குர்ங்சிலுள்ள சுர்கோதடாவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராய்ச்சிகள் தெரியப்படுத்துகின்றன. ஹரப்பா நாகரிகத்தின் மூன்று கட்டத்தையும் இந்த ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. மக்கள் குடியேற ஆரம்பித்த காலத்திலிருந்தே நீள்சதுரமானதும், வலுப்படுத்தப்பட்டதுமான கட்டிட படிவத்தைக் கொண்ட குடியிருப்புகள் இரண்டு சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மேற்குப் பக்கமாகவுள்ள அரைப்பகுதி கோட்டையைக் கட்டவும், தாழ்வான நிலப்பரப்பைக் கொண்ட கிழக்குப்பகுதி வசிப்பிடங்களைக் அமைப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. கழிமண்ணினால் கட்டப்பட்டிருந்த வசிப்பிடங்களின் சுவர்களின் வெளிப்புறம் கூழாங்கற்களைக் கொண்டு வலுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அநேகமான பொருட்கள் ஹரப்பா நாகரீகம் நிலவிய காலத்தவையாக இருந்தபோதிலும், இந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரீகம் நிலவிய காலப் பகுதியில் உபயோகிக்கப்பட்டதைப் போன்ற முத்திரை அச்சு, படிக்கல்வகையினால் உருவாக்கப்பட்ட நீண்ட கத்திகள், குண்டுமணிகள் போன்றவையும் இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. இறந்தவர்களின் உடல்களைப் புதைக்கும் முறைகளுள் மட்பாண்டத்தில் உடலைவைத்துப் புதைக்கும் முறையையும் மக்கள் பின்பற்றிவந்துள்ளனர். இருப்பினும் செப்பினால் உருவாக்கப்பட்ட கோடரி போன்ற தட்டையான கருவியும், உளியும் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களுள் அடங்கியிருந்தன. சிவப்பாகவும், கறுப்பாகவும் உள்ள மட்பாண்டங்களுக்கு வெள்ளைநிற வர்ணப்பூச்சுக்கள் தீட்டப்பட்டதை மேற்தளத்தில் மேற்கொண்ட அகழ்வு வெளிப்படுத்துவதைக் கொண்டு புதியமக்கள் அங்கு குடியேறியுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

டில்லியின் வடமேற்கே 220 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பனாவலி என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு அவ்விடத்தில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக இருவிதமான நாரீகங்கள் இருந்ததென்பதையும் மேற்தள அகழ்வு ஹரப்பா நாகரீகத்தைக் கொண்ட மக்கள் வாழ்ந்ததையும் கீழ்த்தள அகழ்வு அதற்குமுத்திய நாகரீகத்தைக்கொண்ட மக்கள் வாழ்ந்ததையும் எடுத்துக்காட்டுகின்றது. ஹரப்பா நாகரீகத்திற்கு முற்பட்ட காலத்தைய மூன்று மீற்றர் ஆழத்திலிருந்து படிமப்பொருட்களை ஒன்றுசேர்த்துப் பார்த்தபோது அவை கலிபங்கன்

நாகரீக காலத்துப் படிமப் பொருட்களுக்கு ஒத்த வையாக இருந்தன.

பீர் பஞ்சாப் மலைத்தொடரிலுள்ள செனாப் நதியின் வலது கரையில் உள்ளதும், ஜம்முவுக்கு மேற்கே 28 கிலோ மீற்றர் தொலைவிலுள்ளதுமான 'மண்டா' என்ற இடமே வடக்குப் பாகத்தில் மிகக் கூடிய தொலைவில் ஹரப்பா நாகரீகம் நிலவிய பகுதியாகக் கருதப்படுகின்றது இரு இடைக்காலப் பகுதிகளில் மூன்றுவகையான நாகரீகத்தைக் கொண்ட மக்கள் இங்கு அடுத்தடுத்துக் குடியேறி யுள்ளதை இங்கு நடாத்தப்பட்ட அகழ்வு ஆராய்ச் சிகள் தெரியப்படுத்துகின்றன. இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்தஇடத்தில் ஹரப்பா மக்கள்வாழ்ந் தனர் என்பதை இங்கு காணப்பட்ட இந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரீக காலப்பகுதியில் இருந்ததைப் போன்ற மட்பாண்டங்கள், செம்மண்ணாலான முக் கோண வடிவ செங்கட்டிகள் மற்றும் மேற்காசி யாவில் உபயோகிக்கப்பட்டவை போன்றதும், செப் பினால் உருவாக்கப்பட்டதுமான இரு சுருள்களைக் கொண்ட கூர்முனை ஆகியன. தெரியப்படுத்துகின் றன. இரண்டாவது இடைக்காலத்தில் ஹரப்பா மக்கள் உபயோகித்த மட்பாண்டங்கள் கண்டெடுக் கப்பட்டன.

குஜாரத்திலுள்ள தோலாவிரா என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் இந்துநதிப்பள்ளத் தாக்கு நாகரீகம் நிலவிய காலப்பகுதியில் இருந்த தைப் போன்ற நீள் சதுரமாக உருவாக்கப்பட்ட நகரம் இங்கு இருந்ததையும் அந்த நகரம் நன்கு பலப்படுத்தப்பட்டிருப்பதையும் அதன் நீண்ட வெளிப்பரப்பின் மத்தியபகுதி உள்ள அரண், மத்திய பட்டணம், மற்றும் கீழ்ப்பட்டணம் என மூன்று முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததையும் இவற் றுள் முதலாவது இரண்டும் வெகுவாகப்பலப்படுத் தப்பட்டிருந்ததையும் தெரியப்படுத்தியிருந்தது. மதி லால் சூழப்பட்ட அந்த நகரம் 49 கெக்டர் நிலப் பரப்பைக் கொண்டிருந்தபோதிலும் அதன் மேற் குப்பக்கமாக விரிந்து பரந்திருந்த புறநகர்களையும் இதனுடன் சேர்த்துக்கொண்டால் அதன் நிலப்பரப்பு 100 கெக்டர்களாக இருக்கும்.

உள் அரணின் ஒவ்வொரு பக்கத்திலும் நுழை வாசல் அமைக்கப்பட்டிருந்தது. அதன் வடக்குத் திசையிலும், கிழக்குத் திசையிலும் இருந்த நுழை வாயில்கள் இரண்டும் திறந்திருக்கக் காணப்பட்ட துடன், படிக்கட்டுகளும், நடைபாதை ஒன்றும் அதற் குப்பக்கமாக உயர்ந்த கூடங்களும் முகப்பில் மிக வும் அழகான மேற்தளமும் காணப்பட்டன. அத் துடன் நடைபாதையின் ஓரமாகக் காணப்பட்ட நல்ல அழுத்தமான கற்பீடங்களும், தூண்களும் இந்துநதிப்பள்ளத்தாக்கு நாகரீகம் நிலவிய இடங் களில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றுடன் ஒப் பிடுகையில் இது ஈடு இணையற்ற கலைப்படைப் புகளாக விளங்குகின்றன.

## ஆயுதக் குறைப்பு (DISARMAMENT)

சர்வதேசரீதியாக இச்சொல் பின்வரும் நான்கு அர்த்தங்களைக் கொண்டுள்ளது.

1. யுத்தமொன்றில் தோல்வியடைந்த நாடொன் றின் ஆயுதங்களை அந்நாட்டிற்கு விதிக்கும் ஒரு தண்டனையாகக்கருதி அழித்துவிடுதல் அல்லது குறைத்துவிடுதல். (1919 – ல் செய் யப்பட்ட வேசைல்ஸ் உடன்பாட்டின் (Ver saillies Treaty) பிரகாரம் ஜேர்மனியினதும் அதன் கூட்டுநாடுகளினதும் ஆயுதங்கள் குறைக் கப்பட்டன.)
2. ஒரு குறிப்பிட்ட பூகோளப்பரப்பை அடிப் படையாகக்கொண்டு இருதரப்பினர் சேர்ந்து செய்துகொள்ளும் ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்யப்படும் ஆயுதக்குறைப்பு. [அமெரிக்கா விலுள்ள ஐந்துபெரும் ஏரிகளின் (Great-Lakes)பரப்பினை ஆயுதங்களற்ற பிரதேசமாக வைத்திருப்பதற்கு அமெரிக்காவும் பிரித்தனியா வும் 1817 வரையில் இப்படியொரு ஒப்பந்தத் தினைச் செய்திருந்தன.]
3. ஆயுதங்களையே அடியோடு அழித்துவிட வேண்டுமென்ற கற்பனைக்கோட்பாடு.
4. ஐ. நா. சபைபோன்ற ஓர் அமைப்பின்வழியே நடைபெறும் கலந்துரையாடல் மூலம் சகல நாடுகளும் தத்தம் ஆயுதங்களின் பெருக்கத் தைக் கட்டுப்படுத்துதல் அல்லது குறைத்தல்.

இறுதியில் கூறப்பட்டிருப்பதே இங்கு வேண் டப்படுவதாகும். அணுவாயுதங்களின் பெருக்கம் அதிகரித்துவருவதால் பாரியளவிலான மக்களழிவு தடுத்துநிறுத்தப்படவேண்டியுள்ளது. முதன்முத லில் 1945-ம் ஆண்டு அணுகுண்டு பயன்படுத் தப்பட்டுவிட்டது. இனிமேலும் பயன்படுத்தப் படுமாயின் மனித நாகரீகம் இருந்த இடம்தெரியா மல் மறைந்துவிடும் ஆபத்துள்ளது.

ஆயுதக்குறைப்புக்கான முயற்சிகள் இரண் டாம் உலகப்போரின் பின்னரிருந்தே நடையெற்று வருகின்றன. ஐ. நா. சபைமட்டத்தில் ஆராயப் பட்டுவருகின்றன. 1970 களில் ஆரம்பித்து நடத் தப்பட்டுவரும் சோல்ற் (Salt) இதற்கொரு உதாரணமாகும்.

102652

# வரலாற்றில் மாறுதல் அடைந்துவரும் பெண்களின் சமுதாயப்படிநிலை

(த ஐலண்ட் - 21.09.93)

திரு. நெப்போலியன் அவர்கள் தன்னால் உருவாக்கப்பட்ட சட்டத்தின் இறுதி நகலை செல்லுபடியாக்குவதற்கு அரசியல் சபையில் 1801-ம் ஆண்டில் சமர்ப்பித்தபோது ''ஒரு கணவன் முழுமையான அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டியதுடன் தன் மனைவியை நோக்கி உனக்குப் பிறக்கும் குழந்தைகள் என்னுடையவையாக இருக்க வேண்டும் ஆகையால் நீ, வெளியே செல்லக்கூடாது, திரையரங்கிற்குச் செல்லக்கூடாது, இந்த ஆட்களை வரவேற்கக கூடாது எனக்கூறும் உரிமையையும் கொண்டிருக்கவேண்டும்'' எனக் கூறினார்.

ஐரோப்பிய மக்களின் சிந்தனையில் புரட்சியை ஏற்படுத்தி புதியயுகம் ஒன்றை உருவாக்க உந்து சக்தியாக விளக்கியதும், சமநிலை, தனியுரிமை சமூகநீதி போன்ற முற்போக்கான கருத்துக்களுக்கு வரலாற்றில் புகழ் வாய்ந்ததுமான பிரான்சில் தன்னிகரில்லாத அரசியல் தலைவராக விளங்கிய திரு. நெப்போலியன் அவர்கள் கூட இப்படியான கருத்து ஒன்றை 19-ஆம் நூற்றாண்டிலேயே வெளியிட்டிருந்தாராயின் உலகத்திலே நாகரீகம் அடைந்த மற்றைய நாடுகளிலுள்ள பெண்கள் அவ்வேளையில் எப்படியான தகுதிநிலையைக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிய பெரும் முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டியதில்லை.

*பெண்களின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதும், காலப்போக்கில் மேலும் பல மாற்றங்கள் ஏற்படும் என்பதும் உண்மையே. தங்கள் உரிமைகள் சிலவற்றைப் பெறுவதில் வெற்றியீட்டிய பெண்கள், மேலும் பல உரிமைகளைப் பெறுவதில் வெற்றியீட்டிக் கொண்டே வருகின்றார்கள்,*

பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ''பால் வேறுபாடற்ற சமநிலை'' ''பெண்களின் விடுதலை'', ''பெண்களின் அடிமை ஒழிப்பு'' மற்றும் ''பெண்ணினத்தின் வெற்றி'' போன்ற சொற்றொடர்களைத் தற்போது பொதுமக்கள் உபயோகிப்பது வழக்கமாகியுள்ளதுடன், தற்போதைய தலைமுறையினர், குறிப்பாக, இளம் தலைமுறையினர், பெண்களின் தகுதிநிலை அப்படிப்பட்டது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். உண்மையிலேயே இவற்றை விடுத்து பெண் ஒருவரை வேறு விதமாக ஒருவர் பேசமுற்பட்டால் அந்தப் பெண்ணின் உள்ளம் புண்ணுற்று அவர், தான் அவமதிக்கப்பட்டுள்ளதாக உணருகின்றார். ஆனால் இந்த விதமாகப் பெண்களைப் பற்றிச் சிந்திப்பது புதிய போக்கு என்பதை அவள் உணராதபோதிலும் பழைய தலைமுறையினர் இதிலுள்ள உண்மையை நன்கு அறிவர். ஆண்கள் அனுபவிக்கும் உரிமைகளிலும், சலுகைகளிலும் சிலவற்றைப் பெண்களும் பெற்றுள்ளார்கள் என்றால் அவை குறுக்குவழிகளாலும், சிறிய முயற்சியாலும் பெறப்படவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்கள் இன்று அனுபவிக்கும் தகுதிநிலையைப் பெறுவதற்குக்கூட மிகவும் நீண்டதும், கசப்பானதுமான போராட்டத்தை நடாத்தவேண்டியிருந்தது. இதன்போது ஏமாற்றத்தையும், தடைகளையும், தோல்விகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

## எங்கள் நாடு

ஆசிரியர் தொழில், தாதிமார் தொழில் மற்றும் மருத்துவமனையிலுள்ள வேறு சேவைகளில் தவிர அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பணிமனைகளில் பெண்களைக் காப்பது எங்கள் நாட்டில் அரிதாகவிருந்தது பெண்களையே பணியாட்களாகக் கொண்டுள்ள சுதந்திர வர்த்தக நிலையத்தையும், அரசாங்கத் தொழிற்சாலைகளையும் நாம் இன்று காண்பதற்கு முற்றிலும் எதிர்மாறாக, எந்தவொரு வர்த்தக நிலையத்திலும் விற்பனையாளராக மிக அண்மைக் காலம்வரை ஒரு பெண்கூட இருந்ததில்லை என்பதை இன்றைய இளைஞர்களும் யுவதிகளும்நம்புவது கடினமான ஒன்றாகும். யுத்த காலத்தில் உருவாக்கப்பட்ட தொழில்களில் பணியாற்ற ஆட்கள் போதாமையால் பெண்கள் அவ்வேலைகளுக்கு அழைக்கப்பட்ட பின் சிறிது சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வழிமுறை காலப்போக்கில் பெரும் எண்ணிக்கையான பெண்களை வேலைக்கமர்த்த வழிசமைத்தது. படைத்துறை மற்றும் காவல்துறை உட்பட பெண்கள் இல்லாத எந்தவொரு துறையையும் இன்று காணமுடியாதிருப்பதுடன் சில துறைகளில் ஆண்களைவிட பெண்களே அதிகமாக இருக்கின்றனர்.

இந்த நாட்டில் 1931ஆம் ஆண்டிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது என்பதை அறியும்பொழுது ஆச்சரியமுறும் நாம், பாராளுமன்ற சனநாயகத்திற்கு வித்திட்ட இங்கிலாந்தில்'

PUBLIC LIBRARY

1918ஆம் ஆண்டளவிலேயே பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதென்பதையும், அதுவும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வழங்கப்பட்டது என்பதையும் அவர்கள் வாக்குரிமை பெறும் வயதை 21 ஆக குறைப்பதற்கு மேலும் 10 ஆண்டுகள் அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது என்பதையும் அறியும் பொழுது இதைவிட ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. மனிதனின் நீண்ட வரலாற்றில் அவன் கொண்டிருந்த அரசியல் சிந்தனைகளினதும், அவன் அமைத்துக்கொண்ட அரசாங்கங்களினதும் பின்னணியில் இதை நோக்குகையில் பெண்கள் தங்கள் அடிப்படை உரிமையை மிகவும் குறுகிய காலமான 60 ஆண்டுகளாகவே அனுபவித்து வருவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. தங்களை ஆட்சி செய்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இல்லாததனால் தங்களுக்காக பாராளுமன்றத்தில் பரிந்து பேச கட்டுப்பாடுடைய ஒருவரை அனுப்ப முடியாத உலக மக்களில் அரைப் பங்கினரான பெண்களை ஆண்களின் ஆதிக்கத்திலிருந்த இந்த உலகம் முக்கியமான சமூக, மற்றும் அரசியல் விவகாரங்களில் எவ்வளவு தூரம் ஒதுக்கி வைத்திருந்ததென்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

## அமெரிக்கா

பல உண்மைகளை உள்ளடக்கிய அரசியல் யாப்பைக் கொண்ட அமெரிக்காவில், மிக அண்மைக் காலமான ஒரு நூற்றாண்டுக்கு முன் கூட பெண் பிள்ளைகள் கல்வியில் புறக்கணிக்கப்பட்டதை யிட்டுஅவர்களின் பெற்றோர்கள் கவலைப்படவில்லை. இன்று நிலைமை மாற்றமடைந்துள்ள போதிலும், பெண்கள் ஆலோசனை கூறக்கூடிய நிலையில் மாத்திரம் இருப்பதாலும் ஆண்கள் தாங்கள் நினைத்தவாறு அவற்றைச் செயற்படுத்துவதாலும் உலகம் ஆண்களின் ஆதிக்கத்தில் இருப்பதாகவே பெண்கள் கருதுகின்றார்கள். பெண் ஒருவர் அமெரிக்காவின் சனாதிபதியாவதற்கு எதிராக அதன் அரசியல் யாப்பில் எதுவும் கூறப்படாததால், எதிர்காலத்தில் அதன் சனாதிபதியாகப் பெண் ஒருவர் வர இடமுண்டு இருப்பினும் இன்றைய அமெரிக்க சமூகத்தை நோக்குகையில் இது அண்மைக்காலத்தில் நடைபெறப்போவதாகத் தெரியவில்லை.

உலகத்தின் முன்னேற்றமடைந்த சமூகங்களில் கூட பெண்கள் எப்படியான நிலையிலிருந்தார்கள் என்பதை அறிவதற்கு வரலாற்றை ஆராய்வது பொருத்தமானதாகும். பொடிசியா, (Boedecia) ஜோன் ஒவ் ஆர்க், (Joan of arc) ஜான்சிகி இராணி, (Jansike Rani) விகார மகாதேவி, (Vihara Maha-Devi) மற்றும் எலிசபெத் மகாராணியார் (Queen Elizabeth) போன்ற புகழ் பூத்த பெண்கள் மனிதனின் நீண்ட வாழ்வில் பதவியிலிருந்து தங்கள் மக்களின் விதியை நிர்ணயித்ததுடன் போர் முனையில் ஆண்களுக்குத் தலைமை தாங்கியுள்ள போதிலும் இப்படி உயர்ந்த நிலையை எட்டிய பெண்களின் தொகை மிகவும் குறைவாக இருந்ததுடன் அது ஒரு விதிவிலக்கும் ஆகும். மறுபுறத்தில் வரலாற்றை நாம் பின்நோக்கிப் பார்க்கின் பெண்கள் தங்கள் முடிவில்லாத கடும் உழைப்பையும், வியர்வையையும், துன்பங்களையும் தங்கள் தலைவனும் எசமானுமான ஆணினதும், அவனால் கொடுக்கப்பட்ட பிள்ளைகளினதும் சேவைக்காக அர்ப்பணித்து துன்புறுவதையே தங்கள் பிறப்புரிமையாகக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர். என்ற உண்மை நிலையை அறியக்கூடியதாகவிருக்குன்றது. அவர்களுக்குச் சேவை செய்வதற்காகத் தினந் தோறும் 18 மணித்தியாலங்களாக அல்லலுறும் அவள், அதற்குப் பிரதியுபகாரமாகச் சிறு நன்மையே பெறுகின்றாள்.

## வேறுபாடு

கல்வியிலும் சமுதாய முறையிலும் முன்னேற்றமடைந்த நாடுகளில் இதில் சிலவேறுபாடுகள் இருந்தபோதிலும், பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில், குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில், இந்தப் போக்கே காணப்படுகின்றது. அதிகாலையில் வீட்டிலுள்ள அனைவருக்கும் முன்நித்திரை விட்டெழும் பெண், அந்த நேரத்திலிருந்து ஓய்வின்றித் துப்பரவு செய்தல், தூர்த்துப் பெருக்குதல், கோதுமையை இடித்து அரைத்தல், சமைத்தல், துணிகளைத் தூவைத்தல், கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் உணவளித்தல் போன்ற வீட்டு வேலைகளை நித்திரைக்குச் செல்லும்வரை செய்யவேண்டியிருப்பதுடன், வயலில் கிண்டுவதற்கும், விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் தனது கணவனுக்கு உதவுவதுடன் மந்தையையும் மேய்க்க வேண்டியுள்ளது. மற்றைய யாவருக்கும் உணவளித்தபின் எஞ்சியுள்ளதை எல்லோருக்கும் கடைசியாக உண்ணும் அவள் உறங்குவதற்கும் கடைசியாகவே செல்வாள்.

கிழக்கு அல்லது மேற்கு நாடுகளின் பழைய சமூகத்தில் நிலவிய சமூகப்படி நிலையை எவரும் ஆராய்வார்களாயின், குடும்பத்திற்குள் மட்டுமன்றி முழுச் சமூகத்திலும் பெண்கள் இரண்டாவது நிலையில் வைக்கப்பட்டிருந்ததைச் சந்தேகமின்றி அவர்களால் காணக்கூடியதாகவிருக்கும். புராதன இந்து சமூகத்தில் ஆண்களின் மேலாதிக்கம் பெண் எப்படிக் கருதப்பட்டாள் என்பதையும் குடும்பத்தில் அவளுக்கு இருந்த நிலையையும் தெரியப்படுத்துகின்றது. இதை "காவியசேகரா" (Kavyasekera) என்ற சிங்கள காவியம்,

> "பயணத்தை மேற்கொண்டிருந்த உனது கணவன் வீடு திரும்பியதும் அவரது கால்களைக் கழுவ பணியாட்களை ஏவாது நீயே அதைச் செய்ய வேண்டும்" எனக்கூறி விளக்குகின்றது.

பெண்ணைப்பற்றி இந்தியாவும், இலங்கையும் கொண்டிருக்கும் கருத்தை இந்த வசனம் ஒன்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். ஆதாமின் வல

எலும்பிலிருந்தே ஏவாள் படைக்கப் பட்டாள் என விவிலிய நூலில் கூறப்பட்டிருப்பது பெண்கள் ஆண்களைவிடக் குறைந்த நிலையிலுள்ளவர்கள் என்ற கருத்தை உருவாக்குகின்றது. பெண்கள் இதைத் தொடர்ந்து ஏற்று வந்ததே வியப்பை ஏற்படுத்துவதாகவுள்ளது

புராதன காலத்தில் தலைசிறந்த நாகரீகத்தைக் கொண்டு விளங்கிய மக்களைக் கொண்ட கிரேக்க நாடும், உரோமாபுரியும் பெண்களைப் பற்றி எப்படிக் கருதியிருந்தன என்பதை அறிந்து கொள்வது ஆர்வத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. கிரேக்க மக்கள் தங்கள் பெண்களைப் பற்றி எப்படியான மனப்பாங்கைக் கொண்டிருந்தனர் என்பதை எல்லோரும் நன்கு அறிவர். புராதன காலத்தில் இருந்த அரசாங்கங்களில் முற்போக்கானதும், சனநாயகக் கோட்பாட்டைக் கொண்டதும் எனக் கருதப்பட்ட ஏதென்ஸ் ஆணுக்குச் சமமாக நடாத்தப்படுவதற்குப் பெண்கள் தகுதியற்றவர்கள் எனக் கருதியிருந்தது. அவர்களது இலக்கியத்திலும், சட்டங்களிலும் சமூக அமைப்புக்களிலும் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்ததை அவர்களின் வரலாற்றை நாம் கற்றபோது அறியக் கூடியதாகவிருந்தது. வீட்டிலே பெண்களுக்கு எனத் தனியான தங்குமிடங்கள் இருந்ததுடன் கணவர்கள் தங்கள் விருந்தாளிகளை உபசரிக்கும்போது பெண்கள் அதில் கலந்துகொள்வதில்லை.

## கிரேக்கர்கள்

கிரேக்கர்களின் சமுதாயத்தில் பெண்களின் தகுதிநிலை எப்படி இருந்ததென்பதை விளக்குவதற்கு பேராசிரியர் எச். டி. எப். கிற்றோ (Prof. H. D. F. Kitto) அவர்கள் தான் எழுதிய ''கிரேக்கர்கள்'' (The greeks) என்ற நூலில் முழு அத்தியாயம் ஒன்றைப் பயன்படுத்தியுள்ளார். ஆசை நாயகிகள் (Hataerae) என அழைக்கப்பட்ட குழாம் ஒன்று கிரேக்க சமுதாயத்தில் இருந்ததாகவும், ஆண்களின் மதுபான விருந்துகளிலும் கேளிக்கையிலும் அவர்கள் கலந்து கொண்டதாகவும், அதற்காக அவர்கள் பயிற்றப்பட்டும் இருந்ததாகவும், அவர்கள் விலைமாதராக இருந்ததால் தங்கள் மரியாதையை இழப்பதற்குக் கவலைப்படவில்லை எனவும் அவர் தனது நூலில் கூறியுள்ளார். இப்படியான வாழ்வை நடாத்த வசதிபடைத்தவர்களின் ஆசை நாயகிகளாகச் சில பெண்கள் இருந்ததாகவும், ஏதென்ஸ் நாட்டின் தலைசிறந்த அரசியல் மேதையான பெரிக்கில்ஸ் அவர்கள் (Poricles) புகழ் பெற்று விளங்கிய அஸ்பேசியா (Aspasia) என்ற பெண்ணை ஆசை நாயகியாக வைத்திருந்ததாகவும் தெரிகின்றது. அதே பெரிக்கில்ஸ் அவர்களே தனது சிறப்பு மிக்க மரணச் சடங்குப் பேச்சொன்றில் '' நல்லதோ கெட்டதோ ஆண்களின் மத்தியில் பெண் ஒருவர் பேசப்படாதிருப்பதே அவருக்குக் கிடைக்கக்கூடிய ஆகக்கூடிய மரியாதையாகும் ' எனக்கூறியுள்ளார்.

குடும்பத்தின் தலைவரான தந்தையைக் குறிப்பதற்குத் ''தந்தைக் குடும்பமுறை'' (Pater Familias) என்ற சொல்லை றோமானிய சமூகத்தில் உபயோகித்தனர். அவரே குடும்பத்தின் ஒப்புயர்வற்ற சர்வாதிகாரியாக இருந்ததுடன், கொள்கை ரீதியாகவேனும் அவரே தனது மனைவி, குழந்தைகள் மற்றும் அடிமைகள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமையையும் கொண்டிருந்தார். தனது மனைவிக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரத்தை அவர் கொண்டிருந்ததுடன் அப்படி அவர் மேற்கொள்ளும் தீர்மானம் மாற்ற முடியாததாகவும் இருந்தது. இப்படியான தண்டனை அபூர்வமாகவே வழங்கப்படுவது உண்மையேயாயினும், அப்படி ஒருவர் தீர்மானத்தை மேற்கொண்டுவிட்டால் சட்டநடவடிக்கை எதையும் அதற்கு எதிராக மேற்கொள்ள முடியாது. இது விடயமாக அயலவர்கள் பரிந்து பேச முன்வருவது உண்மையேயாயினும் சினங்கொண்ட கணவர்கள் அவர்களைப் புறக்கணித்த சந்தர்ப்பங்களும் உண்டு.

இந்துமத சமுதாயத்தில் பெண்கள் எப்படிக் கருதப்பட்டார்கள் என்பதைக் கூறவந்தபோது அவர்கள் அந்தச் சமுதாயத்தில் மிகவும் கீழான நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தார்கள் என்பதை ஏற்கனவே கூறியிருந்தோம். கிழக்கு உலகிலுள்ள மற்றைய நாகரீகமான சமுதாயங்கள் பெண்ணை எப்படிக் கருதின என்பதை வாசகர்கள் அறியும்போது அது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும். மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட படைப்பாக விளங்கும் ''எனது நாடும் எனது மக்களும்'' (My Country are my people) என்ற நூலில் அதன் ஆசிரியரான திரு. லின் யூதாஸ் (Lin yutang) அவர்கள், புராதன காலத்திலும், தான் வாழ்ந்த காலத்திலும் (இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்கள்) சீனாவின் சமூகப்படி நிலை எப்படி இருந்ததென்பதைத் தெளிவாக விளக்குகின்றார். நாட்டுப்பாடல் ஒன்றைச் சுருக்கமாகத் தொகுத்து இதை அவர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

> ''ஆண் குழந்தை ஒன்று பிறந்தவுடன் அது மெத்தையில் படுக்கவிடப்பட்டு அது விளையாடுவதற்கு பச்சை மணிக்கல் வழங்கப்படுகின்றது. ஆனால் பெண்குழந்தை பிறந்தாலோ அதுதரையில் படுக்கவிடப்பட்டு அது விளையாடுவதற்கு ஓடு ஒன்று வழங்கப்படுகின்றது.''

காலப்போக்கில், குறிப்பாக, கொம்பியூசியசின் தத்துவம் (Confucianism) மக்களிடையே விடுதலை உணர்வை ஏற்படுத்தியதன் விளைவாகப் பெண்களைப்பற்றிய கருத்தில் மாற்றம் ஏற்பட்டபோதிலும் பணம்படைத்தோர் பெண்ணை ஆணின் பாலுறவுக்காக உருவாக்கப்பட்ட கவர்ச்சிப்பொருளாக கருதி வந்துள்ளனர். ஆண்களை மகிழ்விப்பதற்காகத் தங்களைத் துன்பத்திற்கு உட்படுத்திக்கொள்ளும் அதிசயமான வழக்கமான ''காற்கட்டுக்கு'' (Foot binding) பெண்கள் தங்களை உட்படுத்திக் கொண்டது. பெண்

களைப்பற்றி ஆண்கள் எப்படியான மனப்பான்மையைக் கொண்டிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இருப்பினும் பரட்சிக்குப் பின் கொள்கை அளவிலேனும் சீனாவிலுள்ள பெண்கள் தற்போது விடுதலையடைந்துள்ளபோதிலும், பழமை பேணுபவர்கள் இதை வரவேற்கவில்லை.

சிறப்புரிமைகள்

இன்று பெண்ணின் விடுதலைபற்றிப் பேசுவது சுலபமானதாக இருந்தபோதிலும் அவள் தனது சுதந்திரத்தையும், உரிமைகளையும் எவ்வளவு தாமதமாகியும், நீண்ட காலத்திற்குப் பின்பும் பெற்றாள் என்பதையும், இவற்றைப்பெற அவள் எவ்வளவு தூரம் போராடவேண்டியிருந்தது என்பதையும் இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம். எங்களுக்குத் தெரிந்திருப்பவற்றை ஆதாரமாகக்கொண்டு, ஆணிற்குச் சரிநிகர் சமானமாகப் பெண்ணை நடாத்தக்கூடிய தகுதி அவளுக்கு உண்டா? என ஒருவர் கேட்கக்கூடும். அப்படியாக இருந்தால் எந்தவகையில் அவள் குறைவாக இருக்கின்றாள்? உடல் ரீதியாக ஒருவேளை அவள் அப்படி இருந்தாலும் உள ரீதியாகவும், ஆத்மரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் அவள் எந்த விதத்திலும் ஆணுக்கு குறைந்தவள் அல்ல என்பதை ஆணித்தரமாகக் கூறமுடியும்.

எவருக்கும் கிட்டாத ஆடம்பர வாழ்க்கையை வாழக்கூடிய வசதியைப் பெற்றிருந்தவளும், பாணுக்கும், கேக்குக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறியாதவளுமான மாரி அந்தோனியற் (Marie Antoniette) என்ற பெண் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் சிறைச்சாலை அதிகாரிகளினால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டபின் தூக்கிலிடுவதற்காகத் தன்னை வெளியேகொண்டு செல்லும்போது தனது தலைதற்செயலாகச் சுவருடன் மோதியதைக் கண்ட சிறைஅதிகாரி "நோகின்றதா" என வினவியபோது "தற்போது என்னை எதுவும் நோகச்செய்யாது" எனத் துணிவுடனும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் பதிலளித்ததுடன், தூக்குமேடையிலுள்ள தலைவெட்டும்பொறியில் ஏறும்போது தன்னைத் தூக்கிவிடுபவனின் காலை தற்செயலாக மிதித்தபோது கட்டுப்பாடாகவும், அடக்கமாகவும் வளர்க்கப்பட்ட தனது பண்பாட்டுக்கு அமைய "என்னை மன்னிக்கவேண்டும்" எனக்கூறியதை நோக்குகையில், பெண்கள் எவ்வளவு உறுதிவாய்ந்தவர்கள் என்பதை விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கின்றது. தவறாகப் புரிந்துகொண்டு வீண் பெருமை பேசும் ஆண்கள் நினைப்பதுபோல் வலுக்குறைந்தவர்கள் அல்லர்.

பெண்ணைத் தாயாகவும், மகளாகவும் கருதிய மனிதன் தனது காமப்பசியைத் தணிக்கும் கருவியாக அவளைக் கருதியதன் காரணமாகவே உரைநடைகளிலும், கவிதைகளிலும், பாடல்களிலும், நடனங்களிலும் அவளின் அழகைப் போற்றி அதனை நீடித்து நிலைத்திருக்கச் செய்துள்ளான். தாஜ் மஹால் போன்ற நினைவாலயங்கள் பெண் மீது வைத்த காதலால் உருவாகிய ஆத்மீகமானதாக இருந்த போதிலும் தாந்தே (Dante) தனது காதலியைத் தேடியே நகரத்திற்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அவள் பேராலேயே அவன் பல வீரச் செயல்களை ஆற்றியுள்ளான். அவள் காரணமாகவே நீண்ட யுத்தங்களை அவன் நடாத்தியுள்ளான். "ஆயிரம் கப்பலைக் கட்டியெழுப்ப வைத்தது பெண்ணின் வதனமே" என ஹோமர் (Homer) கூறியுள்ளார். ஆணின் திறமையை அவளே வெளிக்கொணர்ந்திருக்கின்றாள் இவை அனைத்தையும் செய்ய வைத்த அவளுடைய கவர்ச்சியே காலத்துக்குக் காலம் அவளுக்கு அழிவையும் ஏற்படுத்தியது.

மோசமானது

ஆண் மிகவும் மோசமாக நடப்பதற்கும் இதுவித்திட்டது. ஆண்களால் பெண்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். போரின் இறுதியில் அல்லது போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 16 வயதிலிருந்து 60 வயது வரையிலான பெண்கள் எவரும் விட்டுவைக்கப்படவில்லை. (சில வேளைகளில் இந்த வயதெல்லை சிறிது கூடுதல் அல்லது குறைந்ததாகவும் இருந்திருக்கின்றது) என வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். யுத்தம் ஒன்றின்பின் பெண்கள் மந்தைபோல் ஒன்றுசேர்க்கப்பட்டு வெற்றியின் முதலாவது பரிசாக போரில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டனர்.

இறுதியாக, பெண்களின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதும், காலப்போக்கில் மேலும் பல மாற்றங்கள் ஏற்படும் என்பதும் உண்மையே தங்கள் உரிமைகள் சிலவற்றைப் பெறுவதில் வெற்றியீட்டிய பெண்கள், மேலும் பல உரிமைகளைப் பெறுவதில் வெற்றியீட்டிக்கொண்டே வருகின்றார்கள். இருப்பினும் அவள் என்னதான் வெற்றிகளை ஈட்டியபோதிலும் ஆணின் துணையின்றி அவளால் வாழமுடியாதாகையால் ஆண்களின் ஆதிக்கத்திற்கும் கொடுமைகளுக்கும் முகங்கொடுத்தே அவள் வாழவேண்டியுள்ளது.

# அரசாங்கத்தின் யுத்த தந்திரத்திற்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த தந்திரம்

ராவனா
(ஐலண்ட் - 05.12.93)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரும் அதன் இராணுவத் தளபதியுமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள், தனது 39-ஆவது பிறந்த தினத்தை நவம்பர் மாதம் 26-ம் திகதி கொண்டாடினார். அவர் மேலாண்மையில் இருக்கும் இறுதியாண்டாக இது அமையுமென கீழைத்தேச சோதிடர்கள் ஆருடம் கூறுகின்றனர். ஆனால் நவம்பர் மாதம் 26-ம் திகதி நள்ளிரவு நடாத்தப்பட்ட மாவீரர் நினைவுதின விழாவில் வெளியிடப்பட்ட அறிக்கை, தமிழ் மக்களுக்கு சுதந்திரமான ஒரு தனி நாட்டை உருவாக்க வேண்டும் என்ற அவரின் தளரா மனவுறுதியைப் பிரதிபலிப்பதாகவிருந்தது.

''சிங்களப் பேரினவாதிகளின் தீவிரப்போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் ஒருபோதும் நம்பவில்லை. அப்படி மாற்றம் ஒன்று ஏற்பட்டாலன்றி தமிழ் மக்கள் நீதியை ஒருபோதும்பெறவியலாது. சிங்களப் பேரினவாதிகளின் தீவிரப் போக்கு, தமிழீழ மக்கள் தனிநாடு ஒன்றை அமைக்கவே வழிவகுத்துள்ளது. அந்த வழியில் செல்வதைத்தவிர வேறு வழியொன்றும் எமக்கு இல்லை. எமது விடுதலை இயக்கம் பல தியாகங்களைச் செய்து கொண்டு அந்த வழியில் வீறுநடை போடுகின்றது. கற்களும், முட்களும், காட்டு மிருகங்களும், கொடிய நச்சுத் தன்மையயுடைய ஜந்துகளும் நிறைந்துள்ள இவ் வழி துன்பத்தைக் கொடுப்பதாக இருக்கின்றபோதிலும் எமது மாவீரர்கள் வழிகாட்டிச் சென்ற பாதையில் நாமும் எமது பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்வோம். அந்தப்பாதையிலுள்ள கற்கள், முட்கள் ஆகியவற்றை அகற்றியும் காட்டு மிருகங்களையும், நச்சுத் தன்மையான விஷ ஜந்துக்களைக் கொன்றும் அவர்கள் அதை ஒளி நிறைந்த நம்பிக்கையூட்டும் பாதையாக உருவாக்கியுள்ளார்கள். எங்கள் மாவீரர்களால் ஏற்பட்ட கலங்கரை விளக்கு மூலம் தெளிவாகத் தெரியும் சுதந்திரத்தை அடைவதற்த இந்த சிறப்புமிக்க பயணத்தை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வோம்'' எனத் திரு. பிரபாகரன் அவர்கள் கூறியுள்ளார்.

> *விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் போரிடுவது போன்று அரசாங்கமும் விடுதலைப்புலிகளை எல்லாத் துறைகளிலும் எதிர்கொள்ள ஏன் நினைக்கவிலலை. இராணுவரீதியிலும், பொருளாதார ரீதியிலும், அனைத்துலக ரீதியிலும் விடுதலைப்புலிகள் அரசை நெருக்குதலுக்குள்ளாக்கும் அதேவேளை அரசு இராணுவரீதியில் மட்டுமே விடுதலைப்புலிகளை எதிர்க்கின்றது.*

திரு. பிரபாகரன் அவர்களின் இந்த அறிக்கையிலுள்ள மூன்று கருத்துக்கள் ஆராயப்படவேண்டியவை ஆகும்.

சிங்களப் பேரினவாதத்தை அரசாங்கம் எப்போதும் வளர்த்துவருகின்றது என அவர் கொண்டிருக்கும் கருத்து முதலாவதாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். திரு. பிரபாகரன் அவர்கள் எப்படி விளையாடுகின்றார் என்பதை இலங்கை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவேண்டும். தமிழ்த்தேசியவாதம் என்ற போர்வையில் திரு. பிரபாகரன் அவர்கள் தனது யுத்தத்திற்கான ஆதரவைத் திரட்டி வருகின்றார். சிங்களப் பேரினவாதத்தின் காரணமாகத் தமிழ் தேசியவாதம் தோன்றியதா? அல்லது இயல்பாகவே உண்டானதா? என்ற வினா இங்கு எழுகின்றது. பெரும்பான்மைச் சமூகம் இத்தருணத்திலாவது திரு. பிரபாகரன் அவர்கள் விரித்துள்ள வலையினுள் விழாமல் சிறுபான்மைச் சமூகத்தினர் பால் கூடிய பெருந்தன்மையைக் காட்டமுடியாதா? ஜனாதிபதி அவர்களின் அனைத்துலக விவகார ஆலோசகரானதிரு. பிராட்மன் வீரக்கோன் அவர்கள் மனக்கவலையுடன் கூறியதைப்போன்று இந்தநாட்டு அரசியற்தலைவர்கள் தெளிவாகத்தோன்றும் ஓரிரண்டு விடயங்களைப் பார்க்கின்றார்களே தவிர வேறெதையும் சிந்தித்தும்பார்ப்பதில்லை. தமிழ் மக்களைத் தங்கள்பால் ஈர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கக் கூடாதா? விடுதலைப் புலிகளின் நடவடிக்கையால் பாதிப்புற்ற தமிழ்க்கட்சிகளுடனும், தீவிரவாதக் குழுக்களுடனும் இணைந்து அரசாங்கம் செயலாற்ற முடியாதா?

எதிரியை எதிர்கொள்வதற்கு தனக்குரிய அனைத்து வளங்களையும் மனப்பூர்வமாகவும் அளப்பரிய திறமையுடனும் பயன்படுத்தும் திரு. பிரபாகரன் அவர்களின் மனோதிடம் இரண்டாவதாக ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் போரிடுவது போன்று அரசாங்கமும் விடுதலைப்புலிகளை எல்லாத்துறைகளிலும் எதிர்கொள்ள ஏன் நினைக்கவில்லை. இராணுவரீதியிலும், அரசியல் ரீதியிலும், பொரு

ளாதார ரீதியிலும், அனைத்துலக ரீதியிலும் விடுதலைப் புலிகள் அரசை நெருக்குதலுக்குள்ளாக்கும் அதேவேளை அரசு இராணுவரீதியில் மட்டுமே விடுதலைப் புலிகளை எதிர்க்கின்றது. இந்தத்துறைகள் ஒவ்வொன்றிலும் விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்கு பயிற்சி அல்லது முயற்சி இல்லாமையே முதலாவது காரணமாகும். இதற்குப் பொறுப்பாளி யார்? அரசியற் தலைமைப்பீடம் ஆட்சியாளர்களை வற்புறுத்தி ஒன்றோடொன்று தொடர்பான இரண்டு திட்டங்களை வடக்குக்கும், கிழக்குக்கும் வகுக்கச் செய்து அவற்றை வடக்குக்கும், கிழக்குக்கு மான தங்கள் திட்டங்களுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும் வாழும் தமிழ் மக்களுக்கிடையில் நிலவும் வேறுபாடுகளையும் தெருக்கள், நீர்விநியோகம், வீடமைப்பு, சுகாதாரம் ஆகிய உள்ளகக் கட்டமைப்புகளில் கிழக்கு அடைந்துள்ள முன்னேற்றத்தையும் முனைப்புடன் எடுத்துக்காட்டாமை அரசியல் ரீதியில் ஒரு பெரிய குறைபாடாகும்.

பொருளாதார ரீதியிலான தந்திரோபாய முறை எதுவும் அரசாங்கத்திடம் கிடையாது. அரசாங்க அதிபரினால் அண்மையில் வெளியிடப்பட்ட கூற்று, வடக்கில் உணவுப்பற்றாக்குறை இல்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. எளிதில் உணவு கிடைக்கச் செய்வதற்கான நன்மதிப்பை விடுதலைப் புலிகள் தங்களுடையதாக ஆக்கிக் கொண்டதுடன், அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருப்பதற்கும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலிருப்பதற்கும் வேறுபாடு எதுவுமில்லை என மக்களை நம்பவைக்கின்றனர்கள். திரு. ரஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் அனைத்துலக ரீதியில் தங்கள் மதிப்பை அவர்கள் இழந்துள்ளார்கள். அதை எதிர்நோக்கும் முகமாக சிறப்புமிக்க தந்திரோபாயம் ஒன்றை விடுதலைப் புலிகள் வகுத்துள்ளார்கள். பெரும் பரபரப்பான பிரச்சாரத்தில் தங்கள் காலத்தை செலவிடாது குறிப்பிட்ட ஒரு சில செய்கைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றார்கள். மனித உரிமை நிறுவனங்கள்மீது அவர்களது கவனம் தற்போது திரும்பியுள்ளது. அரசசார்பற்ற அபிவிருத்திச் சங்கங்கள்மூலம் அவர்கள் தங்கள் கருமங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்கின்றார்கள். எங்கள் வெளிநாட்டுத் தூதரகங்களில் ஒரு சிலவற்றைத்தவிர அநேகமான தூதரகங்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்யவில்லை.

மூன்றாவதாக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்கு எப்படியான ஈவிரக்கமற்ற முறையைக் கையாளுகின்றார்கள் என்பதை திரு. பிரபாகரன் அவர்களின் அறிக்கை வெளிக்காட்டுவதாக உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் அவர் உரையாற்றிய போது "ஈழத்தைப் பெறுவதற்கான பாதையில் இருந்து நாம் விலகிச் செல்வோமாயின், இதைப் பெறுவதற்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம்செய்த மாவீரர்களின் ஆவிகள் வந்து எங்களுக்குத் தீங்குவிளைவிக்கும் எனக்கூறியுள்ளார். பொருளற்ற இந்தப் போரிலே 6000க்கும் மேற்பட்ட விடுதலைப் போராளிகள் இறந்ததுடன் அதைப்போல மூன்று மடங்குக்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களும் அழிந்துபோயினர் என்பதை திரு. பிரபாகரன் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். நன்மைபயக்காத இந்தப் போரில் தமிழ் மக்கள் உயிரிழக்கின்றார்கள் எனத் தமிழ் மக்களை நம்பவைக்கவேண்டிய தங்கள் கடமையிலிருந்து திறமைவாய்ந்த மந்திரி டிரோன் பெர்னாந்து அவர்களின் கீழுள்ள தகவல் ஒளிபரப்பு அமைச்சு தவறிவிட்டது. 1974-ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகள் போராடிவருகின்றார்கள். திரு பிரபாகரன் அவர்கள் தனது 20 ஆண்டுகால ஓயாத போராட்ட வாழ்க்கையை அடுத்த ஆண்டு நிறைவுபடுத்துகின்றார். கடந்த காலத்தில் தமிழ்மொழியில் அரசாங்கம் எவ்வளவு துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டுள்ளது? வடக்கிலுள்ள மக்களின் நன்மைக்காக வானொலியின் தமிழ்சேவையில் ஒரு அலைவரிசையை உருவாக்கியுள்ளதா? வேறுதிசைகளில் வெளிவரும் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களைத் திருத்துவதைத்தவிர வேறு எந்தக் கடமையை தகவல்துறைப் பணிப்பாளர் செய்துள்ளார்? ஈழத்தை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்தாலும் இந்தியா ஒருபோதும் அதை அனுமதிக்காது என்பதை வடக்கிலுள்ள மக்களுக்கு தகவல்துறை மேலாளர்கள் தெரிவிக்கவேண்டும். ஈழம் பெறப்பட்டால் தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாதத் தமிழர்கள் அதை ஒரு தளமாகப்பாவித்து ஒன்றுபட்ட இந்தியாவிலிருந்து தமிழ் நாட்டைப் பிரித்தெடுக்க முயல்வர் என்ற அபிப்பிராயம் புதுடில்லியிலுள்ள இந்திய ஆளும் வர்க்கத்தினரிடம் தற்போது நிலவுகின்றது. அத்துடன் விடுதலைப் புலிகளின் கிளர்ச்சி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக் கூடியளவுக்கு அப்பால் சென்றால் இந்தியப்படையினர் இலங்கை மீது நடவடிக்கை மேற்கொள்வர் என்பதில் சந்தேகமில்லை. திரு ரஜீவ்காந்தி அவர்களின் கொலை பற்றிய பூர்வாங்க விசாரணை முடிவடைந்ததுடன் அவ்வழக்குவிசாரணை 1994-ம் ஆண்டுஜனவரிமாதத்தில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வழக்கு விசாரணையின் முடிவுகள், தமது பிரதேசத்திற்கு அப்பால் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை இந்தியப்படைகளிடம் கையளிப்பதை அண்மையில் நிறைவேற்றியுள்ளமையையும் பதவியிலுள்ளவர்களும், பதவியில் இல்லாதவர்களும் மானபிரபலமான இந்தியர்கள் கொடுத்துவரும் நெருக்குதல்கள் ஆகியவற்றையும் பார்க்கும்போது இலங்கையின் மீது இந்தியா தலையிடும் சாத்தியக்கூறு உண்டு என்று தெரிகின்றது.

இந்த விடயங்களைப் பற்றி திரு. பிரபாகரன் அவர்களும் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு

102652

வேளை இன ரீதியாகக் காணப்பட்டாலும் சுயநலமற்ற முறையில் அவர் இந்தப் போரை கடுமையான முறையில் நடாத்தியுள்ளார். எங்களுடைய சில அரசியல் வாதிகளைப் போலவும் ஆளும் வர்க்கத்தினர்களைப் போலவும் அவர் தந்திரமான முறையில் நிதி சேர்க்கவும் இல்லை, அப்பாவித் தமிழ் மக்களின் நிதி மூலம் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கவுமில்லை. காலம் மாற்றமடைந்து வரும் வேளையில் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு தனது மக்களுக்குக் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதே அவர் செய்ய வேண்டிய செயலாகும். திரு. ஆர். பிரேமதாசா அவர்களைக் கொன்றமை, பல்லாயிரக் கணக்கான படைவீரர்களைக் கொன்றமை, சிங்களக் கிராம மக்களை அழித்தமை ஆகிய குற்றச் செயல்களுக்காக அவருக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம். அவருக்குப் பொது மன்னிப்பை வழங்கும் படி இந்தியாவையும் தூண்டலாம். பாலஸ்தீனியர்களும், இஸ்ரேலியர்களும் பேசமுடியுமானால் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் உடன்பாட்டிற்கு வருவது முடியாத காரியம் ஆகாது.

வடக்கிலும், கிழக்கிலும் நிலவும் கிளர்ச்சியை வெற்றி கொள்ள வேண்டுமாயின் போர் புரியும் தங்கள் படைவீரர்களை ஊக்குவிப்பதிலும் பார்க்க விடுதலைப் புலிகளை அனைத்துத் துறைகளிலும் கட்டுப்படுத்துவதற்கு நிர்வாக ரீதியான திட்டங்களையும் வேறு செயற்திறன் வாய்ந்த திட்டங்களையும் உருவாக்க வேண்டிய அவசியத்தை இலங்கை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். முதலாவதாகப் பேச்சு வார்த்தைக்காக ஒரு கதவு எப்போதும் திறக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவது சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் காவற்துறையினரின் கட்டுப்பாட்டின்கீழ் கிழக்குமாகாணம் கொண்டுவரப்படுவதுடன் அங்குள்ள மக்களை அமைதிப் படுத்துவதற்கான பயன் தரும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு நிர்ப்பந்திக்கும் வகையில் அரசியல், இராணுவ ரீதியான அணுகுமுறை கையாளப்படவேண்டும்.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும், வவுனியாவிலும் குறிப்பிடத்தக்க மூன்று சம்பவங்கள் நடைபெற்றன. யாழ் ஏரியை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான ஒரு திட்டத்தைத் தயாரிப்பதற்காக பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள் குழுவொன்று விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடியது. குடாநாட்டில் ஆரம்பித்து வடக்கையும் கிழக்கையும் அபிவிருத்தி செய்வதைப் பொறுப்பேற்றிருக்கும் விடுதலைப் புலிகளின் பொருளாதாரப் பிரிவின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (Teedor) நடாத்திய பல கூட்டங்களில் இது ஒன்றாகும். புத்திஜீவிகளின் ஒரு பிரிவினருக்குள் விடுதலைப் புலிகள் திரும்பவும் இடம் பிடித்துக் கொண்டதை இது எடுத்துக்காட்டுவதாக உள்ளது. நோர்வேயிலுள்ள ''நோவிப்'' (Novib) நிறுவனத்திடமிருந்து கூடிய நிதியைப் பெறுவதும், பெரும்பாலும் ஐரோப்பியர்களைக் கொண்ட அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் கொழும்பில் கூடி விடுதலைப் புலிகளுடனான நிலைப்பாட்டில் இலங்கை அரசாங்கம் கொண்டுள்ள போக்குக்கு எதிராக அனைத்துலக ரீதியில் பிரச்சார வேலையில் ஈடுபடுவதற்கு நல்ல அறிவாற்றல் பெற்ற வெளிநாட்டவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என தீர்மானித்தது. அவ்வாறு நியமிக்கப்படுபவர் மேற்குலக நாடுகளின் தலைநகர் ஒன்றில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டிருப்பார் எனவும் இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளிடையேயும் நிறுவனங்களிடையேயும் அதற்கு உதவி வழங்க வேண்டும் என தெரிவித்துப் பிரச்சாரம் செய்வார் எனவும் அறியப்படுகின்றது. திறமையின்மை காரணமாகவோ அல்லது அக்கறையின்மையாலோ வெளிவிவகார மற்றும் கொள்கை வகுத்தல், திட்டமிடல் அமைச்சுக்கள் இதில் போதிய கவனம் செலுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் தமிழ் மாணவர்களுக்கு போதியளவில் பல்கலைக் கழக அனுமதி வழங்கப்படவில்லை என்பதற்காக தமிழ் இளைஞர்களை ஒன்று சேர்த்து அவர்களின் ஆதரவைப்பெற்று அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் வவுனியாவில் புளொட் இயக்கத்தால் எடுக்கப்பட்டது. தாண்டிக் குளத்திலுள்ள சோதனைச் சாவடியில் நாளொன்றுக்கு இரண்டு லட்சம் ரூபாவை அறவிட்டுவரும் புளொட் இயக்கத்தினர் தங்கள் வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் விட்டுக் கொடுக்காத பிடிவாதத் தன்மையினால் படிப்பதற்கான சாதகமான நிலை யாழ்ப்பாணத்தில் குறைந்துள்ளது என்பதையும் திறமையுள்ள ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியுள்ளதால், அறிவுக் கூர்மையும், கடும் உழைப்பும் கொண்ட தமிழ் மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும் புளொட் போன்ற இயக்கங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கு முன்பாக தங்கள் பிரதிநிதிகள் மூலம் அமைதியான முறையில் ஆட்சேபம் தெரிவித்தல், விடுதலைப்புலிகளின் பிரச்சாரத்திற்கு எதிர்பிரச்சாரம் செய்தல் ஆகியவற்றில் புளொட் போன்ற இயக்கத்தினர் ஈடுபட்டு மற்றைய அமைப்புகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

ஒருவர் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் வரலாற்றுச் சம்பவங்கள் நடைபெற்றே வருகின்றன.

இலங்கை அரசாங்கம் தான் விதைத்ததையே அறுவடை செய்யும். தமிழ் அரசியல்வாதிகள், விடுதலைப்புலிகள், இலங்கை ஆயுதப்படையினர், தமிழர், சிங்களவர் ஆகிய இரு சமூகத்தைச் சேர்ந்த மக்களும் தாங்கள் விதைத்ததையே அறுவடை செய்வார்கள். இவர்கள் எல்லோரும் தங்களுடைய தவறுகளைத் திருத்துவதற்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. தமிழ்மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு குறைந்துவரும்போதும், அனைத்துலகரீதியிலான ஆதரவு அரசாங்கத்திற்கு அதிகரித்துவரும்போதும் அச்சூழ்நிலையை அரசாங்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறிவருகின்றது என்பது உண்மையாகும். போர்பற்றிய வரலாற்றில் பல கிளர்ச்சிகள் அடக்கி அழிக்கப்பட்டதற்கான சான்றுகள் உண்டு. இருப்பினும் அக்கிளர்ச்சிகளில் ஒன்றேனும் வெளிநாட்டு உதவியைப் பெறவில்லை. இலங்கை இந்தியக் கடற்படையினரின் கடல் வழியிலான முற்றுகை இன்றுவரை இருக்கின்றபோதிலும் விடுதலைப்புலிகளுக்கு 30% மான ஆயுதங்கள் கடல் மூலமாகவே கிடைப்பதுடன் மிகுதி 70% மான ஆயுதங்களை இலங்கைப் படையினரிடமிருந்தே அவர்கள் கைப்பற்றுகின்றார்கள். தங்களுக்குத் தேவையான 70% ஆயுதத்தை இலங்கைப் படையினரிடமிருந்து பெறுவதற்கு விடுதலைப்புலிகள் பெருந்துன்பங்களை அனுபவிக்கவேண்டியுள்ளது. அவர்கள் செய்யும் தியாகங்கள், குறிப்பாக போராளிகளின் இழப்பின் எண்ணிக்கை மிகக் கூடுதலாகும். பூநகரி நாகதேவன்துறை இராணுவக் கூட்டுப்படைத் தளத்தில் நடைபெற்ற போரும், யாழ்தேவி நடவடிக்கையின் போது நடைபெற்ற போரும் இதைத் தெளிவாகக் காட்டுகின்றது. 30% மான ஆயுதங்கள்வெளியிலிருந்து பெறப்படுகின்றது என்ற உண்மை அனைத்துலகரீதியில் விடுதலைப்புலிகளின் நிலையைத் தெளிவாகக் வெளிக்காட்டுகின்றது. இலங்கை அரசாங்கம் தோல்வியடைந்துள்ள அதேவேளையில் விடுதலைப்புலிகள் கெடுபிடி யுத்தத்தின் பின்னர் தோன்றிய புதிய அனுகூலங்களைப் படிப்படியாக இறுகப் பற்றிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். ஆனால் காலப்போக்கை எதிர்த்துநிற்கத் திரு. பிரபாகரன் அவர்களால் முடியுமா? இந்நேரத்தில் திரு. பிரபாகரன் அவர்களின் அறிக்கை ஆர்வத்தைக் கொடுப்பதாக உள்ளது. "மனித சமுதாயத்தின் கோட்பாட்டின்படி இந்த உலகம் சுழல்வதில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளாதவர்கள் அல்ல. ஒவ்வொரு நாடும் தனது மக்களின் சுய நலத்திற்கே முன்னுரிமை கொடுக்கின்றது. இனப் பண்பு, மனித உரிமைகள் மற்றும் மக்களின் உரிமைகள் ஆகியவற்றிலும்பார்க்க பொருளாதார வர்த்தக நலன்களே இன்று உலக ஒழுங்குமுறையை தீர்மானிப்பவையாக உள்ளன. சர்வதேச அரசியல் உறவாக இருந்தாலென்ன அல்லது இராசதந்திர ரீதியிலான தொடர்புகளாக இருந்தாலென்ன இந்த அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. எங்களது நியாயமான போராட்டத்தை அனைத்துலக சமூகம் இந்த அடிப்படையில் வெகு சிக்கிரம் ஏற்றுக்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கவியலாது. அதை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு நாம் தொடர்ந்து முயலவேண்டும். ஒரு கட்டத்தில் அனைத்துலக நிலைமைகள் எங்களுக்குச் சாதகமாக மாறும்போது உண்மைநிலையை உணர்ந்து உலக மக்களின் உணர்வுகள் எங்கள் சார்பாக மாறும்.

"இந்தியா பிளவுபடுவதை திரு. பிரபாகரன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றாரா?" என்ற வினா இங்கு எழுப்பப்படுவது பொருத்தமானதாகும். இப்போது வழங்கிவரும் ஆதரவுபோன்று வருங்காலத்திலும் அவருக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்து ஆதரவு வழங்குவார்களா? தனது முயற்சியில் விரைவாக வெற்றியீட்டத் தவறினால் அல்லது போதுமான செயற்திறன் அற்றவராகக் காணப்பட்டால் அவருக்குள்ள ஆதரவு படிப்படியாகக் குறையுமா? திரு. பிரபாகரன் அவர்களின் போர் முயற்சிகளும் அவரது சோதனைக்காலம் விடியும்வரை நீடித்துநிற்குமா?

## இத்தாலிக்கு எதியோப்பியாவுக்கும் இடையேயான யுத்தம் (1935 - 1936)

எதியோப்பியாவை இத்தாலியின் ஆட்சிக்குட் கொண்டுவருவதற்கு நடைபெற்ற ஆயுதப்போர் இதுவாகும். இரண்டாம் உலப்போரிற்கு உலக நாடுகளை முன்னெடுத்துச் செல்லவைத்தபோர் என்று இது பெரும்பாலும் வர்ணிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள்சபை தோன்றுவதற்கு முன் ஓரளவுக்கு அதன் நிலைப்பாட்டை வகித்துவந்த அனைத்து நாடுகளின் கழகம்(League of Nations) வல்லரசுகளால் உதாசீனம் செய்யப்பட்டுச் செயலிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டதையும் இந்தப் போரே அத்தாட்சிப்படுத்திக் காட்டியதாகும்

ஐரோப்பிய நாடுகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுவந்த ஆபிரிக்கக் கண்டத்தில் சுதந்திர நாடுகளாயிருந்த சிலவற்றுள் இப்போது எதியோப்பியா என்றழைக்கப்படும் அபிசீனியாவும் ஒன்றாகும். இதனை இத்தாலியர்கள் 1890-ல் கைப்பற்ற எடுத்தமுயற்சியிற் தோற்றபின்னர் 1934 டிசெம்பரில் இத்தாலியர்கள் வசமிருந்த சோமாலிலாந்தின் எல்லைகளில்வைத்து எதியோப்பியாவுடன் தோன்றிய ஒரு தகராறு முசோலினிக்கு ஒரு வாய்ப்பைக்கொடுத்தது. சமரச முயற்சிகள் யாவற்றினையுமே முழுவதுமாக நிராகரித்த முசோலினி 1935 ஒக்ரோபர் 3-ல் எதியோப்பியாவைக் கைப்பற்றினார். 1936 மே 5.ல் அதன் தலைநகரான அடிஸ் அபாபாவையும்கைப்பற்றினார். அந்நாட்டின் பேரரசன் ஹெய்லிசெலாஜி தலைமறைவானார். மூன்றாவது விக்டர் இம்மானுவல் என்பவரை எதியோப்பியாவின் பேரரசனாக முசோலினி பிரகடனம் செய்தார்.

# புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை விமானப்படை முக்கிய பங்கை வகிக்கின்றது

சுமீந்திர பர்டினாந்து
(த ஐலண்ட் - 09.01.94

சீனாவின் வை - 8 ரக போக்குவரத்து வானூர்தியைக் கொள்வனவு செய்யமறுத்த விவகாரத்தை இலங்கை விமானப்படை உயர் அதிகாரிகளுடன் சமுகமாகப் பேசித்தீர்ப்பதற்கு சீன இராணுவ அதிகாரிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று குறுகிய காலத்துக்குள் இங்கு வரவுள்ளது. 96 ஆசனங்களைக்கொண்ட போக்குவரத்து வானூர்தி மிகவும் பழமைவாய்ந்தது எனக்கண்ட பின்னரி இலங்கை விமானப்படையின் தளபதி அதனைக் கொள்வனவு செய்ய மறுத்துவிட்டார் எனக் கருத வேண்டியுள்ளது.

குறித்த ரக வானூர்தியின் அமைப்பு சிறந்ததல்லாததால் நாங்கள் அந்த வானூர்தியைக் கொள்வனவு செய்வதில்லை எனத்தீர்மானித்தோம் என ஓய்வுபெறவுள்ள இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்சல் ரெறன்ஸ் குணவர்த்தன பத்திரிகை நிருபருக்குக் கூறினார்.

இந்த வானூர்தி கொள்வனவு சம்பந்தமாகச் சீனா ஒரு விரைவான தீர்வை எட்டுவதற்கு இலங்கை விமானப்படை அதற்கு பல ஆலோசனைகளை எடுத்துரைத்துள்ளது என அவர் கூறினார். இது தொடர்பாகப் பேசுவதற்குச் சீனாவின் பிரதிநிதிகள் குழு ஒன்று கூடியவிரைவில் இங்கு வரும் எனக்கூறிய எயார் மார்சல் குணவர்த்தன, வை - 8 ரக வானூர்திக் கொள்வனவு சம்பந்தமாக முழு அளவில் மீளவும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் எனக்குறிப்பிட்டார்.

> விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பெருமளவில் பாவிக்கப்படுவது இலங்கை விமானப் படையினருக்கும் புலிகளுக்குமிடையே மேலாதிக்கத்தைத் தோற்றுவிக்கக்கூடிய பாரிய யுத்தத்தின் ஆரம்பமாகும். யாழ் கடலேரியிலும், புலிகள்மீதும், உள்ளூர் படகுகள் மீதும் கடற்படையினர் தாக்கியபோது, விடுதலைப்புலிகளின் அமைப்பு இராணுவத்தினரினதும், கடற்படையினரினதும் வசதிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

வை - 8 ரக வானூர்திக் கொள்வனவு பற்றிப் பேச்சுக்களைச் சீனாவின் இராணுவ உயர் அதிகாரிகளுடன் நடாத்துவதற்கு எயார் மார்சல் குணவர்த்தனவின் தலைமையில் 6 அங்கத்தவர்கள் அடங்கிய இலங்கை விமானப்படையின் 'பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் சீனா சென்றது, எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை விமானப்படை பிரதிநிதிகள் குழு டிசம்பர் மாதம் 9-ம் திகதி சீனாவுக்குப் புறப்பட்டு டிசம்பர் மாதம் 28-ந் திகதி திரும்பியது என இலங்கை விமானப் படையின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இலங்கை விமானப்படை எந்திரவியல் பிரிவின் இயக்குனர் ஜி. வை. டி. சில்வா, வடபகுதித் தளபதி விங்கொமாண்டர் (Wing Commander) ஜயலத் வீரக்கொடி மற்றும் இரு பொறியியலாளர்கள் இலங்கை விமானப்படைப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகித்தனர்.

இலங்கை விமானப்படைப் பிரதிநிதிகள் குழு சீனாவின் இராணுவ உயர் அதிகாரிகளுடன் பல முறை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது, எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

வை - 8 ரகப் போக்குவரத்து வானூர்தி நல்ல நிலையில் இல்லாததால் அதனை இலங்கை வாங்கமாட்டாது என இலங்கை விமானப்படைப் பிரதிநிதிகள் குழு சீனாவுக்குத் தெரிவித்துவிட்டது. சீனா வழங்கவிருந்த வானூர்தி மிகவும் பழமையானது. அதனால் இன்னொரு பாவிக்கப்பட்ட போக்குவரத்து வானூர்தியை அது வாங்க முனைந்தது என்பதைப் பாதுகாப்புவட்டாரங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இலங்கை இப்போது இரண்டு வை-8 ரக போக்குவரத்து வானூர்திகளை வைத்திருக்கின்றது. ஒன்று இலங்கைக்குச் சொந்தமானது. மற்றது கடனடிப்படையில் சீனாவினால் இலங்கை விமானப் படைக்கு வழங்கப்பட்டது.

முக்கிய இராணுவக்கேந்திர நிலையமான ஆனையிறவு இராணுவத் தளத்துக்கு வடக்கேயுள்ள இயக்கச்சியில் ஏற்பட்ட வெடி விபத்தில் இலங்கை விமானப்படை தன்னிடமிருந்த இரண்டு வை - 8 ரக வானூர்திகளில் ஒன்றை இழந்தனர் பின்னர், 1992-ம் ஆண்டு யூலை மாத முற்பகுதியில் சீனா ஒரு வை-8 ரக வானூர்தியை இலங்கைக்குக் கடனடிப்படையில் கொடுத்தது. இவ் விமானம் 1992 யூலையில் ஆனையிறவு இராணுவமுகாம் இராணுவத்தினர் வடக்கு இயக்கச்சி நோக்கி முன்னேற முற்பட்ட போது இவ் இராணுவத்தினருக்கு ஆகாய மார்க்கமாக பாதுகாப்பு கொடுத்த வை - 08

போக்குவரத்து விமானம் எதிர்பாராத வெடிவிபத்தினால் இயக்கச்சியில் விழுந்தது. இவ்விமான வெடிவிபத்தில் 19 பேர் பலியாகினர். அதில் ஆறு பேர் அதிகாரிகளாவர். புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் திறமையாகச் செயற்பட்ட உத்தியோகத்தர்களில் ஒருவரான ஸ்குவாட்ரன் லீடர் டி. எப் காசியர் (Squadron Leader. D. F. Cassier) இவ் விபத்தில் கொல்லப்பட்டார். குத்தகை அடிப் படையில் எடுக்கப்பட்ட வை-8ரக வானூர்தியைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக இன்னொன்றை வாங்க இலங்கை விமானப்படை ஆலோசித்து வருகின்றது எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. எனினும் சீனா வழங்கிய வை-8 ரக வானூர்தி இலங்கை விமானப்படையின் தளபதிக்குத் திருப்தியளிக்கவில்லையாதலால் அது இரு தரப்பினரையும் வை-8 ரக வானூர்தி விவகாரம் பற்றி மீளவும் முழு அளவில் பேச வற்புறுத்தியுள்ளது.

ஒரு புதிய வை-8 ரக வானூர்தியின் விலை, 9-10 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும், எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின. ஒரு புதிய வை-8 ரக வானூர்தியை வாங்குவதிலும் பார்க்க, பாவித்த ஒரு வை-8 ரக வானூர்தியை வாங்குவதனால் அதிக பணம் செலவேற்படமாட்டாது என விமானப்படை தீர்மானித்தது, என மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத்தின் ஏ. என். 12 ரக போக்குவரத்து வானூர்தியின் மறு அமைப்பே சீன வை-8 ரக வானூர்தியாகும் என அவ்வதிகாரி கூறினார். அநேகமாக அந்த வை-8 ரக வானூர்திகள் துருப்புக்களை ஏற்றியிறக்கப் பாவிக்கப்படுகின்றன.

## சோவியத்தின் உலங்குவானூர்திகள்

இதற்கிடையில் படையினரின் போக்குவரத்துக் தேவைக்குச் சோவியத்தின் எம். ஐ 17 ரக உலங்கு வானூர்திகளைக் கொள்வனவு செய்வது பற்றி இலங்கை விமானப்படைத் தளபதி ஒரு இறுதித் தீர்மானத்தை அடுத்த சில நாட்களில் எடுப்பார் என அதிகாரபூர்வமான வட்டாரங்கள் கூறின. மூன்று எம். ஐ. 17 ரக உலங்கு வானூர்திகளை விரைவில் கொள்வனவு செய்வதற்கு இலங்கை விமானப் படை திட்டமிட்டுள்ளது.

இந்த உலங்குவானூர்திகள் ரஷ்யாவிலுள்ள உலன் உடே அவியேன் அல்லது கசான் (Kazzan) வானூர்தி உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்படுமென அவ் வட்டாரங்கள் கூறின.

இப்பொழுது துருப்புக்களையும் மற்றும் பொருட்களையும் ஏற்றியிறக்க எம். ஐ. 17 ரக உலங்கு வானூர்திகளை இலங்கை விமானப்படை உபயோகித்து வருகின்றது, அந்த மூன்று உலங்கு வானூர்திகளும் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டவை. இந்தப் புதிய உலங்கு வானூர்திகளை வாங்குவது அரசாங்கத்துக்கு அதிக செலவை ஏற்படுத்தமாட்டாது என அதிகார பூர்வமான வட்டாரங்கள் கூறின.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளாலும், முன்னாள் சோவியத்யூனியனின் மாநிலங்களாலும் அதிகமாகப் பாவிக்கப்பட்டுவரும் எம். ஐ. 17 ரக வானூர்திகள், இலங்கை விமானப் படையினரினால் துருப்புக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் சிறந்த உலங்கு வானூர்திகளாகும்.

இந்த எம். ஐ. 17 ரக உலங்கு வானூர்திகளை கொள்வனவு செய்வதில் இலங்கை விமானப்படைத் தளபதிக்கு எவ்வித கருத்து வேறுபாடு கிடையாது என இலங்கை விமானப்படை வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையில் பிரதான ஆளணி அதிகாரியான எயார் வைஸ் மார்சல் ஒலிவர் எம். ரணசிங்க (M. Ranasinghe) இலங்கை விமானப்படையின் தளபதியாகப் பெப்ரவரி 17-ந் திகதியிலிருந்து நியமிக்கப்படவுள்ளார். அன்றிலிருந்து அவர் எயார் மார்சல் பதவிக்கு உயர்த்தப்படுவார்.

எயார் மார்சல் குணவர்த்தன பெப்ரவரி மாதம் 16-ந் திகதியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

விமானப் படையின் நடவடிக்கை இயக்குனர் எயார் கொமடோர் அன்சலெம் பீரிஸ் (Air Commodore Anselem Peries) பிரதான ஆளணி அதிகாரியாகக் கடமைபாற்றுவார். இப்பொழுது அநுராதபுரத்திலிருந்து இயங்கும் வடபகுதிக்குப்பொறுப்பான விங்கொமாண்டர் ஜயலத் வீரக்கொடி (Jayalath Weerakkody) விமானப் படையின் நடவடிக்கை இயக்குனராகக் கொழும்பு செல்வார்.

எயார் வைஸ் மார்சல் ரணசிங்க, எயார் கொமடோர் பீரிஸ், விங்கொமாண்டர் ஜயலத் வீரக்கொடி, வீரக்கொடிக்குப் பதிலாக வரும் உத்தியோகத்தர் யாவரும் அனுபவமுள்ள வானூர்தி ஓட்டிகளாவர்.

பாதுகாப்புப் படையினருடன் இணைந்து யாழ் குடாநாட்டின் மீதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விமானப்படையினரின் பங்கு மிக அவசியமானதால் அது பலமுள்ளதாக இருத்தல் அவசியம் எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இனிப் பதவியேற்கப் போகும் விமானப் படைத் தளபதி புலிகளுக்கெதிரான யுத்த நடவடிக்கைகளை விரிவாக்குவதிலும், சீராக்குவதிலும் ஈடுபடுவார் என அவர்கள் கூறினர்.

பலமான 14,000 துருப்புக்களைக் கொண்ட இலங்கை விமானப்படைத் தலைமையின் மாற்றத்துடன், அடுத்தமாத நடுப்பகுதியில் பல முக்கிய மாற்றங்கள் கொண்டு வரப்படும், என ஆய்வாளர்கள் கூறினார்கள்.

எயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க விமானப் படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர், பாதுகாப்பமைச்சுச் செயலாளர் ஜெனரல் சுமில்ரன் வணசிங்க தலைமையில் இயங்கும் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பார்.

புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளுக்கு இந்தக் குழு பொறுப்பாக இருந்து வருகின்றது.

இலங்கை விமானப்படையினரின் வசதிகளை அழித்து விடுவதற்கு புலிகள் முயல்கின்றனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன. கடந்த இரண்டு வருடங்களில் அவர்கள் கடற்படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளனர். சென்ற நவம்பர் மாத இறுதியில் அவர்கள் மேற்கொண்ட தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையினால் கடற்படை நாகதேவன்துறைத் தளத்தைக் கைவிட்டது. புலிகள் இலங்கை விமானப் படையைத் திருப்பித் தாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் பகுப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பெருமளவில் பாவிக்கப்படுவது இலங்கை விமானப் படையினருக்கும் புலிகளுக்குமிடையே மேலாதிக்கத்தைத் தோற்றுவிக்கக்கூடிய பாரிய யுத்தத்தின் ஆரம்பமாகும். இலங்கை விமானப்படையினருடைய நடவடிக்கைகளையும், அதன் அச்சுறுத்தல்களையும் எதிர்த்து முறியடிக்கப் பயனுள்ள அமைப்பு ஒன்றினை உருவாக்கப் புலிகளின் தலைமைப்பீடம் ஆலோசித்து வருவதாகத் தமிழ்மக்கள் கூறினார்கள்.

யாழ் கடலேரியிலும் மற்றும் இடங்களிலும் புலிகள் மீதும், உள்ளூர் படகுகள் மீதும் கடற்படையினர் தாக்கியபோது, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தால் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த கடற்புலிகள் அமைப்பு இப்போது வடபகுதியிலுள்ள இராணுவத்தினரினதும், கடற்படையினரினதும வசதிகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

# பொருளாதாரப் போர் நடவடிக்கை (ECONOMIC WARFARE)

சர்வதேசப் பிணக்குகளில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் பொருளாதாரரீதியான போர் இதுவாகும். பல்வேறு ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகள், நடுநிலை நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகள், கப்பற்போக்குவரத்துக் கட்டுப்பாடு, கறுப்புப்பட்டியலில் சேர்த்தல் (Black Listing) எதிரியின் ஏற்றுமதியைத் தடுத்தல், மற்றவர்கள் வாங்குவதற்கு சந்தர்ப்பம் அளிக்காது விலைக்கு வாங்குதல் அல்லது மற்றவரைத் தடுக்கும் கொள்வனவு என்பன அத்தகைய நடவடிக்கைகளுள் அடங்கும். ஏனைய நாடுகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தி, ஒரு நாடு தனது பொருளாதார வலுவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எனவும் இதனை வரையறை செய்யலாம்.

தடை செய்யப்பட்ட பொருட்களுக்கு வணிகத்தடை, இடைமறிப்பு என்பவற்றுடன் போரிடும் நாடுகளுக்கிடையிலான பொருளாதாரப் போர் ஆரம்பித்தது. இரண்டாம் உலகப்போரில் எதிரிநாட்டு விநியோகங்களைச் செய்து வந்த நடுநிலை நாடுகளின்மீது, அழுத்தங்களைப் பிரயோகிப்பதை உள்ளடக்கியதாகவும் பொருளாதார யுத்த நடவடிக்கை விரிவாக்கப்பட்டது.

இரண்டாம் உலகயுத்தத்தின் பின்பு பனிப்போர்த் (Cold War) தந்திரங்களின் ஒருபகுதியாக, யுத்தத்திறன் விருத்திக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய பொருட்கள், எதிரிக்குக் கிடைக்காமற் தடைசெய்யும் பொருளாதார நடவடிக்கை தொடர்ந்தது. யுத்த தந்திரோபாயம் மிக்க பொருட்களுக்குச் சிலவேளைகளில் முழுமையாகவும், சிலவேளைகளில் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் வணிகத்தடை ஏற்படுத்துவது, இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முதன்மையான நடவடிக்கைகளுள் ஒன்றாகும். பரந்தளவில் வரையறுக்கப்பட்ட யுத்த தந்திரோபாயப் பொருட்களின் பெயர்ப் பட்டியலில், சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக, 1950களில் ஐக்கிய அமெரிக்காவும், ஏனைய நாடுகளும் வணிகத் தடைகளைப் பேணி வந்தன.

ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பொருளாதார அடிப்படையில் அண்டிவாழச் செய்வதன் மூலம் அதன்மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதும் பொருளாதார யுத்த நடவடிக்கையில் உள்ளடங்கும். இதில், சிலவகைப் பொருட்களின் விநியோகத்தில் ஏகபோக உரிமை பாராட்டுதல். அல்லது பொருளாதார ரீதியில் நலிவுற்ற நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களுக்குச் சந்தைவாய்ப்பை உறுதிப்படுத்தல்போன்ற நடவடிக்கைகளும் உள்ளடங்கும்.

பொருளாதார யுத்த நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்கு அதிக தாக்கமுள்ளதாக இருக்கக்கூடும்; ஏனென்றால் காலப்போக்கில் எதிரிநாடு மாற்றுவழிகளைக் கையாளும் சந்தர்ப்பங்கள் ஏற்படக்கூடும். வணிகத்தடை விதிக்கப்பட்ட பொருட்களுக்கு மாற்றுப்பொருட்களை விருத்தி செய்வதன் மூலம் வணிகத்தடை விதிக்கப்பட்ட ஒரு எதிரிநாடு, அதனால் நன்மை பெறவுங்கூடும் அதன் மூலம் அந்நாடு தனது சுதந்திரத்வையும் வலுப்படுத்திக்கொள்ளும்.

பொது நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# வடக்கிலிருந்து கிடைத்த பலத்த அடி பூநகரி யுத்தம்

(புரொண்ட் லைன் - 17.12.93)

இலங்கை தன் வரலாற்றில் சந்தித்த யுத்தங்களில் பூநகரி யுத்தமே மிகவும் பயங்கரமானதாகும். நவம்பர் 11க்கும் 14க்கும் இடையில் நடந்த பூநகரி யுத்தத்தில், அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ வெற்றியீட்டவில்லை. வட இலங்கையில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி இராணுவத்தளம், யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பிரதான நிலப்பரப்புடன், யாழ்குடா ஏரி ஊடாக இணைக்கிறது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதான நிலப்பரப்பில் அமைந்துள்ள பூநகரியின் 33 சதுர கிலோ மீற்றர் அளவு பகுதி மாத்திரமே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் சுமார் 2000 இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்:

மூன்று நாட்களாக நேருக்கு நேர் நடந்த யுத்தத்தில் 2000க்கு மேற்பட்டோர் ஒன்றில் உயிரிழந்தோ அல்லது காயப்பட்டோ உள்ளனர். இருபக்கங்களிலும் பாரிய இழப்புகள் ஏற்பட்டபோதிலும், இலங்கை இராணுவம் கூடுதலான இழப்பைச் சந்தித்துள்ளது.

தாக்குதலில் இறங்கிய புலிகள், கடற்படை நிலை கொண்டிருந்த பகுதி முழுவதையும் நிர்மூலமாக்கியதோடு, இராணுவ பாசறையிலிருந்து ஆயுதங்களையும் வெடிமருந்து முதலியவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர். யுத்தத்தின் முடிவை நோக்கும்போது தங்களுக்கு மிகவும் நன்மைபயக்கக்கூடிய யுத்த தளபாடங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருந்தார்களேயானாலும், பூநகரியை அவர்கள் தம்வசம் தக்க வைத்திருக்க முடியாததால் இதைப் பெரிய வெற்றி என்று அவர்கள் உரிமைகோர முடியாது.

ரூபா 30 கோடி பெறுமதியான யுத்த தளபாடங்களைப் பூநகரி ஆயுதக்கிடங்கிலிருந்து புலிகள் கைப்பற்றியது, இராணுவத்திற்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. 2தாங்கிகள், பீரங்கிப்படைத் தளபாடங்கள், குறுந்தூர மற்றும் நடுத்தூரவீச்சு துப்பாக்கிகள், ஆர். பி. ஜிக்கள், சுழல் துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியன இவ்விழப்பில் அடங்கும். புதிதாகச் சேர்ந்த 275 சிப்பாய்கள், முன்னணிப் பாதுகாப்பு அரண்களில் நிறுத்தப்பட்டதாலேயே இராணுவத்தின் முக்கிய தளத்திற்குள் புலிகள் இலகுவில் புகுந்து ஆரம்பத்தில் வெற்றியீட்டினர். 2000 இளம் புலி வீரர்கள் (ஆண்களும், பெண்களும்) முன்னேறிக் கொண்டு செல்லும் பொழுது அனுபவமில்லாத புதிதாகச் சேர்க்கப்பட்ட இச்சிப்பாய்கள் அவர்களுக்குச் சிறு துரும்பாகவே இருந்துள்ளனர். யுத்த முனையின் கடுமையான நிலைகள் பற்றி அனுபவமில்லாத புதிய சிப்பாய்களைக் வேள்விப்பலிக்கு விடப்பட்ட ஆட்டுக்குட்டிகள் போல யுத்த முனைக்கு அனுப்பிவைத்தது பற்றி நுணுக்கமாக விசாரணை செய்து அறிக்கைவிடுவது யுத்தத்தினால் ஏற்பட்ட படுவீழ்ச்சி பற்றி ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட விசாரணைக்குழுவின் பொறுப்பாகும்.

விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடாத்தத் திட்டம் வகுத்திருக்கின்றனரென்பதும், எந்த நேரத்திலும் தங்களைத் தக்கலாம் என்பதும் பாதுகாப்புப்படையினருக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எங்கே தாக்குதல் நடைபெறும் என்பதை அவர்களால் கண்டுகொள்ள முடியவில்லை. எப்பகுதியைத் தாக்கப்போகின்றனர் என்பது நவம்பர் 10 ஆம் திகதி

> வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தொடரும் யுத்தத்தில், இருபகுதியினரும் தங்கள் பலம், பலவீனம் பற்றிய நிறை குறைகளை நுண்ணறிவுத் திறனுடன் உற்று நோக்கக்கூடியதாக இருக்கிறது. பாதுகாப்புப் படைகளையும், தளங்களையும் தாக்கி அழித்து நாசமாக்கும் புலிகளின் செயற்திறனையும், பேரழிவை உண்டாக்கும் அவர்களின் ஆற்றலையும் தங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் வெடிமருந்து வகைகளையும் நிரந்தரமாகப் பெறக்கூடிய வழிவகைகளை புலிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அன்று வெளிப்படையாகத் தெரிந்திருந்தது. அதாவது புலிகள் தாக்குதலுக்குத் தம்மை ஆயத்தம் செய்வதை, யாழ்ப்பாணத்திற்கு அப்பாலுள்ள காரைநகர் தீவிலுள்ள கடற்படைப்பிரிவினரால் ரடார் கருவி மூலம் அறிந்து கொள்ளமுடிந்தது ஆனால் வழமைபோல் இலங்கைப் படையினர் யுத்தத்திற்கு தயார் நிலையில் இல்லாதபடியால், தாக்குதல் ஆரம்பித்ததும், தாக்குப்பிடிக்க முடியாமல் நெருக்குதலுக்குள்ளாயினர்.

யாழ் குடா ஏரியின் தென்கரையிலுள்ள நாகதேவன்துறை கடற்படைப்பிரிவுப் பகுதியே முதல் தாக்குதலுக்கான இலக்காக அமைந்தது, கடற்புலிகளும், சார்ள்ஸ் அந்தோனி சிறப்புப்படை அணியினரும் முதலில் ரடார் உபகரணங்களை அழித்தொழித்து, பின்பு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்படைத் தளத்திலுள்ள துறைமுகத்தையும் ஏனைய கடற்படை வசதிகளையும் நிர்மூலமாக்கிவிட்டனர்.

நவம்பர் மாதம் 11ந் திகதி வியாழக்கிழமை காலை 1. 15க்கு தாக்குதல் ஆரம்பித்தது, விடியும்

3023 cc
PUBLIC LIBRARY

பொழுது பூநகரித்தளம் புலிகளால் சுற்றிவளைக்கப் பட்டது.

பிரதான தளத்திலிருந்து பின்வாங்கிய சில, இராணுவத்தினர் ஒன்றுகூடி வெள்ளிக்கிழமை அன்று சிறு எதிர்ப்பைக் காட்டினர். இவர்கள் வடமேற்கு பகுதியில் உள்ள முகப்புத் தளத்தைப் பாதுகாப் பாக வைத்திருந்தமையால். அவ்வழிமூலம் மீட்புப் பணிக்கு அனுப்பிவைக்கப்பட்ட படைகள் இறக்கப் பட்டு பூநகரி முற்றுகை சனிக்கிழமை அன்று தளர்த்தப்பட்டது.

பூநகரியின் வடமேற்கிலுள்ள கௌதாரிமுனை வழியாக இறங்கிய படைகள் அங்கு எஞ்சியிருந்த படைகளுடன் இணைந்ததும், புலிகள் படிப்படி யாக முகாமிலிருந்து வெளியேறினர்.

இந்த யுத்தத்தின் முடிவில் புலிகள் தரப்பில் இறந்தவர் தொகை 450ஆகவும் காயப்பட்டவர் தொகை இருமடங்காகவும், இராணுவத்தினர் தரப் பில் இறந்தவர் அல்லது காணாமல் போனோர் தொகை 750ஆகவும் காயப்பட்டவர்கள் தொகை 550ஆகவும் இருந்தது.

நிலப்பரப்பைப் பொறுத்தவரையில் இருபகுதி யினரும் ஒன்றையும் இழக்கவுமில்லை வெற்றி யீட்டிக் கைப்பற்றவுமில்லை. ஆனால் நவீன விசைப்படகுகளுடன் கடற்படைத்தளத்திலிலுள்ள முழு வாய்ப்புக்களையும். பூநகரி ஆயுதக்கிடங்கிலி ருந்த முழுயுத்த தளபாடங்களையும் இராணுவத்தி னர் இழந்துள்ளனர்.

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் தொடரும் யுத் தத்தில், அண்மையில் இடம்பெற்ற இந்த யுத்தத்தி லிருந்து இருபகுதியினரும் தங்கள் பலம், பலவீனம் பற்றிய நிறை குறைகளை நுண்ணறிவுத்திறனுடன் உற்றுநோக்கக் கூடியதாக இருக்கிறது. எடுத்துக் காட்டாக பாதுகாப்பு படைகளையும், தளங்களை யும் தாக்கிஅழித்து நாசமாக்கும் புலிகளின் செயற் திறனையும், பேரழிவை உண்டாக்கும் அவர்களின் ஆற்றலையும் இந்த யுத்தம் மீண்டும் எடுத் துக் காட்டியுள்ளது. இதுமட்டுமா ? தங்களுக் குத் தேவையான ஆயுதங்களையும் வெடி மருந்து வகைகளையும் நிரந்தரமாகப் பெறக் கூடிய வழிவகைகளையும் புலிகள் கண்டுபிடித்துள்ள னர். புலிகளின் மூத்த தலைவர்களில் ஒருவரான சதா சிவம் கிருஷ்ணகுமார் அல்லது கிட்டு வந்த விநி யோகக் கப்பலான எம். வி. அகத் இந்தியக் கடற்கரைப் பாதுகாப்புப் படையினரால் ஜனவரி யில் மூழ்கடிக்கப்பட்டபின், புலிகளுக்கான ஆயுத விநியோகம் பெரும்பாலும் தடுக்கப்பட்டு விட்ட தாக இலங்கை இராணுவம் அடிக்கடி கூறிவந்துள் ளது. கப்பல்கள் மூலம் ஆயுதங்கள் வாரவிட்டா லும், படகுகள் மூலம் வியக்கத்தக்க முறையில் தந்திரமாகப் புலிகளுக்கு ஆயுதங்கள்வந்துகொண்டே இருக்கின்றது. கப்பல் மூழ்கடிக்கப்பட்டதால் தடைப் பட்ட ஆயுத வருகையை ஈடுசெய்யும் முகமாக, புலிகள் இப்போது இராணுவத்துடன் போரிட்டு, அவர்களிடமிருந்தே ஆயுதங்களைக் கைப்பற்றுகின் றனர். ஜனகபுரத்தளததை ஜூலையில் அழித்த புலிகள் அதிலிருந்து ரூபா 5கோடி பெறுமதிவாய்ந்த ஆயுதங்களைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

யாழ் குடாநாட்டிற்கும் பிரதான நிலப்பரப்பிற் கும் இடையிலுள்ளபூநகரிப்பாதை (கடப்புவழி)யைப் பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காக மீண் டும் திறந்துவிடுவதை நோக்கமாகக்கொண்ட விடு தலைப்புலிகள் அதைக் கைப்பற்ற எண்ணியுருந்த னர். பாதுகாப்புடன் கூடிய பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து விடுவதற்கு, ஐ. நா அகதிகளுக் கான உயர் ஸ்தானிகருக்கும் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் நல்ல முடிவை எட்டாமைக்கு இது ஒரு முக்கிய காரணமாயிருக் கலாம். அவர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் ஜூலையில் முறிவுற்றது.

பொதுமக்களை ஏற்றி இறக்கவும், தங்கள் தேவைகளைத் தங்குதடையின்றிப் பெறவும் யாழ் குடா ஏரிவழியாகச் சுதந்திரமான போக்குவரத்தை நிச்சயப்படுத்தப் புலிகள் முயற்சி எடுத்தனர். யாழ். நீரேரிவழியாக போக்குவரத்துத் தடையை அரசாங் கம் அமுல் செய்ததாலும், தொடர்ச்சியாகப் புலிகள் மற்றும் பயணிகளின்படகுகள்மீது விமானப்படையும் கடற்படையும் தாக்குதல் நடாத்துவதாலும், மக்கள் வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அண்மை யில் கிளாலி படகுத்துறையைப் படையினர் தாக்கி 500 படகுகளைக் கைப்பற்றிச் சென்றதால், கடற் புலிகளுக்குச் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆகவே தாக்குதலை மீண்டும் நடாத்தும் எண்ணம் புலிகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் நாக தேவன்துறை கடற்படைத் தளத்தைத் தாக்கி அதன் துறைமுகத்தையும் தொடர்புசாதனக் கருவி களையும் நிர்மூலமாக்கியதோடு, 5 விசைப்படகு களையும் தங்களோடு எடுத்துச் சென்றுள்ளனர். வசதிகள் அனைத்தையும் கொண்ட கடற்படைத் தளத்தை மீண்டும் அந்தப்பகுதியில் அமைக்கும் வரை விமானத்தாக்குதல்களை நடாத்தாதுவிடின், யாழ். கடல் நீரேரியூடாக போக்குவரத்து சுதந்திர மாகவே நடைபெறும்.

பூநகரித் தாக்குதலின்போது புலிகள் தமது சிறப்பு அதிரடிப்படையுடனும் பெண் போராளி களுடனும் இணைந்து இராணுவத்தை எதிர்ப் பதற்கு, கிழகிலிருந்தும் தமது படைப்பிரிவுகளில் சிலவற்றைக் கொண்டுவந்திருந்தனர்.

யுத்தம் ஆரம்பித்த இரண்டாவது தினத்தன்று இராணுவம் திருப்பிதாக்கி 400 புலிகளை அழித் ததை நோக்கும்பொழுது, இலங்கை இராணுவத் திலும் துணிகரமானவர்களும் ஆற்றல் வாய்ந்தவர் களும் இருப்பது தெளிவாகின்றது, ஆகவே சிறந்த வழிகாட்டும் தளபதிகளும், திறமையான பயிற்சி

முறைகளும், எல்லாவற்றிற்கும் மேலாக நன்றாகத் திட்டமிட்ட இராணுவத் தந்திரோபாயங்களுமே இலங்கைப் பாதுகாப்புப்படைக்குப் தேவைப்படுகின் றன.

ஆகவே பூநகரித் தளத்திலிருந்த படையினருக்கு என்ன நேர்ந்தது? செப்டம்பர் - ஒக்டோபரில் இடம் பெற்ற கிளாலித் தாக்குதலின்பின், எந்த நேரத் திலும் இன்னொரு தாக்குதல் இடம்பெறலாம் என்பதைத் தெரிந்துகொண்டபின்பும், எதற்காக அவர்கள் தயார்நிலையில் இருக்கவில்லை?

முதலாவதாக, முன்னணிப் பாதுகாப்பு அரண் கள் சக்திவாய்ந்தனவாக அமைக்கப்படவில்லை. இது புலிகளுக்குத் தாக்குதலை ஆரம்பிக்க வாய்ப்பை அளித்ததுடன் இலகுவாக இராணுவ முகாமிற்குள் ஊடுருவிச் செல்லவும் வாய்ப்பளித்தது.

இரண்டாவதாக தாங்கள் உள்ளடக்கப்பட் டுள்ள இக்கட்டான நிலையை உணருமுன்பே, தங் கள் வெடிமருந்துகள் யாவும் தீர்ந்து விட்டன என்றும், செயற்பட வைப்பதற்குத் தயார் நிலை யில் இல்லாத துப்பாக்கிகளையும் தாங்கிகளையும் புலிகள் கைப்பற்றிச் சென்றுவிட்டனர் என்றும் காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் சிப்பாய்கள் கூறினர்.

மூன்றாவதாக, மேலதிகமான படைகளைப் பூநகரிக்குக் கொண்டு வந்து இறக்கி புலிகளின் முற்றுகையைத் தளர்த்துவதற்கு, ஆயுதப்படையி னர் 60 மணித்தியாலங்களை எடுத்துள்ளனர். இது வும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினதும், பிர தம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவினதும் கடுமை யான பணிப்புரையின் பின்பே நடைபெற்றது. என்ன விலையைக் கொடுத்தேனும் பூநகரியை மீண்டும் கைப்பற்றி, அங்கு சிக்கியுள்ள படையின ரைக் காப்பாற்ற வேண்டும் என்று இராணுவத் தலைமைப்பீடத்திற்கு அரசு தெட்டத் தெளிவாகப் பணித்திருந்தது. இதன் பின்னரே இராணுவ தலை மைப்பீடம் செயற்பட ஆரம்பித்தது.

பலாலி இராணுவ முகாமுக்கு விமானம் மூலம் சென்ற லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்திய ரத்னா, வைஸ் அட்மிரல், மோகன் சமரசேகர, வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா ஆகிய முப்படைத் தளபதிகளும் மேலதிகப் படைப்பிரிவு களை அனுப்பும் பொறுப்பையும் மீட்புப் பணிப் பொறுப்பையும் தாங்களே ஏற்றனர்.

நவம்பர் மாதம் 13-ம் திகதி சனிக்கிழமை அன்று தான் 450 படையினர் கௌதாரி முனையில் இறக்கப்பட்டனர். முற்றுகைக்குள்ளான எஞ்சிய படையினருடன் இணைந்துகொள்வதற்காக மேலும் 800 படையினர் அதன் பின் தரையிறக்கப்பட்ட னர். இந்த நிகழ்ச்சிக்குப் பின் சிறிய இழப்புடன் ஆனால், போதிய அளவு ஆயுதங்களுடன் விடுத லைப் புலிகள் தந்திரமாகப் பின் வாங்கினர்.

தங்கள் விமானங்களை இழக்க விரும்பாத வான்படையினர், வியாழன், வெள்ளி ஆகிய நாட் களில் பூநகரிக்கு அண்மையில் தங்கள் விமானங் களை இறக்க எந்தவொரு முயற்சியும் மேற் கொள்ளவில்லை. அண்மையில் நடாத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் அனைத்திலும், விமா னப்படையினரே முன்னணி வகித்து வெற்றியை ஈட்டிக் கொடுத்திருக்கின்றனர். நன்கு குறிப்பிட்ட இலக்குகளில் விமானங்களிலிருந்து குண்டுகள் வீசப் பட்டதாகவும் இரவு நேரங்களில் மேற்கொள்ளப் பட்ட தாக்குதல்கள் கூட வெற்றிகரமாக நடாத் தப்பட்டதாகவும் மேலாளர்கள் கூறுகின்றனர். இதன் காரணமாகவே விமானப்படை புலிகளின் அடுத்த தாக்குதலுக்கு இலக்காகலாம் என இரா ணுவப் புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ள னர். விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 4லிலி ருந்து 6 கிலோ மீற்றர் தூரத்திற்குச் செல்லக் கூடிய பீரங்கியையும், பீரங்கி விசைப்பீற்றுக் கரு விகளையும் கொண்டு, பலாலியிலுள்ள விமானத் தளத்தை அழிக்கக் கூடிய ஆற்றலை அவர்கள் பெற்றிருக்கின்றனர் என்பதை உதாரணமாகக் கூற லாம். பூநகரித் தாக்குதலின் பின் நவம்பர் 12-ம் 13-ம் திகதிகளில் பலாலியிலுள்ள விமானத்தளத்தை புலிகள் தாக்கித் தோல்வி கண்டனர் என்றும் முகா முக்குள் ஊடுருவிய புலிகளை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர் என்றும் இராணுவப் பேச்சா ளரான பிரிகேடியர் சரின் அங்கமன தெரிவித் திருக்கிறார்.

மாதத்தின் இறுதி நாட்களிலேயே புலிகள் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளவுள்ளதாக இராணுவப் பேச்சாளர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர். மாவீரர் வாரம் முடிவு பெறும் வேளையிலுள்ள நவம்பர் 26-ம் திகதி விடுதலைப் புலிகளின் தலை வர் பிரபாகரன் அவர்களின் பிறந்த நாள் ஆகை யால் அந்த நாட்களில் விடுதலைப் புலிகள் தாக்கு தல்களை நடாத்துவார்கள் என இராணுவத்தினர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இரு வாரங்களுக்கு முன்பே விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம் பித்து இராணுவத்தினரை அதிர்ச்சிக்குள்ளாக்கி யுள்ளனர்.

இப்பொழுதும் யுத்தம் முடிவுக்கு வந்துவிட வில்லை. தாங்கள் கைப்பற்றிய புதிய ஆயுதங்க ளின் சக்தியைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பும் விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினருக்கு அதிக இழப்புகளை ஏற்படுத்தக் கூடும். கிழக்கில் போதிய படைப்பலமும் நிலப்பகுதியும் இல்லாவிடி னும், வடக்கில் தம் விருப்பப்படி எந்த நடவடிக் கையையும் புலிகளால் மேற்கொள்ளமுடியும்.

செப்டம்பர் மாதத்தில் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப் பயன்படுத்திய ஆனையிறவு மற்றும் யாழ்ப்பாணத்தின் வடமூலை யில் அமைந்துள்ள பலாலி போன்ற வடக்கிலுள்ள பாரிய இராணுவத் தளங்களையும், பாதுகாப்புப்

படையினர் பாதுகாக்க வேண்டியுள்ளது. விடுதலைப்புலிகளால் எந்த நேரத்திலும் தாக்கப்படக் கூடிய இலக்காக இவை உள்ளன.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை கிழக்கில் நடாத்தப் போவதாகத் தீர்மானித்த அரசு, அதை அங்கு நடாத்த முற்படும் பொழுது மேலும் பல தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடாத்தக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

கிளாலி நடவடிக்கையின் போதும் தற்போது இடம்பெற்ற பூநகரித் தாக்குதலின் போதும் இலங்கைப் படையினர் பாரிய இழப்பைச் சந்தித்துள்ளதால், அவர்களின் கட்டுப்பாட்டமைதி தளர்ந்துள்ளது. அரசியல் தலைமைப் பீடத்துக்கும் இராணுவத்தினருக்குமிடையே நட்புறவு நிலவிய போதிலும், பாதுகாப்புப் படையினர் தாங்கள் விரும்பிய பெறுபேறுகளை அடைய முடியாதிருக்கின்றனர். பாதுகாப்புப் படையின் உயர்மட்டத்திலுள்ளவர்களுக்கிடையே நிலவும் அதிகாரப்போட்டியும் அரசியலும் ஒருங்கிணைந்த திட்டம் இல்லாமையுமே இதற்குக் காரணம் எனக்கூறலாம். இலங்கை அரசாங்கத்தின் அரசியல் நம்பகத் தன்மையும் பொருளாதாரத் திட்டங்களும் இக்கட்டான நிலையில் உள்ளன. பாதுகாப்புப் படைப்பிரிவுகளுக்கும் அதன் அதிகார உயர் அதிகாரிகளுக்குமிடையில் கூடிய ஒத்துழைப்பைக் கொண்டு வரவும், நடைமுறையிலுள்ள விடயங்களைக் கையாளவும் பாதுகாப்பு இராசாங்க மந்திரி ஒருவர் தானும் இல்லை. தனக்குதவியாக இராசாங்க மந்திரி ஒருவரைக்கூட நியமிக்காமல் விஜேதுங்கா அவர்கள் தானே பாதுகாப்பு மந்திரியாக இருந்து வருகிறார். மேற்கூறிய அனைத்தும் படையினரின் போர்புரியும் ஆற்றலுக்கும், விருப்பத்திற்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதைப் பூநகரி வீழ்ச்சி தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

# சோம்மின் முதலாவது யுத்தம்
# (FIRST BATTLE OF SOMME)

இந்த யுத்தம் 1916-ம் ஆண்டு ஜூலை 01 தொடக்கம் நவம்பர் 13 வரை நடைபெற்றது. முதலாம் உலக யுத்த காலத்தில் நேசப்படைகளினால் மேற்கொள்ளப்பட்ட பெருஞ்செலவிலான, பெருமளவு வெற்றியளிக்காத எதிர்த் தாக்குதல் நடவடிக்கை இதுவாகும்.

இப்போருக்கான திட்டத்தினை தீட்டியவர் பிரான்ஸ் நாட்டுப் பீல்ட்மாஷலான யோசப் யொப்பிறி (Joseph Joffre) ஆவார். இவர் பிரெஞ்சுப் படைக்குத் தலைமை தாங்கினார். பிரித்தானியக் கொமாண்டரான ஜெனரல் சேர் டக்ளஸ் ஹெய்க் (Sir Douglas Haig) இவரது, திட்டத்திற்குச் சம்மதம் தெரிவித்துப் பிரித்தானியப்படைக்குத் தலைமை தாங்கினார்.

பிரான்ஸ் நாட்டு சோம் ஆற்றின் வடகரையிலுள்ள 34 கி.மீ. நீண்ட போர் முனையில், ஜேர்மனியர் பாதுகாப்பான அகழிகளை அமைத்து இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உறுதியாக நிலைகொண்டிருந்தபோது பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தமது ஒன்றிணைந்த முன்னிலைத் தாக்குதலை ஆரம்பித்தனர். பலத்த பீரங்கித் தாக்குதல், விமானக் குண்டு வீச்சுக்களின் பாதுகாப்புடன் நேச அணிக் காலாட்படை முன்னேறியது. ஆனால் தாக்கி அழிக்க முடியாத ஜேர்மன் நிலைகளுக்கு எதிராக நேசப்படைகளால், மிக மெதுவாகவே முன்னேறமுடிந்தது. முதல் நாட் தாக்குதலின் போது பிரித்தானியப் படையில் 20,000 பேர் இறந்ததுடன், 60,000 பேர் காயமடைந்தனர். நேச அணியின் குதிரைப்படையொன்றை ஜூலையின் நடுப்பகுதியில் ஜேர்மனியர் இயந்திரத் துப்பாக்கிகளால் தாக்கியழித்தனர். செப்ரெம்பரில் பிரித்தானியர் தமது புதிய ஆயுதமான டாங்கிகள் (Tank) பதினெட்டையும் இவ் யுத்தத்திற் பயன்படுத்தினர். அது அச்சமூட்டுவதாயிருந்தாலும் அதன் பயன்பாடு நம்பிக்கை அளிக்கக்கூடியதாகவிருக்கவில்லை (பிரெஞ்சுப் படையிடமிருந்து 31 டாங்கிகள் போர் முனைக்கு எடுத்து வருகையிற் பழுதடைந்து விட்டன.) போர் முறை மறுசீரமைப்பு மற்றும் விரைந்து தாக்கும் விமானங்களின் பயன்பாடு, எதிரிமீது ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தியது அத்துடன் விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் இவ் யுத்தத்தில் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டன. ஒக்ரோபரின் மாரிமழை, யுத்த களத்தை கடந்து செல்ல முடியாத சேற்றுச் சடலாக மாற்றிவிட்டது. போர் வீரர்கள் சேற்றுக்குள் அமிழ்ந்தனர். காயமுற்றோரும் அவ்வாறே சேற்றுட் புதையுண்டனர். நவம்பரின் நடுப்பகுதியில் நேசப்படைகள் ஐந்து மைல்கள் மட்டுமே முன்னேறியிருந்தனர். உயிர்ச் சேதங்கள் மற்றும் காயமுற்றோரின் எண்ணிக்கையானது பெரிதும் விவாதத்திற்குரியதாக இருந்தபோதிலும் சோம்மின் முதலாவது யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்பு உத்தேசமாக 6,50,000 ஜேர்மனியர், 1,95,000 பிரெஞ்சுக்காரர், 4,20,000 பிரித்தானியருமாவர். நேசப் படைகள் முன்னேறிச் சென்று தாக்கியதனால் பிரான்ஸிலுள்ள வேர்டன் (Verdun) மீதான ஜேர்மனியரின் பிடியை விடுவித்துக் கொண்டனர். அத்துடன் ஜேர்மனியரின் பிரதான படையணியை அதன் மேற்குப் போர் முனையில் நிலைகொண்டிருக்கவுஞ் செய்தனர். பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொடுத்த இப் போருக்கான திட்டத்தைத் தீட்டிய யொப்பிறே பதவியிலிருந்து ஒய்வெடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்

# பூநகரியின் அவல ஓசையும் அண்மை வரலாற்றில் இராணுவ வழிநடத்தல்களும்

**இராணுவ அதிகாரி ஒருவர் எழுதுவது**
*(திவயின - 05.12.93)*

ஸ்ரீலங்கா பாதுகாப்புப்படை வரலாற்றில் இதுவரை முகம்கொடுத்த தாக்குதல்களில் வாழ்க்கைக்கும் போர்க்கருவிகளுக்கும் பாரிய சேதம் ஏற்படுத்திய கொடூரமான பரந்தளவான தாக்குதல் பூநகரியில் பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதல் ஆகும். இந்தக் கொடூரமான தாக்குதலில் ஏறக்குறைய 600 வீரர்கள் இறந்தும் நூறு பேரளவில் அல்லது கொஞ்சம் கூடிய தொகையினர் உயிரைப் பணயம் வைத்தவர்களைப்போலப் பயங்கரவாதிகள் கையில் அகப்பட்டும் உள்ளனர். பத்துலட்சத்து முந்நூறு ரூபாவிற்கு கிட்டிய பெறுமதியுள்ள போர்க்கவச வாகனங்கள், மோட்டார் ஆயுதங்கள் கடற்படைக்கப்பல்கள் சமிஞ்ஞை உபகரணங்கள் ஆகியனவும் வேறு போர்க்கருவிகளும் பயங்கரவாதிகளால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. பதில் தாக்குதல்களில் பயங்கரவாதிகள் 492 பேர் இறந்துள்ளதுடன் மேலும் 500 பேரளவிற் காயப்பட்டுள்ளனர்.

இதற்குமுன் ஆனையிறவு கட்டைக்காடு முகாம்களையும் பின் ஜனகபுர முகாம்களையும் பயங்கரவாதிகள் தாக்கினர். அத்தாக்குதல்களின்போது

> *உயிருக்கும் உபகரணங்களுக்கும் ஏற்பட்ட அழிவை நேரக்கின் இவ்வளவு உயிர்களை அர்ப்பணித்து மிகவும் கஷ்டத்துடன் பிடிக்கப்பட்டு, போர்த்தந்திரமாக மிகவும் முக்கியமான நிலப்பிரதேசத்தை கைவிட்டு பின்வாங்கும் சிறு விடயம் பற்றி கவனித்தால் போர் பற்றி அறியாதவர்களும் கூட இச்செயற்பாடுகளின் சாதக பாதகங்களை விளங்கிக் கொள்வர்.*

பத்துலட்சம் பெறுமதியான போர்க் கருவிகளை அவர்கள் கைப்பற்றிச் சென்றனர். ஆனால் அத்தாக்குதல்களில் பாதுகாப்புப் படைக்குப் பூநகரிச் சண்டையில் ஏற்பட்டதுபோல் பாரிய உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. 700 போர்வீரர்களின் வாழ்வை (உயிரை) விலைத்தொகைகளிற் கணிக்க முடியாது. இப்படி அதிகளவு போர்வீரர் தொகையாக ஒரே தினத்தில் இறந்திருந்தும் பொறுப்புச் சொல்லவேண்டியவர்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். அப்படியே எதிர்காலத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? என்பதும் ஆகும்.

அமெரிக்கப்படை வீரனின் வாழ்வை (உயிரை) நாசப்படுத்தும்போது அதுபற்றி அந்நாட்டு ஜனாதிபதி தனிப்பட்ட ரீதியிற் கவனம் செலுத்தவும் பொறுப்புச் சொல்லவேண்டியவர்களுக்குத் தண்டனை கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கிறார்கள் இதிலிருந்து அந்நாட்டு இராணுவ வீரர்களுக்கு அரசினாற் காட்டப்படும் கவனம் எவ்வளவு என்பதை விளங்கிக்கொள்ள முடியும். அரசையும், நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க உயிர் கொடுத்துப் போர் செய்கின்ற போர் வீரனைப் பாதுகாக்க அவனுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. பொறுப்புச் சொல்லவேண்டியவர்கள் செய்துள்ள விடயங்கள் என்ன? என்பது புதிராகும்.

இப்புதிருக்கு அரசைப்போலவே சிரேஷ்ட இராணுவத் தலைவர்களும் பொறுப்புச் சொல்ல வேண்டும். பொருத்தமான தலைவன் இல்லாத நாடுபோல தலைவன் இல்லாத இராணுவமும் இருக்கமுடியாதென்பதுசாதகமானதல்ல. தலைமைப் பலத்தாலோ பிரசாரம் மூலமோ பெற்றுக்கொள்ள முடியாததுடன் அப்படிச் செய்வதும் சுயநலமான, புத்தியில்லாத் தன்மையாகும். பத்து வருட காலங்கள் நிரம்பியுள்ள இந்த யுத்தம், சொத்துக்கள் போலவே பெறுமதியான மனித வாழ்வையும், ஆயிரக்கணக்கில் பலிகொண்டுள்ளது. இவ்வள்வு பயமுறுத்தலுக்கு இலக்கான நாசகார யுத்தம் முடிவு பெறுவதற்கு, பொறுப்புச் சொல்லவேண்டியவர்களுக்கு நேர்மையான தேவை ஒன்று இல்லாதிருப்பது விளக்கமாகத் தெரிகிறது. மேலும் பத்துவருட கால எல்லையுள் வருடத்திற்கு 2500 கோடி ரூபா வீதம் பாதுகாப்புச் செய்யவேண்டிய தொகை 25000 கோடி ரூபா ஆகும். யுத்தம் மேலும் பத்து வருடங்களுக்கு நீளுமே அன்றி முடிவு கிட்டாது. இதன்படி எதிர்வரும் பத்துவருடங்கள் முழுவதும் எல்லை காணமுடியாத இந்தப் போரில் பெறுமதியான இந்தச் சொத்துக்கள் வாழ்வுகளை நாசப்படுத்திக்கொள்வதைவிட வருடத்துக்குப் பாதுகாப்புச் செலவாக இதைவிட கூடிய தொகைப் பணத்தை ஒதுக்குவதுடன் இராணுவத்துக்கு அவசியமான போர்க் கருவிகள், செல்வங்களைக் பெற்றுக்கொடுத்து வீரர்களுக்குத் தைரியத்தை ஊட்டி பொதுமக்களின் ஆசீர்வாதமும் பெற்றுக் கொடுத்தால் நீளும் இப்போரைக் குறுங்காலத்திற்கு எல்லைப்படுத்தமுடியும். இப்படிச் செய்வதால் அரசியல் ரீதியில் - சிலவேளை தனிப்பட்ட ரீதியிலும் - நட்டம் ஏற்பட இடமுண்டாகையினால் அரசியலாளர் அப்படிச் செய்யவில்லை.

அரசியல் நிர்வாகிகளின் ஒரே நோக்கம் யுத்தத்தில் வென்று நாட்டில் சமாதானத்தை உதிக்கச்

செய்ய நேர்மையாகச் செயற்படுவது அல்ல. அதற்கு தமது பலத்தைப் பாதுகாக்கும் விதத்தில் தேவையான பொறுப்பைக் கொடுப்பதாகும். இது சிறிலங்கா அரசியல் வரலாற்றில் மிகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. இந்தப் போருக்குத் தேசியத் திட்டமோ, தேசியத் தலைமைத்துவமோ இல்லை என அரசாங்கக் கட்சியின் பதிற் சபாநாயகர் காமினி பொன்சேகா அவர்கள் கடந்த கால பாராளுமன்றக் கூட்ட அமர்வில் கூறியுள்ளார். இது மிகவும் பிழையற்ற யதார்த்த ரீதியான சான்று. இந்தப்பயமற்ற கூற்றுக்கு எமது கௌரவமான அன்பு வணக்கத்தைச் செலுத்துவோம், காமினி பொன்சேகா போர் வீரர்களுக்கு நேர்மையாக அன்பு செலுத்துகின்றவரும், உண்மையைக் கதைப்பதில் அச்சமற்ற தன்மைகள் எனவும் இங்கு குறிப்பிடவேண்டும்.

பொருத்தமற்றவர்களுக்குப் பொறுப்பான நியமனங்களும் தலைமைத்துவமும் பெற்றுக்கொடுத்த எல்லா வேளைகளிலும் தோல்விக்கும் அழிவுக்கும் முகம் கொடுத்துள்ளோம் என்பதை வரலாறும் ஒத்துக்கொண்டுள்ளது. இலங்கை வரலாற்றில் இது நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. அண்மைக்காலத்தில் மக்கள் தலைவர் ஒருவரால் செய்யப்பட்ட புத்தியற்ற செயல்கள் காரணமாக எதிர்காலத்தில் பாதுகாப்புப்படை வீரர்கள் அவர்களுடைய வாழ்க்கையை அதற்கு நட்ட ஈடாகக் கொடுப்பவர் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையாகும். சிறிலங்கா பாதுகாப்புப்படையிலும் பொருத்தமான தலைமைத்துவம் இல்லை என்பதும் சென்ற காலங்களுள் இலங்கைப் பாதுகாப்புப் படை பெற்ற தோல்விகளிலிருந்து தலைமைத்துவத்தின் செயற்தன்மை நன்கு விளங்குகின்றது. எங்கள் பாதுகாப்புப் படை முக்கியஸ்தர்களுடைய திறமைபற்றிப் பயங்கரவாதிகள் காட்டியுள்ள கருத்துக்கள் பின்வருமாறு:-

ஜே. ஓ. சி ஒழிக்கப்பட்டு பாதுகாப்புக் குழுவை ஒழித்து வேறு குழுக்களை நியமித்தனர். எனினும் எத்தகைய வேறுபாடோ, விருத்தியோ ஏற்படவில்லை. இதற்குக் காரணம் எந்தச் சபையை அமைப்பினும் அந்தச் சபையில் அதிகாரப் பதவிகளைப் பெறுபவர்கள் அதே ஆட்களாக இருப்பதாகும்.

## இது உண்மையான ஒன்றாகும்

சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுக்கும் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கும் இடையே நிகழும் போருக்குத் தேவையான ஆலோசனைகளும் தொழில்நுட்பப் போர் அறிவும் வழங்க ஓய்வுபெற்ற சிரேஷ்ட படை அதிகாரிகள் முன்வர விரும்பியுள்ளனர் எனப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளது. இந்தப் போர் இதுவரை நீளுவதற்குப் பொறுப்புச் சொல்லவேண்டியவர்களில் ஒருபகுதியினரே, இன்று போர் ஆலோசனை வழங்க முன்வந்துள்ளனர். இந்த அலுவலர்களுடைய போர்த் தொழில்நுட்ப அறிவை நாம் நன்கு அறிவோம். ஆதலால் அவர்களுக்குச் சொல்லவுள்ள ஒரே விடயம் ''மிகவும் நன்றி அவசியமில்லை'' என்பதாகும். இவர்களுடைய ஆலோசனையைப் பெறப்போவதால், புலிகள் அமைப்பு முழுப் பெரிய இலங்கைத் தீவையும் அடிமைப்படுத்திய பின்பே சண்டை முடியும். இங்கு செய்யவேண்டிய நடைமுறை ரீதியான சரியான தீர்மானம் பொருத்தமற்றவர்களை ஓய்வு பெறச் செய்து பொருத்தமானவர்களுக்குத் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொடுப்பதாகும்.

அண்மைக் காலத்தில் சிறிலங்காப் பாதுகாப்புப் படை மிகப் பெரியதாக்குதலைப் பெற்றுக் கொடுத்த கிளாலி அல்லது யாழ்தேவி நடவடிக்கையின் பக்கம் ஒருகணம் திரும்பிப் பார்ப்போம். மிகவும் சாதகமான செயற்பாடாக மிகப் பெரிய தாக்குதலைப் பெற்றுக்கொடுத்தும் இதுவரை பாதுகாப்புப் படை செய்துள்ளவற்றில் விளக்கமற்ற அறிவற்ற செயற்பாடென யாழ்தேவி நடவடிக்கையை அறிந்துகொள்ளலாம். ஆயுதங்களையும் நூற்றுப்பதினெட்டு பெறுமதியான உயிர்களையும் இழந்த இந்தப் போரில், பயங்கரவாதிகள்கூட பயன்படுத்த எடுக்காத (பாவனைக்குதவாத) கடற்படைத் தாக்குதல்களின் பின் கைவிடப்பட்டிருந்த வள்ளங்கள் 600ஐ நாசப்படுத்தியமையும் நூற்றுக்கும் கூடிய பயங்கரவாதிகளினைக் கொன்று போட்டமையும் தான் பெற்ற இலாபமாகும். இச் செயற்பாடு சாதகமாக இருந்ததை ரூபவாகினி, வானொலி, பத்திரிகைகள் உலகுக்குப் பெரும் பிரச்சாரம் செய்யவேண்டியதில்லை.

உயிருக்கும் உபகரணங்களுக்கும் ஏற்பட்ட அழிவை நோக்கின் இவ்வளவு உயிர்களை அர்ப்பணித்து மிகவும் கஷ்டத்துடன் பிடிக்கப்பட்டு, போர்த்தந்திரமாக மிகவும் முக்கியமான நிலப்பிரதேசத்தை கைவிட்டுவிட்டு பின்வாங்கும் சிறு விடயம் பற்றி கவனித்தால் போர் பற்றி அறியாதவர்களும் கூட இச்செயற்பாடுகளின் சாதக பாதகங்களை விளங்கிக் கொள்வர். இந்த நடவடிக்கைகள் சாதகமானது எனக்காட்டப்பலர் நியாயங்களை முன்வைத்துள்ளனர். இந்தச் செயற்பாடுகள் போர்ப் படையில் கடந்தகாலச் சாதகமான செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளது. போர்த் தலைவர்களுடைய சுயநலமும் குறுகிய மனப்பான்மையும் இங்கு விளங்குகின்றது.

சிறிலங்கா கிறிக்கற்குழு (துடுப்பாட்டக்குழு) தோல்வியடையும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்ப்படியாமைக்கான (சுதந்திரத்துக்கான) விடயங்கள் முன்வைத்துள்ளது. ஆள் தெரியாதவர்களுக்கு முற்றும் கோணலாகும். பாதுகாப்புப்படை தோற்கும் எல்லா வேளைகளிலும் (கீழ்ப்படியாமை) சுதந்திரத்துக்கான காரணங்களை முன்வைத்துள்ளது. இந்த விடயத்தில் சிறிலங்காக் கிறிக்கட் குழுவும் சிறிலங்காப் பாதுகாப்புப் படையும் ஒத்தவை.

பொருத்தமாக கடமையைச் செய்யாது எதிர்காலத்தில் வரும் தோல்விகளிற்கு சுதந்திரமான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் ஒன்று காலநிலை என்று முன்மொழியப்பட்டது. ஆனால் காலநிலையின் செல்வாக்கு விதைப்பதற்கும், மீன் பிடிப்பதற்கும் மாத்திரமே. ஆனால் வேண்டிய காலநிலை தேசநிலைத் தன்மைகளின் கீழ் வீரர்கள் போராடப் பழகியிருக்கின்றனர். இது தற்காலிகமானது.

பயங்கரவாதிகளின் தாக்குதல்களின் முடிவில் இராணுவ விசாரணை ஒன்று ஏற்படுத்த வேண்டும். அதற்காக அவசியமற்ற பிரச்சாரங்கள் தேவையில்லை மிகவும் நடைமுறையானதும் செய்யப்பட வேண்டியதுமான வேலை தாக்குதல் பற்றி நன்கு கற்று விளங்கிக் கொண்டு எதிர்காலத்தில் இப்படியான தாக்குதல்களுக்கு இரையாகாது பொறுப்போடு செயற்படுவதாகும்.

இங்கு குறிக்கப்பட வேண்டிய இன்னொரு விடயம் உண்டு: அது பயங்கரவாதிகள் பாதுகாப்புப்படை முகாம்களை தாக்கப் போவதை ஏற்கனவே அறிந்துஉயர்பீடங்கள்அறிவித்திருந்தன. இது பற்றி தொடர்ந்து அறிவுறுத்தல் கொடுத்தோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் பொறுப்பிலிருந்து தப்புவதற்குச் செய்யும்முயற்சிகளாகும். ஆலோசனை தேவையானவர்களுக்குக் கொடுக்காலம். அவற்றைப் பின்பற்றுவதற்குப் பொருத்தமான, அடைப்பும் திட்டமும் தேவைகளும் பெற்றுக்கொடுத்தல். பொது ஆலோசனை அறிவுறுத்தல்கள் கொடுப்பதைவிட மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாகும். எதிர்காலத்தில் நடத்தவுள்ள தாக்குதல்கள் பற்றிப் பயங்கரவாதிகள் வானொலிச் செய்திகளை ஒட்டுக் கேட்பதால் அறியமுடிகின்றனர். பயங்கரவாதிகள் ஒரு நாளாவது வானொலிச் செய்தி மூலம் அறிய இடமளிக்கக்கூடாது என்பதை நாம் இங்கு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தக் கிழமைக்குள் ஆயத்தமாக இருங்கள் என்று கொடுக்கப்படுகிற முன்னறிவுப்பு எச்சரிக்கைகளைக் கொடுத்தல் நடைமுறைச்சாத்தியமானதல்ல.

இப்படியான அடைப்பினுள் போர்க்களத்தில் உள்ள சிரேஷ்ட கனிஷ்ட அதிகாரிகளால் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் பற்றிக் கொடுக்கப்படும் முன்னறிவிப்பைப் பெற்றுக்கொள்ளச் செய்ய வேண்டிய வேலைகளும் உள்ளன. அவை மிகவும் பிழையற்ற நடைமுறைச் சத்தியமானதும் காலத்தோடு நேரத்துக்குக் கிடைக்கிறதுமான முன்னறிவிப்பு ஆதலால் மிகவும் முக்கியமாகின்றது. அவையாவன பாதுகாப்பு வலயத்தில் அரசசேவையில் ஈடுபட்டிருக்கின்றபோது அந்தக்கணத்திலேயே செய்திகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியில் போர்வீரர்களை நிறுத்தச் செய்தல். சோதனையோடு கூடியகாவற்கற்கள் செய்தல், காதாற்கேட்கவும், கண்ணாற் பார்க்கவும் வீரர்களை நிறுத்திவைத்தல், ஆகியபடி அன்றன்று பாதுகாப்பு அரச அலுவலர் செய்தல்.

இவ்வரச கடமைகள் பொருத்தமான படி நிகழ்வின் ஆயிரக்கணக்கான பயங்கரவாதிகள் முகாமைத் தாக்க வருகிறார்களா? என்பதைக் குறைந்தளவு 10 நிமிடத்துக்கு முன்பு ஆகுதல் அறிந்து கொள்ளவும் அதற்காக ஆயத்தமாகித் திட்டமிட்டுப் பயங்கரவாதிகளுக்குப் பதிற்தாக்குதல் கொடுக்கவும் ஆயத்தத்தோடு இருப்பதற்கு நேரம் இருக்கலாம்.

இப்படிக் குறிக்கப்பட்ட நிகழ்வின்; பூநகரிப் போர் தோல்வி பெறுவது போர்க் கருவிகளை இழத்தலும் பாதுகாப்புப்படை அல்ல. பயங்கரவாதிகளுக்குமே இது கஷ்டமாகும் என்பதை விருப்பமில்லாவிடுலும் குறிப்பிடவேண்டும். இதைவிட நிலத்தைப் பாதுகாக்கும் அரசசேவையைச் செய்யும் அலுவலர்கள், போர்வீரர்கள் ஆகியோராற் பின்பற்றப்படவேண்டிய பாதுகாப்பு மூலோபாயங்கள் பல உண்டு. இவற்றைப் பாதுகாப்பு வலயங்களில் செய்கிற அதிகாரிகளும், வீரர்களும் அறிந்துகொள்ளவும் ஞாபகமில்லாது இருப்பின் திரும்பவும் ஞாபகப்படுத்தவும் இங்கு குறிப்பிடுகிறேன்.

அ) போர் என்றபடி திட்டமிட்ட நிலத்தைத் எதிரிக்குத் தடைசெய்தல்.

ஆ) பாதுகாப்பு நிலையம்.

(குறிக்கப்பட்ட தூரத்தில் குறிக்கப்பட்ட இடங்களிலும் பின்பக்கமும் இருக்கும்படி அனுமானித்து ஒழுங்கு செய்தல் வேண்டும்)

இ) எல்லா வெளிகளையும் அடைக்க முடிந்தளவு திட்டமிடல் வேண்டும்.

அன்னியோன்னியமாக ஒருவருக்கொருவர் உதவி வழங்கக்கூடியபடி திட்டமிடல் வேண்டும்.)

ஈ) பாதுகாப்பு நிலையங்கள் எதிரிக்குத் தெரியாதபடி முடிந்தளவு அடைத்துவைத்தல் அல்லது மூடுதல் வேண்டும்.

உ) பதிற்தாக்குதல் திட்டத்தை ஆயத்தப்படுத்தி வைக்கவேண்டும்.

ஊ) நல்லசெய்தி சேவை வலையமைப்பு கோல் சைகைப் பரிமாற்றத் திட்டமும் இருக்க வேண்டும்.

எ) நல்ல நிருவாகம் இருக்கவேண்டும்.

போர்த் தந்திர நியாயங்கள் விதிகள் மூலதர்மங்கள் புத்தகங்களில் எ படிக் குறிக்கப்பட்டிருந்தாலும் நிலமானது எதிரியின் பயழறுத்தல்களுக்கு உட்பட்டிருக்கும், அடிப்படையான நடைமுறை திட்டமிடுதலுக்கும் செய்யக்கூடிய விதத்தில் சேவை

3023C.C

செய்தல் நிலத்தில் உள்ள படை அதிகாரிகளின் பொறுப்பாகும்.

இவ்வெல்லா விடயங்களையும் செயற்படுத்த போர்வீரர்கள் மனதில் தைரியத்தை உயர்மட்டத்தினர் வைத்திருத்தல் வேண்டும். வயிற்றுக்கு ருசியான உணவும், கண்களுக்கு நித்திரையும், மாதத்தில் பலநாள் லீவும் இல்லாமல் ஒரே தொடர்ச்சியாக ஒத்து அரசசேவை செய்ய வீரர்களுக்கு மனத்தைரியம் இருக்கமுடியுமா? அதுவும் மணல் வனாந்தரத்தில் ஓய்வில்லாமல் வருடக்கணக்கில் இருக்க முடியுமா? பூநகரிப் பிரதேசத்தைப் பாதுகாத்த வீரர்கள் பல வருடங்களாக ஓய்வின்றி அப்படியான பாதுகாப்பு வலயத்தைப் பாதுகாத்தவர்களாவர். மனத்தைரியத்தைக் கட்டிக்காப்பதென்றால் நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய தலைவர்களும் நல்ல கட்டுப்பாடான நிர்வாகமும் அவசியமாகும். எதிர்காலம் பற்றி திட்டமில்லாமல் பொருத்தமான உணவு, நித்திரை ஓய்வு ஒன்றுமில்லாமல் எவ்வளவு காலம் போர் வீரர்கள் விழிப்பாய் இருக்கமுடியும் என்பது மிகவும் பிரச்சினையாகும். இப்படியான எல்லையுள் அரச சேவைசெய்வதை விட இறந்து விடுதலோ ஓடி விடுதலோ மன அமைதியானது வீரர்களைப் போலவே அதிகாரிகளும் நினைக் என்று கின்றனர் இந்தநடைமுறைச் சாத்தியமான தேவைகளையும் உணர்வுகளையும் படைத்தலைவர்கள் அறியாததுபோலவே அவற்றை விளங்கிக்கொண்டு அதற்குப் பொருத்தமான பரிகாரம் செய்வதற்கு ஊக்கமும் இல்லை. காரணம் அவர்கள் எப்பொழுதாவது இப்படியான கஷ்டமான நிலையின் கீழ் அரசகடமை செய்யவில்லை ஆதலால் ஆகும்.

பத்து வருடங்களாக இனிமையற்ற போரைப் பற்றி விசேடமாக இலங்கைப் பாதுகாப்புப்படை அண்மையில் பின்வாங்க நேர்ந்த காரணங்கள்பற்றி விபரமாகப் படித்துப்பார்த்து மீண்டும் ஏற்றுக் கொள்ள முடியாத தோல்வியைப் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பாதுகாப்புப் படையோ அரசியல், படைத்தலைவர்களையோ குற்றம் குணம் ஆராய்வதற்காக இந்தக்கட்டுரை எழுதப்படவில்லை. இக்கட்டுரையின் நோக்கம். சமாதானத்தை மதிக்கின்ற முழுப்பெரும் இலங்கைவாசிகளுக்கும் விசேடமாக நாட்டுக்காக உயிர் கொடுத்த யுத்தகளத்தில் இருக்கும் போர்வீரர்களின் உண்மைநிலையை அறிவிக்கவும், தலைவர்களுடன் இணைந்து பிழைகாரணமாக அப்பாவி போர் வீரர்களுடைய வாழ்வு வீணாக நாசப்படுத்வலுக்கு முடிவு தெரியாமல் இருப்பதாலும், நடுத்தரப் பாதுகாப்புப்படை வீரனான நான் இதை எழுதத்தொடங்கினேன்.

எல்லா நாளுமே பாடம் படித்துக்கொண்டோ இராணுவ நீதி விசாரணை செய்தோ எந்த இலாபமும் கிடைக்கப் போவதில்லை. ஏதாவது துர் அதிஷ்டம் (விபத்து) ஏற்படுவதற்கு முன் அது பற்றி முன்பே சிந்தித்துப் பார்த்து அதை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். துர் அதிஷ்டம் அல்லது ஆபத்து ஏற்பட்டபின் பதில் நடவடிக்கையில் ஈடுபடுதல் அறிவில்லாதவர்களுடைய செயற்பாடாகும். பயங்கரவாதிகளுடைய அடுத்த இலக்கு பாதுகாப்புப்படையின் மிக முக்கியமான பலாலி முகாமாகும். பலாலி முகாமின் இராணுவம் அங்குள்ள விமான நிலையத்திலும் துறைமுகத்திலும் தங்கியிருக்கிறது. பயங்கரவாதிகளுடைய (ஈழம்) ஆயுதக்கிளர்ச்சிக்கு வானூர்திகள் வான்தாக்குதலே மிகக்கூடிய தலையிடியாக உள்ளது. அவற்றை அழிக்கப் பயங்கரவாதிகள் தற்காலிக முயற்சி எடுத்துள்ளனர். அவர்கள் பலாலி முகாமைத் தாக்குவதனால், கட்டைக்காடு, கிளாலி, ஜனகபுர, பூநகரிப் போர்களிற் பெற்ற வெற்றிகளின் பயிற்சியாலும், யாழ்ப்பாணக் கோட்டை, சிலாபத்துறை. ஆனையிறவு, முல்லைத்தீவுச் சண்டைகளிற் பெற்ற தோல்விகளின் பாடத்தைக் கற்றதாலும் அவர்களுடைய எல்லா மனிதவளம், செல்வவளங்களையும் பிரயோகித்து ஈழப்போரில் இதுவரை செய்யாத கடுந் தாக்குதல்களைச் செய்வர்.

இத்தாக்குதல்கள் பின்வருமாறு நிகழலாம். கொன்றபடியே இறங்கும் புலிகளின் உறுப்பினர்கள் சிலவேளை தம் வானூர்தி செலுத்துபவர்களுடன் பலாலி முகாமினுள் இரகசியமாக நுழைந்த எங்கள் வானூர்தி ஓட்டுநர்களை கொன்றுவிட்டு வானூர்திகளையும் வான் தளத்தையும் நாசப்படுத்தி எங்கள் உலங்கு வானூர்தியை திருடிக் கொண்டு போகுதல். மேலும் பல பிரிவினராக முகாமுள் நுழைந்த எல்லாத் தரத்திலுள்ள படை மூலத்தளங்களை ஒரேயடியாகத் தாக்கி முகாமைக் கட்டுப்படுத்த முடியாதபடி கஷ்டம் உண்டாக்கல். பலாலி முகாமின் நான்கு பக்கமும் சூழ்ந்து பெரும் தாக்குதல் தொடுத்தல் வவுனியா அனுராதபுரம் இரத்மலானை வானூர்தித் தளங்களுக்கு ஏதாவது தடை உண்டாக்கல். வடக்கில் எல்லாப் பாதுகாப்புத் தடைமுகாம்களையும் ஏதாவது ஒரு நிலையிற் தாக்கி படைவீரர்களை அம்முகாம்களுக்குள்ளேயே முடங்கச் செய்தல். கிழக்குப் பிரதேசச் சாதாரண குடிமக்களைக் கொல்லல். கிழக்கில் தங்கியுள்ள இராணுவத்தினரை அந்த இடங்களுக்குள்ளேயே இருக்கும்படி செய்தல், கடற்புலிகள் மூலம் வடக்குக் கடல்களில் கண்ணிவெடி விதைத்தல், கடற் கப்பல்களைத் தாக்குதல், கடற்படையினர் பலாலி முகாமுக்கு உதவுவதைத் தடுத்தல், கொழும்பிலும் அண்டிய பிரதேசங்களிலும் குண்டுகளை வெடிக்க வைத்தல், இதன் மூலம் நாட்டில் குழப்பநிலை உண்டுபண்ணல். நாட்டின் தலைவர் ஒருவரையோ பலரையோ கொல்லுதல், மேலதிகப் படைகள் பலாலி முகாமை அணுகாவண்ணம் செயற்படல்.

மேலே கூறிய வேலைத் திட்டங்கள் ஒரேயடியாக தாக்குதலைச் சாதகமாகச் செய்வதற்குப் பொருத்தமான விதத்தில் படிப்படியாகவோ அல்லது ஒரே சமயத்திலோ நிகழ்த்தப்படலாம். இந்த

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

எதிர்காலப் பயமுறுத்தல்களுக்கு எம் போர்த்தளபதிகள் தம் கவனத்தைச் செலுத்துவதற்குத் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளனரா? இல்லை எனில் இப்போது அதுபற்றி கவனத்தைச் செலுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து ''சுகப்படுத்தலை விட விலக்கி விடுதல்'' என்னும் கொள்கையைப் பின்பற்றிக் கடமை செய்யும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இறுதியாகப் பூநகரியில் மிகவும் அவலக்குரலாகும். சனாதிபதி கூறும் விதத்தில் தோல்வியிலிருந்து வெற்றியாக அதை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளும் பதவிகளிற் பொருத்தமான மாற்றங்களும் செய்து இந்த மனிதத் தன்மையற்ற மிருகங்களான புலிகள் பயங்கரவாதிகளை வேரோடு அழித்து அவர்களை முற்றாகத் தோற்கடிக்க கைவலைகள் செய்து கொள்வது போல போர்க்களத்தில் உயிரை அர்ப்பணிக்க உள்ள எல்லாப் போர் வீரர்களுக்காகவும் நேர்மையாக, மன்றாட்டமாகக் கேட்கிறேன். பொருத்தமான தலைவர்களும் நடைமுறைச் சாத்தியமான படிமுறையான தேசியத் திட்டமும் இருப்பின் அதனூடாகப் பூநகரித் தோல்வியில் இருந்து வெற்றியை நோக்கிக் காலடி வைக்கப் பாதுகாப்புப் படைகளுக்கு முடியும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

# தமிழருக்குரிய தேசவழமைச் சட்டம்

இலங்கையின் சட்டமுறை ஓரளவுக்குக் கருத்து வேறுபாடுகளுக்கும் வாத எதிர்வாதங்களுக்குமுரிய ஒன்றாகும். ஏனெனில் ஒன்றுக்கு மேற்பட்ட சட்டங்கள் இந்நாட்டிற்குப் பொருந்தியமைகின்றன. அவை றோமன் டச்சட்டம் (Roman Dutch Law), ஆங்கிலச் சட்டம், பிரதேச இனச்சட்டங்கள் என்பனவாகும். இந்தச் சட்டங்களெல்லாம், ஒரு தனியான சட்ட அமுலாக்கல் முறையின் பல்வேறு தன்மைகளைக் கொண்டவையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பொதுச்சட்டம், ஆங்கிலச் சட்டம் மற்றும் றோமன் டச் சட்டத்தின் மூலங்களிலிருந்து பெறப்பட்டமையால், அது ஆங்கிலோ - அமெரிக்க 'பொதுச்சட்ட' மரபையும் றோமன் சட்ட மூலத்தையுடைய ஐரோப்பிய 'சிவில் சட்ட' மரபையும் ஒன்றிணைத்ததொன்றாகும்.

பிரதேச - இனச்சட்டங்களானவை இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மலபாரிலிருநது இடம்பெயர்5துவந்து குடியேறியவர்களுக்கான தேசவழமைச் சட்டமும், இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்களுக்கான முஸ்லீம் சட்டமும் இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள மட்டக்களப்பில் வசிக்கும் முக்குவர்களுக்கான சட்டமும், இலங்கையின் மத்திய மலைநாட்டிலுள்ள கண்டியில் வசிக்கும் சிங்களவர்களுக்கான கண்டிச் சட்டமுமாகும்.

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்மக்கள் தமக்கென உரிய சட்டங்களையும் சட்டநிறுவனங்களையும் கொண்டிருந்தார்கள். இவற்றுள் சில இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட டச்சுக்காரரினால் (ஒல்லாந்தரினால் சேகரிக்கப்பட்டு ஒன்றாகத்தொகுக்கப்பட்டுத் தேசவழமைச்சட்டத்தொகுப்பென, சட்ட உருக் கொடுக்கப்பட்டது. 1706-ம் ஆண்டில் சைமன்ஸ் தேசாதிபதியினால் ஐசாக்ஸ் (Isaacs) எனபவர் யாழ்ப்பாணப் பட்டணத்திலுள்ள பழக்கவழக்கங்களையும், சமூக ஒழுக்க விதிகளையும் மற்றும் அங்குள்ள மக்களின் சிவில் விவகாரங்களில் எப்படியான தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதையும் சேகரித்துத்தொகுத்தமைக்கும்படி ஆணைபதிகாரம் வழங்கப்பட்டார்.

இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து, வெவ்வேறான காலவேளைகளில் வருகை தந்த குடிவருவோர் முதலில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பின்பு இலங்கையின் வடமேல் மற்றும் கிழக்குக் கரையோரங்களிலும் குடியேறினார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் காணப்படுகின்றன. அதுதவிர மலபார், சோழ மற்றும் பாண்டிய இராச்சியங்களான தென் இந்திய மாநிலங்களிலுமிருந்து குடிவருவோர் இங்குவந்து குடியேறினர். தேசவழமைச்சட்டத்திற் பதிந்துள்ள பழக்கவழக்கங்கள் மிகுதியாக மலபாரைச் சார்ந்தனவென விபரிக்கப்பட்டிருக்கின்றது.

டட்சுக்காரரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள சகல தமிழர்களுக்கும் பொருந்தக்கூடியதான பழக்கவழக்கங்களின் தொகுப்பாகப் பிரயோகிக்கப்பட்டதாக அந்தச் சட்டத்தொகுப்பு காணப்பட்டது. டச்சுக்காரரினால் அமுலாக்கப்படுமுன் மூல டச்சுக்காரரின் சட்டக்கோவைத் தொகுப்பு யான் பிருஸ் (Jan Pirus) என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதுடன், அதன் பிரதிகள், நுண்ணாய்வுக்கும் திருத்தத்திற்குமாக முதலியார்களுக்கிடையில் அனுப்பப்பட்டது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருக்கும் பழக்கவழக்கங்களை அவை ஒத்திருக்கின்றதென ஏற்றுக்கொண்டனர்.

1799-ம் ஆண்டுப் பிரகடனத்தில் பிரித்தானியர், டச்சுக்காரரின் ஆட்சிக்காலத்தில் பேணப்பட்ட சட்டங்களின்படி நீதிபரிபாலன ஆட்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளும்படி உத்தரவாதமளித்தனர். அதுவுமன்றித் தேசவழமைச் சட்டம் இலங்கையிலுள்ள பிரதேச-இன தமிழரின் சட்டத்தின் தனித்துவமான கருவூலமாக இருப்பதை நாம் இப்போது காணுகிறோம்.

3023 cc

# உலக மக்களின் கல்வியறிவில்லாத பெண்களே பெருந்தொகையினராக உள்ளனர்

ஹென்றிலிற்ரோடி ரசிஜ
(டெயிலி நியூஸ் - 04.12.93)

உலகத்தில் கல்வியறிவு இல்லாத மக்களில் பெண்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இது திகைப்பூட்டும் உண்மையாக இருக்கின்றது. ஆசியாவிலுள்ள இரு பெண்களில் ஒருவர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். 2000 ஆண்டு மட்டில் உலகத்தில் கல்வியறிவில்லாத மக்களின் தொகை 100 கோடியாகவிருக்கும் எனவும், இத்தொகையில் பெண்களே கூடுதலாகவிருப்பர் எனவும் மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றது. தொடக்க நிலை பள்ளிக்குச் செல்லமுடியாத 116 மில்லியன் குழந்தைகளில் 2/3 பங்கினர் பெண்களாகவிருக்கின்றனர்.

வளர்முக நாடுகளில் நிலவும் பட்டினி, நோய், வறுமை முதலியவற்றை இல்லாதொழிக்க அமெரிக்காவிலிருந்து இலாபத்தைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் வேர்ல்டு நேபேஸ் என்ற தாபனத்தைச் சேர்ந்த திரு. கிறேக்பிக்ஸ் அவர்கள் வறுமை காரணமாகவே ஆசியாவிலுள்ள பெண்கள் கல்வியறிவைப் பெறமுடியாதிருப்பதாகக் கூறுகின்றார்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் வறுமை பல பிரச்சின்னகளைத் தோற்றுவித்த போதிலும், தங்கள் குடும்பம் வாழ்வதற்கு உதவ உழைக்கவேண்டிய பொறுப்பு பெண்களைச் சார்ந்ததாகவிருப்பதாக திரு. பிக்ஸ் அவர்கள் மேலும் விளக்கிக் கூறுகின்றார்.

வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைத் தேடுதல், விவசாயத்தை மேற்கொள்ளுதல், நீர் தேடிக் கொண்டுவருதல், விறகு சேகரித்தல், வீட்டுமிருகங்களைப் பாரமரித்தல் போன்ற இவை அனைத்தும் பெண்களால் செய்யப்பட வேண்டிய பணிகளாகக் கருதப்படுகின்றது.

பாடசாலைக்குச் சென்று கற்பதற்குப் பதிலாக, தங்கள் வாழ்க்கையை நடாத்தத் தேவையான பணிகளை ஆற்றவேண்டும் என அநேகமான பெண்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். பாடசாலைக்குச் செல்லும் வயதை அடையும் முன்னரே வீட்டு வேலைகளைச் செய்ய ஒரு சிறுமி ஆரம்பித்து விடுவாள். உதாரணமாக வேலைசெய்யும் முழு நேரத்தையும் எடுத்துக்கொண்டால் பெண்களே 2/3 பங்கு நேரம்வரை வேலையில் ஈடுபடுகின்றனர் என அகில உலக தொழில் தாபனம் (I. L. O) கூறியுள்ளது.

வாசிக்கக் கற்றுக்கொள்வதன் மூலம் மாத்திரம் பெண்கள் வறுமையிலிருந்து விடுபட முடியாதெனவும், அவர்களைச் சமுதாயத்தின் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தினால் அது மாற்றத்தை ஏற்படுத்த முக்கய அம்சமாக அமையும் எனவும், திரு. பிக்ஸ் அவர்கள் கூறுகின்றார். இது பெண்களுக்கு மாத்திரமின்றி அவர்களின் முழுக் குடும்பங்களுக்குமே நன்மை பயக்கும்.

தென் கலிபோர்னியாவிலுள்ள பல்கலைக்கழகத்தைசேர்ந்த காவநிதி நெல்லி பிஸ்றொம் கியுஸ்ற் இதை ஆதரிக்கின்றார்.

குழந்தையின் ஆரோக்கியம், குழந்தையை வளர்த்தெடுத்தல் மற்றும் திட்டமிட்ட முறையில் குடும்பத்தை அமைத்துக்கொள்ளுதல் போன்ற விடயங்கள் சம்பந்தமாகத் தாய்மார் நடந்துகொள்ளும் முறையைப் பற்றி கல்வியறிவு மூலம் பெண்கள் அறிந்துகொள்வதன் பயனாக அவர்கள் மிகுந்த நன்மையைப் பெறுவதாக இதைப்பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிப்பதாக இவர் மேலும் கூறுகின்றார்.

அதிக விசித்திரமான குழந்தைகளினதும், தாய்மை அடைந்த பெண்களினதும் இறப்பும் வறுமையும் கல்வியறிவின்மையுடன் தொடர்புள்ளதாக இத்துறையில் கைதேர்ந்தவர்கள் கூறுகின்றனர். பெண்களின் படிப்பறிவின் அளவிற்கும், குடும்பத்தின் அளவிற்கும், இறப்பு விகிதம் குழந்தைகளின் சத்துணவு போன்றவற்றிற்கும் இடையே தொடர்புள்ளதாக ஐக்கிய நாட்டு குழந்தைகளுக்கான நிதியத்தைச் (Unicef) சேர்ந்த மன்சூர் அகமட் அவர்கள் கூறுகின்றார்.

> *குழந்தையின் ஆரோக்கியம், வளர்த்தெடுத்தல் மற்றும் திட்டமிட்ட முறையில் குடும்பத்தை அமைத்துக்கொள்ளுதல் சம்பந்தமாகத் தாய்மார் நடந்துகொள்ளும் முறையைப் பற்றி கல்வியறிவு மூலம் பெண்கள் அறிந்துகொள்வதன் பயனாக அவர்கள் மிகுந்த நன்மையைப் பெறுகின்றனர்.*

பெரும் எண்ணிக்கையான கல்வியறிவற்றோருள்ள ஒரு சமூகத்திலுள்ள தனிமனிதன் தன் ஆற்றலை வெளிக்கொணரமுடியாமையும், தனது தேவையைப் பூர்த்தி செய்யமுடியாமையும், பொருளாதார மேம்பாடு அடையமுடியாமையும் தன்னையே தான் வளம்படுத்திக்கொள்ள முடியாமையும் அச்சமூகத்திற்குப்பாரிய இழப்பை ஏற்படுத்துவதாக இவர் மேலும் கூறுகின்றார்.

கல்வியறிவற்றோரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலக்கியப் புலமை வாய்ந்த வகுப்புகளை நாடத்துவதால் பயன் எதுவும் கிட்டாது என வேர்ல்ட் நேபேர்ஸ் அமைப்பு கண்டுபிடித்துள்ளது.

# வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்

(ஐலண்ட் - 07.12.93)

ஒலியை உபயோகித்து உள்ளத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்போது வாசிப்பு வியக்கத்தக்க அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. குழந்தைகளுக்கான எதுகை கொண்ட பாடல்களைப் பாடும்போது, அவர்களை உங்களுடன் சேர்த்துப் பாடவைப்பதற்கு நீங்கள் அதிக முயற்சி எடுக்கவேண்டியதில்லை. குழந்தைக்கு உற்சாகத்தை ஏற்படுத்துவதே நோக்கமல்லாது அதன் உற்சாகத்தை இழக்கச்செய்வது எங்கள் நோக்கமல்ல. ஆகையால் அது தவறாகப் புரிந்துகொண்டால் அதை இழிவுபடுத்தாது அது சிந்தித்துச் சரியாகப் புரிந்துகொள்ளும்வரை நாம் அவசரமடையாது பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு பிறந்த குழந்தைகள் கூட நாங்கள் வாசித்துக்காட்டுவதை அனுபவிக்கக் கூடியவர்களாகவிருக்கின்றார்கள். உதாரணமாக, குழந்தை ஒன்றைக் கைகளில் ஏந்தி மடியில் வைத்துக்கொண்டு சித்திரங்கள் வரையப்பட்ட நூல் ஒன்றைத் திறந்து அதிலுள்ள வர்ணம் தீட்டப்பட்ட வீடு, பூனை, குழந்தை போன்ற பழக்கப்பட்ட பொருட்களை அதற்குக் குறிப்பிட்டுக் காட்டினால் அற்புதமான கல்வி அனுபவத்தை அது பெற்றுக்கொள்கின்றது.

> *குழந்தை நடைபயின்றபின் அதற்கு எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கலாம். எழுத்துக்களை உருவாக்கும் கை உள்ளத்திற்கு உதவுவதால், வாசிப்பதையும், எழுதுவதையும் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் கற்பிக்கவேண்டும்.*

படங்களைத் தெரிவு செய்யும்போது அவை எவற்றைக் குறிக்கின்றன என்பதை குழந்தை தன் மனதில் பதியவைப்பதுடன், நூலினுடைய பக்கங்களின் வாசனையையும் தன்னைத் தூக்கிவைத்திருப்பவரின் கரங்களிலுள்ள வெப்பத்தையும், அவரின் குரலையும் அது தன்னுள் வாங்கிக்கொள்கின்றது. குழந்தைக்கு வாசித்துக்காட்டும் போது அதன் எல்லாப் புலன்களையும் அதில் ஈடுபடவைத்து அதற்கு மனநிறைவை ஏற்படுத்துவதுடன் புத்திக் கூர்மையை வளர்ப்பதற்கு அவசியமான அம்சங்களான அன்பையும், ஊக்கத்தையும் அதற்கு ஊட்ட வேண்டும்.

தனது மனதில்தோன்றும் கிளர்ச்சியை அடக்க முடியாத அந்த நூலைத் தன் கரங்களால் பற்றிப் பிடிப்பதற்குக் குழந்தை முயலுமாயின், அது தனது கரங்களில் பிடித்து மென்டுவதற்கு அதற்கு ஏதேனும் ஒரு பொருளைக் கொடுத்து அதன் கவனத்தைப் படங்களில் செலுத்த வைக்கவேண்டும். இப்படி வாசித்துக்காட்டுதலைக் குறுகிய நேரத்திற்கு ஆனால் அடிக்கடி நடாத்தவேண்டும். ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த வழிமுறை மூலம் பார்த்து உற்றுக்கவனிக்கும் பழக்கத்தை குழந்தை பெறுவதால் பின்னர் அது சந்திக்கவிருக்கும் கல்லூரி வாழ்வுக்கு இது ஆரம்பப் பயிற்சியாக அமைகின்றது.

குழந்தைகளுக்கான எதுகை நயம்சிறந்த பாடல்கள் மொழியிலுள்ள வேடிக்கைகளை அறியத்தூண்டுபவையாகவும், எதுகையையும் சத்தத்தையும் குழந்தை அனுபவிக்க உதவுபவையாகவும் உள்ளன. சிறு பிராயத்திலிருந்தே குழந்தைக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு எதுகை நயமிக்க குழந்தைகளுக்கான சிறந்த பாடல்களைக்கொண்ட அழகான வர்ணம் தீட்டப்பட்ட நூல்கள் மிகவும் அவசியமாக இருக்கின்றது: இந்தப் பாடல்களிலுள்ள சொற்கள் எமக்கு தற்போது பொருளற்றவையாகத் தோன்றினாலும், இந்தப் பழைய செய்யுட்கள் மூலம் குழந்தைகள் எங்கள் பாரம்பரியமான நற்பண்புகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றார்கள். 'கம்ரி டம்ரி சாற் ஒன் த உவால், கம்ரி டம்ரி காட், ஏகிறேற் வோல்'' (Humpty Dumpty sat on the wall, Humpty Dumpty had a great fall) போன்ற களிப்பூட்டும் பாடலைக் குழந்தையை எங்கள் கால்களுக்கிடையில் வைத்துக்கொண்டு பாடிக்காட்டும் போது, சந்தோஷ மிகுதியால் அக்குழந்தையை நிலத்தில் நழுவவிடும் பொழுதுகுழந்தைப் பராயத்தில்நாங்கள் அனுபவித்த மகிழ்ச்சியை அது எண்ணவைப்பதுடன் புத்தெழுச்சியையும் ஏற்படுகின்றது. இன்னொரு வரலாற்றுக் காலகட்டத்தின் அரசியல் ரீதியான பாட்டு என இந்தப்பாடலை நாம் குழந்தைகளாக இருந்தபோது அறிந்திருக்கமாட்டோம். நாம் இதைப்பற்றிக் கவலையடைய வேண்டியதில்லை. இந்த அர்த்தமற்ற பாடல்தரும் மகிழ்ச்சிக்காக நாம் அதைப் பாடுகின்றோம்.

குழந்தை நடைபயின்று சிறிது தூரத்திற்கு நடந்து செல்லக்கூடிய பருவம் அடையும் போது அதற்கு எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் கற்றுக் கொடுக்க ஆரம்பிக்கலாம். எழுத்துக்களைப் பார்த்ததும் அவற்றை இலகுவாகக் கிரகிப்பதற்கு எழுத்துக்களை உருவாக்கும் கை உள்ளத்திற்கு உதவுவதால், வாசிப்பதையும், எழுதுவதையும் குழந்தைக்கு ஒரே நேரத்தில் கற்பிக்க வேண்டும். களிமண்ணை விளையாட்டுக்கு உபயோகித்தல் சிறந்த முறையாகும். பெற்றோரும், குழந்தையும் இணைந்து ''பீ'' (B) என்ற எழுத்தைக் கொண்ட வடிவங்களை

உருவாக்க வேண்டும். ப்பீஸ் (Bees), பற்றர் வ்விலை யிஸ் (Butter flies), பேபீஸ் (Babies), புக்ஸ் (Books) போன்றவற்றின் படங்களைக் குழந்தைக்குக் காண்பித்து ''பீ'' (B) என்ற ஓசையை எழுப்ப வேண்டும்.

அதன் பின் அறையிலுள்ள புக் (Book), பெட் (Bed), பற்றர் (Butter) பிரெட் (Bread) அல்லது பனானா (Banana) போன்ற 'பீ'(B) என்ற எழுத்தின் ஒலியைக் கொண்ட பொருட்களைக் காட்டுமாறு குழந்தையைக் கேட்க வேண்டும். இறுதியாகக் குழந்தையும், பெற்றோரும் களிமண்ணால் அமைக்கப்பட்ட 'பீ' என்ற எழுத்துக்களை வீட்டிலுள்ள பீ (B) என்ற பொருட்கள் மீது வைக்கவேண்டும்.

இந்த முறையைக் கையாண்டு எல்லா மெய்யெழுத்துக்களையும் குழந்தைகளுக்கு கற்பித்தபின், அப்பிள் (Apple), எக் (Egg), இங்க் (Ink), ஒரேஞ் (Orange) மற்றும் அண்டவெயர் (Underwear) போன்ற சொற்கள் மூலம் உயிரெழுத்துக்களைக் கற்பிக்க வேண்டும். தொடுத்தல், பார்த்தல் ஆகிய முறைகளில் எழுத்துக்களை அறிவதற்கு இந்த விளையாட்டு ஊக்கமளிப்பதாகவுள்ளது. ஒரு நாளில் ஒரு எழுத்தையே கற்பிக்க வேண்டும். குழந்தை இந்த விளையாட்டில் ஆர்வம் கொண்டிருக்கும் போது நீங்கள் அதை நிறுத்தி விட்டால் அதை விளையாடிக் காட்டும்படி குழந்தை மறுநாள் கேட்கும் போது இன்னொரு எழுத்துடன் இந்த விளையாட்டை நீங்கள் ஆரம்பிக்கலாம்.

மகிழ்வுறச் செய்யும் பாக்களாலும், விளக்கப் படங்களாலும் எழுத்துக்களை விளக்கிக் காண்பிக்கும் படப் புத்தகங்கள் நிறைய இருக்கின்றன. குழந்தைகளுக்கான எதுகை நயத்தை அவர்களுக்குக் கற்பிக்கும்போது விறுவிறுப்பையும், விளையாட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். கல்லூரி அனுபவத்தை அனுபவிக்க இந்த முறை குழந்தையை தயார்படுத்துவதுடன், கல்லூரி சுவர் மீதுள்ள சொற்களை அது நோக்கும்போது பழைய நண்பன் ஒருவனைப் பார்ப்பது போல் அது குழந்தையை உணரவைக்கும்.

குழந்தையின் உயரத்திற்கு ஏற்றவாறு விசேட சுவர் அல்லது கரும்பலகை ஒன்றை அமைத்துக் கொள்வது அதன் கரங்களையும் பார்வையையும் ஒரே நேரத்தில் ஊக்குவிக்கும் இன்னொரு முறையாகும். அதில் குழந்தை எழுதும் கிறுக்கல் எழுத்துக்கள் ஆரம்பத்தில் அர்த்தமற்றவையாகத் தோன்றினாலும் குழந்தையின் இயக்கும் சக்தி நாளடைவில் வளர்ச்சியடைந்து என்றோ ஒருநாள் அக் குழந்தை தனது பெயரை நீங்கள் பெருமைப்படத் தக்க வகையில் அதன்மீது எழுதியே தீரும். இக் கரும்பலகை அல்லது சுவர்மீது எழுத்துக்களை எழுதும் போது, பெரிய எழுத்துக்களுக்கு நிறந்தீட்டுவதைப் போன்ற முறையைக் கையாளலாம் அல்லது தடித்த அட்டையினால் உருவாக்கப்பட்ட எழுத்துக்களிலிருந்து குறிப்பிட்ட எழுத்துக்களை குழந்தைத் தேர்ந்தெடுக்கச் செய்யலாம். கடதாசியில் எந்தவொரு எழுத்தையும் எழுத ஆரம்பிக்கும் போது அது பெரிய எழுத்தாகவும், பெரிய வர்ணம் தீட்டும் கோலாலும் எழுதப்பட வேண்டும். தாங்கள் வர்ணம் தீட்டிய பொருட்களை நாளின் முடிவில் இனங்காணக் கூடியவர்களாக இருப்பதால் வர்ணம் தீட்டவும் தங்கள் பெயர்களை இனங் காணவும் கூடிய குழந்தைகளையே பாலர் கல்லூரி ஆசிரியர்கள் விரும்புகின்றார்கள்.

கல்லூரியில் வாசித்தலை கற்பிக்க பல வேறு பாடுகளுடன் இரண்டு முக்கியமான முறைகள் உண்டு. ஒலியியல் என அழைக்கப்படும் எழுத்துக்களை உச்சரிக்கும் முறை முதலாவது முறையாகவும், ஒரு பொருளைக் கண்டவுடன் அல்லது அதைப் பற்றி அறிந்தவுடன் அதன் பெயரை ஊகித்தல் அல்லது நினைவு கூரல் (ஞாபகப்படுத்தல்) அடுத்த முறையாகவுள்ளது. புராதன மொழியானது விளங்கும் ஆங்கில மொழியானது லத்தீன், கிரேக்கம், டேனிஷ், பிரான்ஸ் மற்றும் ஆங்கிலோ சக்சன் மொழிகளுடன் கலப்புற்று அம்மொழிகளின் செல்வாக்கு உட்பட்டுள்ளதால் புதுமையான உச்சரிப்புகளைக் கொண்டுள்ளது. சிற் (Sit) அல்லது வ்வாற் (Fat) போன்ற பழைய சொற்கள் இலகுவான உச்சரிப்புக்களைக்கொண்டிருக்கும் அதேவேளையில் டவ் (Dough) ''ரச்'' (Touch), பிலவ் (Plough) போன்ற சொற்களின் உச்சரிப்புக்கள் எழுத்தில் காணப்பட்டவற்றின் ஓசையைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், நைவ் (Knife) மற்றும் நோம் (Gnome) ஆகிய சொற்களின் உச்சரிப்புகள் அவற்றிற்கான எழுத்துக்களின் உச்சரிப்புக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவுள்ளன. இளம் பிராயத்தின் போது குழந்தைகள் இவை யாவற்றையும் கற்றுத் தேர்ச்சியுறுவது சிறப்பான அம்சமாகும்.

நன்றாகத் தெரிந்த கதை ஒன்றை குழந்தைக்கு வாசித்துக்காட்டிய பின்னர், அதிலுள்ள ஒரு சொல்லை நீக்கிவிட்டு அந்தச் சொல்லு ஒலியியல் முறையுடன் அமைக்கப்பட்டதா? அல்லது சாதாரண முறையில் அமைக்கப்பட்டதா? எனக் குழந்தை ஊகிப்பதற்கும், உச்சரிப்பதற்கும் விட்டுக் கொடுத்தல் இவ்விரு கற்பித்தல் முறைகளையும் உள்ளடக்கியுள்ள ஒரு விளையாட்டாகும். கலாநிதி சியுஸ் (Dr. Seuss) அவர்களால் எழுதப்பட்ட நூல் இவ்வகையான சொற்களைக்கொண்ட நல்ல ஒரு நூலாக விளங்குவதுடன் சொற்களை வழக்கப்படுத்திக் கொள்வதற்கு அவை மீண்டும் மீண்டும் நூலில் இடம் பெறுவதுடன் அவற்றைச் சுலபமான முறையில் கற்றுக்கொள்வதற்கான அர்த்தமற்ற ஓசை நயங்களையும் கொண்டதாக விளங்குகின்றது.

பெரிய மற்றும் சிறிய எழுத்து உருவமைப்புக்களை குழந்தை நன்கறிந்து கொண்ட பின்னர் நூலின் பக்கம் ஒன்றை வாசிக்கும் போது குறிப்பிட்ட எழுத்தை அப்பக்கத்தில் காட்டும்படி குழந்தையைக் கேட்கவேண்டும். இந்த முறையை ஒழுங்காக ஆனால் குறுகிய நேரத்திற்கு நடைமுறைப் படுத்தவேண்டும். குழந்தையின் ஆர்வத்தை அவதானித்து படிப்படியாக மேலதிகமான எழுத்துக்களை கண்டுபிடிக்கக் குழந்தையை ஊக்குவிக்க வேண்டும். எனினும் அதன் ஆர்வம் அதில் குறைந்து வருகின்றதெனக் கண்டால் அதன் ஆர்வத்தை வேறுதிசையில் திருப்ப வேண்டும்.

# பெரும் கொலைக்களமான அங்கோலாவில் ஒரு சவால்

ஜோன் செரியன்
(புரொண்ட் லைன் - 17.12.93)

ஓர் ஆண்டுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ் முழு நம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் அங்கோலாவில் தேர்தல் நடாத்தப்பட்டது. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துவந்த உள்நாட்டுப்போருக்கு, வெகு சிரமத்தின் மத்தியில் அனைத்துலக சமூகம் ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்தது. அங்கு சண்டையிலீடுபட்டுவந்த இரு கட்சிகளான சனாதிபதி எடுர்டோ டொஸ் சான்ரோஸ் (Edvardo Dos Santos) தலைமையிலான நாட்டை ஆட்சிசெய்து வரும் அங்கோலாவிடுதலை இயக்கமும் (Movement for The Liberation of Angola) யோனாஸ் சவிம்பி (Jonas Savimbi) தலைமையிலான "யூனிட்டா" (Unita: National Union for The Totalindependens of Angola) இயக்கமும் பொதுமக்களின் தீர்ப்புக்குத் தாங்கள் பணிந்துநடப்பதாக வாக்குறுதி அளித்திருந்தன. அனைத்துலகத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் உட்பட, அத்தேர்தலை நடாத்துவதில் கலந்துகொண்ட அனைவரும் அத்தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெற்றுள்ளதென உறுதிப்படுத்தியுள்ளனர்.

மக்களில் அதிகமானோர் அங்கோலா விடுதலை இயக்கத்துக்கு ஆதரவளித்துள்ளார்கள் என்பதைத் தெரிந்துகொண்டதும், நீண்டகாலமாக மேற்குலகத்தால் ஆதரவளிக்கப்பட்டுவந்தவரும், இன்றுவரையும் சுதந்திரத்துக்காகப் போராடி வருபவர் என வர்ணிக்கப்பட்டவருமான யோனாஸ் சவிம்பி அவர்கள் புதிய வலுவுடன் உள்நாட்டுப்போரை மீண்டும் ஆரம்பித்துள்ளார், உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுமுன்னரே ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையினரால் ஆயுதங்களைக் களையப்படவிருந்த யூனிட்டாப்படைகள் தலைநகர் லுவாண்டா (Luvanda)வைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுத் தோல்வியடைந்தன. 'யூனிட்டா' நல்லவழியிலோ அல்லது தீயவழியிலோ சுதந்திரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டுள்ளது என்பது தெரிந்த விடயமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் நிபந்தனைகளை ஏற்று அங்கோலோ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த படைகள் ஆயுதங்களைக் களைந்தபோது, சவிம்பியின் படைகளின் கோழைத்தனமான நடவடிக்கையானது அவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. சவிம்பியும் அவரது படைகளும் லுவாண்டாவை விட்டு ஓட வேண்டியிருந்தாலும் அவர்கள் பெரிய நகரங்களையும், நகராட்சிப் பிரிவுகளையும் கைப்பற்றத் தொடங்கியுள்ளனர்.

அவதிக்குட்பட்டிருக்கும் அங்கோலிய மக்களுக்கு சமாதானம் என்பது நடைமுறையில் அடிவானத்தில் பார்த்த கானல்நீர்போலுள்ளது. அங்கோலாவில் உறுதியான சமாதானம் நிலவ உத்தரவாதமளிக்கவேண்டிய அனைத்துலக சமூகம் முக்கியமாக ஐக்கியநாடுகள்சபை, தற்கால வரலாற்றிலே என்றுமில்லாதவாறு நடந்துவரும் படுகொலைகளையும், துன்பங்களையும் கடந்த ஒரு ஆண்டுகாலமாக வெறுமனே ஊமைபோல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

பட்டினியாலும், யூனிட்டாவின் அழிவுச்செயல்களாலும் நாளொன்றுக்கு 1000 மக்கள் மடிந்து வருவதாக ஐக்கிய நாடுகள்சபை அதிகாரிகள் கூறுகின்றனர். பத்துலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பட்டினியால் வாடுகின்றார்கள். நாடுமுழுவதிலும் உள்ள மக்கள் போசாக்கின்மையால் நலிவடைந்து வருவதாகச் சுகாதார அதிகாரிகள் கூறுகின்றார்கள். சோமாலியா நாட்டில் ஐக்கிய நாடுகள்சபை ஆயுதத் தலையீடு செய்வதில் பெரும்பங்குவகித்த ஐக்கிய நாடுகள்சபைச் செயலாளர் நாயகம், திரு. பூட்ராஸ் பூட்ராஸ் காலி (Boutros Boutros- Ghali)

> மக்களின் தீர்ப்பை எவ்வித நிபந்தனைகளுமின்றி யூனிட்டா ஏற்றுக்கொள்ளுமாயின் அதற்கு வழங்கவேண்டியதைக் கொடுக்க அங்கோல விடுதலை இயக்க அரசாங்கம் இன்னமும் தயாராகவுள்ளது. ஒரு கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கு யோசனையைக்கூட அங்கோலா அரசாங்கம் கொண்டுள்ளது,

அவர்கள் அங்கோலாப் பிரச்சினையில் அனைத்துலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதில் ஓரளவு செயலாற்றியுள்ளார். இந்நேரத்தில் அங்கோலியாப் பிரச்சினையை சோமாலியாவின் பிரச்சினையுடன் ஒப்பிட்டால், சோமாலியாவில் ஒரு பிரச்சினையே இல்லையெனலாம்.

அனைத்துலக சமூகம் சோமாலியாவுக்கான தனது சிபார்சுகளை நடைமுறைப்படுத்தத்தவறின் பல அங்கோலாக்கள் உலகில் தோன்றும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ராஸ் பூட்ராஸ் காலி அவர்கள் அண்மையில் பத்திரிகையாளரிடையே பேசுகையில் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் பொருத்தமற்ற முன்னுரிமைகள் அங்கோலாவில் உடன்பிறப்புக்களிடையே சண்டைகள் ஏற்படக் காரணமாயமையும். சோமாலியாவில் எடுக்கப்பட்ட முயற்சிகள் போலன்றி, ஐக்கிய நாடுகள்

சபையானது நடைமுறையில் அங்கோலா நாட்டு மக்களை எளிதாக மாற்றிவிட்டது. அந்தக் கண்டத்தில் நடைபெற்றுவரும் கொடூரமான உள்நாட்டுச் சண்டை ஒன்றினால் பல ஆண்டுகளாக அழிவுக்குள்ளாகியிருக்கும் அந்நாட்டுக்கு ஆயுதமற்ற 350 இராணுவத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களையும், 150 காவல்துறையைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களையும் அனுப்பிவைப்பது போதுமானது என ஐக்கியநாடுகள் சபை எண்ணி அனுப்பிவைத்தது. கடுமையான சண்டை அங்கு மூண்டபோது முதன்முதலில் வெளியேறியவர்களும் அவர்களாகும். இப்படி நடக்குமென்பதை ஐக்கிய நாடுகள் சபை எண்ணி அனுப்பிவைத்தது. கடுமையான சண்டை அங்கு மூண்டபோது முதன்முதலில் வெளியேறியவர்களும் அவர்களாகும். இப்படி நடக்கும் என்பதை ஐக்கிய நாடுகள் சபையும் அனைத்துலக சமூகமும் நன்கறிந்திருந்தன.

தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசும்போது, திரு. சவிம்பி அவர்கள், தேர்தலின் பின்னர் மூன்று நான்கு வாரங்களுக்கு லுவாண்டாவில் சண்டை நடக்குமெனவும், அச்சண்டையில், ''நகரத்திலுள்ளவர்களே இறக்கப் போகின்றார்கள்'' எனவும் கூறியுள்ளார். சவிம்பியின் கொடூரத்தன்மையையும், தவறான போக்கையும் இவருக்கு ஆதரவு வழங்கிவரும் மேற்குலத்தவர்கள் நன்கறிவார்கள். முன்னொரு காலத்தில் இவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களின் கொலைகளுக்கு இவர் உடந்தையாக இருந்தார் என்பதற்கு ஆவணரீதியான சான்றுகளுண்டு. பல கட்சிகள் பங்குகொள்ளும் தேர்தலின் முடிவைச் சவிம்பி ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பது அங்கோலா விடுதலை இயக்கத்துக்கு நெடுங்காலமாகத் தெரிந்திருந்தது. உண்மையில் அது ஒரு நீண்டகால மாற்றத்தையே வேண்டி நின்றது.

அங்கு எங்கும் பயங்கரமான சூழ்நிலை நிலைநாட்டப்பட்டுவிட்டது. மேற்கு நாடுகளின் நெருக்குதலினால் பல கட்சிகள் பங்குபற்றும் தேர்தலை நடாத்த ஒப்புக்கொண்ட விடுதலை இயக்கம் தற்போது மீண்டும் முன்பிருந்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியிருந்தது. கடந்த ஒரு ஆண்டு காலத்தில் யூனிட்டா பெற்ற பல வெற்றிகளுக்குப் பின்னர், லுவாண்டாவிலுள்ள அரசாங்கம் தனது குறைந்த வளங்களையெல்லாம் எதிரிக்கு எதிராகப் பயன்படுத்தவேண்டியுள்ளது குவாப்போ (Huambo) குயிட்டோ (Cuito) ஆகியநகரங்களில் மக்கள் குவியலாகக் காணப்படுகின்றனர். பத்தாயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டதுடன், உள்நாட்டில் அகதிகளாவோர் தொகையும் பெருகியுள்ளது. எண்ணெய் வளம் நிறைந்த கபிண்டா (Cabinda) மாகாணத்திலுள்ள பிரிவினைவாதிகள், உள்நாட்டுப்போரைச் சாதகமாகக் கொண்டு எண்ணெய்க் குதங்கள் மீது தாக்கிவிட்டு மறையும் உபாயத்தைக் கையாள்கின்றார்கள். சுதந்திரமான, நீதியான தேர்தலை நடாத்தும்படி மேற்கு நாடுகள் வற்புறுத்தியதும், ஆளும் அங்கோல விடுதலை இயக்கம் இந்தக் கோரிக்கைக்கு இதயபூர்வமாக ஆதரவளித்ததும், அங்கோலா நாட்டு மக்களின் விடயங்களை மேலும் சிக்கலாக்கியது.

சென்ற அக்டோபர் மாதத்தில்தான் அனைத்துலக சமூகமானது அங்கோலாவில் படுமோசமான நிலையைக் கண்டும் காணாததுபோல் புறக்கணிக்கும் வெளித்தோற்றத்தைக் கைவிட்டது. வாக்குச் சீட்டினால் பெறமுடியாததைத் துப்பாக்கி வேட்டினால் பெறச் சவிம்பி முயல்வதை மேற்குலகம் எதிர்காது என இன்னமும் எண்ணிக்கொண்டிருக்கும் அங்கோலிய மக்கள் பலர் மன்னிக்கப்படவேண்டியவர்கள். சென்ற ஆண்டு அங்கோலா நாட்டு மக்களின் தீர்ப்பை புறக்கணித்ததைத் தொடர்ந்து, தென்னாபிரிக்காவினதும் சயர் (Zaire) நாட்டு இராணுவத்தினதும் மறைமுகமான உதவியுடன் யூனிட்டா 120 மாநகர சபைகளில் 114 மாநகரசபைகள் அடங்கிய நாட்டின் 2/3 பகுதியைக் கைப்பற்றுவதில் வெற்றிபெற்றிருக்கின்றது. மூன்றாண்டுகளாக நீடித்துவந்த உள்நாட்டுப் போரில் பெற்ற வெற்றிகளைவிட, ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை மீறியபின்னர் கூடுதலான இராணுவ வெற்றிகளை யூனிட்டா ஈட்டியுள்ளது.

அமெரிக்கா உட்பட 'யூனிட்டாவுக்கு ஆதரவு வழங்கிவந்த நாடுகள் பல தங்கள் இராணுவ மற்றும் நிதியுதவிகளை நிறுத்திய போதும், அவ்வமைப்புக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. காலங் கடந்து சென்ற அக்டோபர் மாதத்தில் அனைத்துலக சமூகம் தடைகளை விதித்ததனாலும், இது ஒரு சிறு பாதிப்பையே ஏற்படுத்தியது. நாட்டில் வைரக்கற்கள் தோண்டப்படும் மூன்று பகுதிகள் அதன் கட்டுப்பாட்டில் இருப்பதால், அது வாரமொன்றுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதியான வைரத்தைப் பெற்று வருகின்றது. இந்த வைரக்கற்கள் தென்னாபிரிக்காவிலுள்ள டி பியர்ஸ் (De Beers) சந்தையையும் மற்றும் தெல்அவிவ் (Telavia) விலிருந்து சூரத் (Surat) வரையிலுள்ள வியாபாரிகளையும் சென்றடைகிறது.

தென்னாபிரிக்காவின் டி கிளார்க் (De Klerk) அரசாங்கம், சவிம்பிக்கு மறைமுகமாக இராணுவ உதவிகளையும் மற்றும் எரிபொருள் விநியோகத்தையும் செய்து வருவதோடு, மக்கள் தீர்ப்புக்கமைய நடந்து கொள்ளும்படி அவருக்கு ஆலோசனை கூறுவதைவிட்டு அதற்குப் பதிலாக அவரது போராட்டத்தையும் அங்கோலாப் பிரச்சினைக்கு 'ஆபிரிக்கா முடிவு' காண வேண்டுமென்பதையும் ஊக்குவித்து வருகின்றது. மீண்டும் 'யூனிட்டா' புரட்சிக்கொடி உயர்த்தியதும் தென்னாபிரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. பிக்போத்தா (Pikbotha) சவிம்பியைச் சந்திக்கச் சென்றதுடன் ஆதரவும்

வழங்கினார். (பிக்போத்தா அங்கோலா அரசாங்கத்தால் வேண்டாதவர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டவர்) அடுத்த ஆபிரிக்கரான சீன் கிளேறி (Sean Cleary) சவிம்பியின் முக்கிய ஆலோசகர்களில் ஒருவராவர். நமீபியா (Namibia) தென்னாபிரிக்காவின் கீழ் இந்த காலத்தில் அந் நாட்டைப் பிரித்து 'தாய்நாடு' ஆக்கும் முறையை அங்கு செயற்படுத்த முயன்று ஒரு புதிரான மதிப்பை இவர் பெற்றிருந்தார். அங்கோலாவைப் பிரிக்கும் ஒரு கருத்தை உருவாக்கத் தென்னாபிரிக்காவிலுள்ள வெள்ளையர் அரசு முயற்சிகளைச் செய்து வருகின்றது.

தென்னாபிரிக்காவில் பலகட்சிகள் பங்குபற்றும் தேர்தலை நடாத்துவதற்கு வழிவகுக்கும் ஒரு ஒப்பந்தம் அண்மையில் கைச்சாத்தான பின்னர். தென்னாபிரிக்க முழு ஆதரவு அளித்துவந்த நாள் முடிந்து விட்டது. என்பது யூனிட்டாவின் தலைமைத்துவத்துக்குத் தெரியும். ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் (African National Congress) தலைவர் நெல்சன் மண்டேலா (Nelson mandela) அவர்கள் பிரிட்டோரியா (Pretoria) விலிருந்து மறைமுகமாகவோ, நேரடியாகவோ உதவிகள் செய்யப்படுவதை வெளிப்படையாகவே எதிர்த்துள்ளார், தென்னாபிரிக்கப் படைகளில் ஒரு பகுதியினர் யூனிட்டாவுக்கு உதவி வருகின்றனர். என்பதில் எவ்வளவு சந்தேகமுமில்லை. ஆனால் அடுத்த ஆண்டு ஆபிரிக்கத்தேசிய காங்கிரசின் அரசாங்கம் பதவியேற்கப்போவது சவிம்பியின் வீழ்ச்சியையும் அழிவையும் முன்கூட்டியே அறிவிப்பதாயுள்ளது. அங்கோல அரசுக்கு ஆயுதக்கொள்வனவு செய்வதற்கு இருந்த தடையை நீக்குவதும், யூனிட்டா மீது முழுத்தடை விதிப்பதும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானமானது சவிம்பியின் வீழ்ச்சியைக் குறிப்பதாகும்.

மக்களின் தீர்ப்பை எவ்வித நிபந்தனைகளுமின்றி யூனிட்டா ஏற்றுக்கொள்ளுமாயின் அதற்கு வழங்கவேண்டியதைக்கொடுக்க அங்கோல விடுதலை இயக்க அரசாங்கம் இன்னமும் தயாராகவுள்ளது ஒரு கூட்டரசாங்கத்தை அமைப்பதற்கான யோசனையைக்கூட அங்கோலா அரசாங்கம் கொண்டுள்ளது. சவிம்பியின் இனமான ஒவிம்புண்டு (Ovimbundu) இனத்துக்கு முக்கிய அமைச்சுக்களை வழங்குவதற்கு அந்த அரசாங்கம் வழமைக்குமாறான வழிவகைகளைக் கையாள முன்வந்தது. யூனிட்டாவுக்கு ஆதரவான பல பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியை விட்டுவிலகுமாறு சவிம்பி விட்ட அழைப்புக்குச் செவிசாய்க்கவில்லை. அவரது கட்சிக்குள்ளேயே சவிம்பிக்கு ஆதரவு குறைந்துவருகின்றது.. கட்சியின் ஆரமபகாலத் தலைவர்கள் பலர் நீக்கப்பட்டுள்ளனர், அல்லதுகொல்லப்பட்டுள்ளனர். தற்போது யூனிட்டாவின் தலைமைப்பீடம் சவிம்பியையும் அவரது நெருங்கியஉறுப்பினர்களையும் கொண்டதாகவுள்ளது.

கடந்த சில மாதங்களில் அரசாங்கப் படைகள் திருத்தியமைக்கப்பட்டதுடன் அவர்களுக்குப் புதிய ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளது. யூனிட்டாவின் கட்டுப்பாட்டிலிருந்த முக்கிய பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அங்கோலாவின் இரண்டாவது பெரிய நகரமும், யூனிட்டாவின் உத்தியோகப்பற்றற்ற தலைநகரமுமான குவாம்போ கூடியவிரைவில் மீட்கப்படவுள்ளது. அங்கு சிக்கியுள்ள பொது மக்கள் இன்னல்களுக்குள்ளாவார்கள் என்ற காரணத்தினால் அரசாங்கம் தனது இறுதித் தாக்குதல் நடவடிக்கையைப் பின்போட்டுவருகின்றது.

யூனிட்டா சந்தித்த இராணுவப் பின்னடைவுகள் மீண்டும் ஒருமுறை சவிம்பி சமாதானம் பற்றிப் பேசக் காரணமாயிருந்தன. தேர்தல் தோல்வியின் பின்னர் தான் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து தனது படைகளை விலக்கிக்கொள்ளத் தயாராகவிருப்பதாக 'யூனிட்டா' எழுத்துமூலம் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள்சபை நவம்பர் மாதத்தின் முதல் வாரத்தில் அறிவித்தது. கடந்த ஒரு ஆண்டு காலத்தில் கைப்பற்றிய பகுதிகளிலிருந்து தனது படைகளை விலக்கிக்கொள்ளும் பெருங்கோரிக்கைக்கு யூனிட்டா இணங்கியதுபோன்று அங்கோலா அரசாங்கமும் அதற்குச் சாதகமாக நடந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டது.

யூனிட்டா தனது படைகளை விலக்கி அவைகளை ஐக்கிய நாடுகள்சபையின் கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டுமென ஐக்கிய நாடுகள்சபையின் பாதுகாப்புச்சபை வற்புறுத்தியது. சமாதானப் பேச்சுவார்த்தைகள் கூடிய விரைவில் ஆரம்பமாகும் என ஐக்கிய நாடுகள்சபை நம்பிக்கை கொண்டுள்ளது. ஆனால் சவிம்பி எந்தவழியில் சென்றாலும் அது ஒரு தாமதப்படுத்தும் தந்திரமாகவே இருக்கும். பல தடவைகளில் சவிம்பி வாக்குறுதி அளிப்பதும் அதை மீறுவதுமாக நடந்துள்ளார். அவர் மீது உண்மையாக நம்பிக்கை ஏற்படவேண்டுமானால், காயமுற்ற மற்றும் பட்டினியால்வாழும் மக்களுக்கு மருந்து வகைகளும், உணவுப்பொருட்களும் சென்றடையும் வகையில் அவர் எவ்வித நிபந்தனைகளுமின்றி குவாம்போ மற்றும் முக்கிய நகரங்களிலிருந்து விலக்கவேண்டும். லட்சக்கணக்கான மக்கள் பட்டினியாலும் சம்பந்தமான நடவடிக்கைகளாலும் இறந்துள்ளதாகத் தெரியவருகின்றது. போர்த்துக்கீச ஏகாதிபத்தியத்துக்கெதிராக சண்டையிலும், பின்னர் போட்டிப்புரட்சிக்குழுக்களுக்கு எதிரான சண்டையிலும் பத்துலட்சத்துக்கும் மேற்பட்ட அங்கோலா நாட்டு மக்கள் கொல்லப்பட்டனர்.

அங்கு விரைவில் சாமதானம் ஏற்பட்டாலும் அங்கோலாவைத் திரும்பக் கட்டியெழுப்புவது கடினமாகவே இருக்கும் போரினால் திறைசேரியில் செல்வம் குறைந்துவிட்டது. வலுவிழந்தவர்களைப் பராமரிப்பதற்கும், உள்நாட்டிலுள் அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கும் அவசியமாகத் தேவைப்படும் பணம் போர் முயற்சிகளில் செலவிடப்பட்டுள்ளது. அங்கோலாநாட்டின் அரசியலில் சவிம்பி முக்கிய

பங்கு வகிக்கும்வரை சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையானது ஒரு மாயை என்பது அனுபவ வாயிலாகத் தெரிகிறது. இந்தச் செயல்கள் முன்னைய ஆதரவாளர்களான அமெரிக்கா போன்ற நாடுகளை இப்போது விழிப்புறச் செய்துள்ளது. தென்னாபிரிக்காவின் நிலையான உறுதிப்பாட்டுக்கு அங்கோலாவில் நிலையான சமாதானம் நிலவ வேண்டும் என்பதை அனைத்துலகச் சமூகம் உணர்ந்துள்ளது.

இதேபோன்று இன்னல்களை அனுபவித்த அண்டைநாடான மொசாம்பிக் (Mozambique) ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் சனநாயக முறைக்குத் திரும்பத்திட்டமிட்டுவருகின்றது. பலகட்சிமுறை கொண்ட சனநாயகமுறைக்கு மாறுவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மொசாம்பிக் நாட்டு மக்கள் காட்டிவந்தபோதும், சோமாலியாவுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகள் சபை மொசாம்பிக் நாட்டுக்குக் கொடுக்கவில்லை. இதேமுறையில் தென்னாபிரிக்கா அடுத்த இடத்தை வகிக்கின்றது. இந்த மூன்று நாடுகளிலுமுள்ள அதிகார நலக் கும்பல்கள் பலகட்சிமுறைக்கு அந்நாடுகள் மாறுவதைத் தடைசெய்ய முயற்சித்தாலும், உறுதியான தென்னாபிரிக்கா நன்மை பயக்கத்தக்கது என்பதை இதில் அக்கறை கொண்டுள்ள எல்லாத் தரப்பினர்களும் ஈற்றில் உணர்ந்து கொள்வார்கள். உண்மையில் ஒரு உறுதியான தென்னாபிரிக்காவானது உபசகாரா (Sub - Sahara) ஆபிரிக்காபோன்று எழுச்சிபெற உதவியளிக்கும்.

அனைத்துலக சமூகம், முக்கியமாக ஐக்கிய நாடுகள் சபை மிகவும் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை அங்கோலாவில் செய்யவேண்டியுள்ளது. 1991-ம் ஆண்டின் சமாதான ஒப்பந்தத்தை ஐக்கிய நாடுகள் சபை சரியானமுறையில் மேற்பார்வை செய்து செயல்படுத்தாமையே அங்கோலா மக்கள் அடைந்துவரும் அளவிலாத் துன்பங்களுக்குக் காரணமாகும். ஐக்கிய நாடுகள் சபையானது மீண்டும் தனது கவனத்தை அங்கோலாமீது செலுத்தி அங்கு சமாதான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டிய நேரம் இதுவாகும். குழப்பத்துக்கு காரணமான எல்லாத்தரப்பினரும் சோமாலியா போன்றல்லாது அனைத்துலக சமாதானத்திட்டங்களை வரவேற்றுள்ளனர். ஐக்கியநாடுகள் சபை தனது தீர்மானத்தைச் சரிவரச் செயல்படுத்தும் என அதன் மீது முழு நம்பிக்கை வைத்துள்ள அங்கோலா நாட்டு மக்களுக்கும், அந்நாட்டு அரசாங்கத்துக்கும் அனைத்துலக சமூகம் கடப்பாடுடையது இதுதான் ஐக்கிய நாடுகள் சபை இழந்தநன் நன்மதிப்பை மீளப்பெறுவதற்குள்ள ஒரு சந்தர்ப்பமுமாகும்.

# குடிமக்கள் சம்பந்தப்பட்ட போர்பற்றிய கோட்பாடும் நடைமுறையும்
# THE THEORY AND CONDUCT OF WAY CIVILIANS

பிரச்சினையொன்றிற்கு உட்பட்ட பகுதியினரின் ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமே யுத்தத்தில் ஈடுபடலாமென்பது வழிவழியாகப் பின்பற்றப்பட்டுவரும் சர்வதேச விதியாகும். தாக்குதலுக்குட்படக்கூடிய படையினரையும். தாக்கப்படக்கூடாத குடிமக்களையும் தெளிவான முறையில் வேறுபடுத்திக்காட்டச் சட்டம் எப்போதும் முயன்றுள்ளது.

1978-ம் ஆண்டில் செஞ்சிலுவைச்சங்கத்தின் சர்வதேசக்குழுவினால் தயாரிக்கப்பட்ட, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படை விதிகளில் ஒன்றான ஆயுதப்போருக்குப் பொருந்துவதானவிதி குடிமக்களையும் உடமைகளையும் காப்பாற்றுவதற்காக அவர்களையும் போரிடுபவர்களையும் யுத்தத்தில் ஈடுபடுவோர் வேறுபடுத்தி இனங்காணவேண்டும். குடிமக்களையோ அல்லது தனிப்பட்ட குடிமகனையோ தாக்குதலுக்கு இலக்காக்கக்கூடாது. இராணுவ இலக்குகள் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்படவேண்டும்'' எனக்கூறுகிறது. இரசாயன அல்லது அணு ஆயுதங்களைக் குடிமக்களுக்கெதிராகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் ஏற்கெனவே உள்ளன. இவற்றைவிட, 1981-ம் ஆண்டின் பாரம்பரிய ஆயுதப் பாவனைவிதிகள் (Conventional Weapons Convention) கண்ணிவெடி, பொறிவெடி மற்றும் இவைபோன்ற சாதனங்களையும் தீயேற்படுத்தும் ஆயுதங்களையும் குடிமக்களுக்கெதிராகவோ அல்லது கண்மூடித்தனமாகவோ பாவிப்பதைத்தடைசெய்கின்றன. 1977-ம் ஆண்டின் முதலாவது ஒப்பந்தம் குடிமக்களைப் பாதுகாப்பதற்காக, எந்தெந்த இலக்குகள் தாக்கப்படக்கூடாதெனக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. உதாரணமாக, பொதுமக்களை அச்சுறுத்தும் பிரதானநோக்கமாக மேற்கொள்ளப்படும் விமானக்குண்டு வீச்சுக்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. ஆகையால், விமானத்தை அவ்வாறான நோக்கத்துக்குப் பயன்படுத்துவது சட்டவிரோதமானதாகும். சிலசந்தர்ப்பங்களில் வணிகக்கப்பல்களைத் தாக்குவதற்குச் சட்டம் இடமளிக்கின்றது. ஆனால், அக்கப்பலிலுள்ள பிரயாணிகள், சிப்பந்திகள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாப்பான இடத்துக்கு மாற்றிய பின்பே, நீர்மூழ்கிக் கப்பலொன்றினால் அது மூழ்கடிக்கப்படலாம்.

# நோபல் அவர்களின் உன்னதமான நோக்குடன் அவருடைய காலத்தில் நிலவிய குறுகிய தேசியவாதம் முரண்பட்டதாகவிருந்தது

ரோனி ஒஸ்ரின்
(டெய்லி நியூஸ் - 16.11.93)

சுவீடன் நாட்டினரான திரு. அல்பிரட் நோபல் அவர்களின் அறக்கொடையிலிருந்து வழங்கப்படும் பரிசுகள் பற்றி இன்று ஆடம்பரமாகவும் ஆரவாரமாகவும் பேசப்பட்ட போதிலும், அதை உருவாக்கியவர் தன் இறுதி விருப்ப ஆவணத்தை 1896-ம் ஆண்டில் அறிவித்தபோது அதற்கு எதிராகப் பெரும் கூச்சலும் குழப்பமும் எழுந்திருந்தது.

இஸ்ரொக்கோமிலுள்ள நோபல் அறக்கொடை நிலையத்தின் தலைமைப் பீடத்திலுள்ள கண்ணாடிப் பெட்டி ஒன்றினுள் தற்போது பாதுகாப்பாக வைத்திருக்கப்பட்டிருப்பதும், நான்கு பக்கங்களைக் கொண்டதும், கையால் எழுதப்பட்டதுமான அந்த ஆவணம், அவருடைய உறவினர்களையும், சுவீடன் அரசாங்கத்தையும் பெரும் குழப்பமடையச் செய்துள்ளது.

திரு. நோபல் அவர்களின் இறுதி விருப்ப ஆவணத்தை நடைமுறைப்படுத்த தடையாகவிருந்த காரணிகள் அனைத்தையும் தனி ஒருவராக நின்று சமாளித்து வெற்றியீட்டியவரின் பேரனும், அறக்கட்டளையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பணிப்பாளருமான திரு. மைக்கல் சோல்மன் அவர்கள் (Micheal Sholman) "திரு. நோபல் அவர்களுடைய கருத்துக்கள் ஆர்வத்தைத் தூண்டுபவையாகவும், சர்ச்சைக்குரியவையாகவும், இருந்தன" எனக் கூறியுள்ளார்.

*மணம்புரியாதிருந்த திரு. நோபல் அவர்கள் தனது கடைசிக்காலங்களில் தனது சொந்த மொழியான சுவீடிஸ் மொழியில் பேசிவந்ததால் உட்கிடக்கையை இவரின் இத்தாலியப் பணியாட்களால் அறியமுடியவில்லை.*

சட்டரீதியான குறைபாடுடையதும், பரபரப்பை ஏற்படுத்துவதுமான அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க கொடை வள்ளலும், பேராற்றல் வாய்ந்த வெடிமருந்து வகையைக் கண்டுபிடித்தவருமான திரு. நோபல் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொறுப்பு அவரின் அந்தரங்கச் செயலாளராகப் பணியாற்றிய திரு. ராக்நர் சோல்மன் (Ragnar Sholman) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

திரு. நோபல் அவர்களின் இறுதிவிருப்ப ஆவணத்திற்குச் செயல் வடிவம் கொடுப்பதற்கு திரு. சோல்மன் அவர்கள் அயராது உழைத்திருக்காவிடின் அது நடைமுறைப் படுத்த முடியாத ஒன்றாகவே இருந்திருக்கும்.

திரு. நோபல் அவர்களின் பெருந் தன்மைக்கும் பெரு நோக்குக்கும், அவரின் காலத்தில் நிலவிய குறுகிய மனப்பாங்குக்குமிடையே ஒவ்வாத் தன்மை நிலவியது என திரு. மைக்கேல் சோல்மன் அவர்கள் நேர்காணல் ஒன்றின்போது கூறியுள்ளார்.

மணம் புரியாதிருந்த திரு. நோபல் அவர்கள், இத்தாலியிலுள்ள சான்ரெமோ என்ற நகரிலுள்ள தனது இல்லத்தில் 1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் திகதியன்று காலமானார். இவர் தனது கடைசிக்காலங்களில் தனது சொந்த மொழியான சுவீடிஸ் மொழியில் பேசிவந்ததால் உட்கிடக்கையை இவரின் இத்தாலியப் பணியாட்களால் அறியமுடியவில்லை.

மனித இனத்தின் மேம்பாட்டிற்காக முன்னைய ஆண்டில் உழைத்த சான்றோருக்கு பரிசு வழங்குவதற்கு தனது உடைமையின் பெரும்பகுதியைப் பயன்படுத்தி நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அவரின் இறுதி விருப்ப ஆவணத்திற்கு எதிராக இவருடைய உறவினர்கள் உடனடியாகவே நடவடிக்கை மேற்கொண்டனர்.

தனது உறவினர்களின் கருத்தை முன்னரே பெறாத திரு. நோபல் அவர்கள் பௌதீகம் மற்றும் இரசாயனத்திற்கான பரிசை வழங்கும் பொறுப்பை சுவீடின் விஞ்ஞானக் கழகத்திடமும், இலக்கியத்திற்கான பரிசை வழங்கும் பொறுப்பை சுவீடின் இலக்கியக் கழகத்திடமும் வழங்கியிருந்தார். மருத்துவத்திற்காக பரிசு வழங்கும் பொறுப்பு ஸ்ரொக்கோமிலுள்ள கரோலின்ஸ்கா கல்லூரியிடமும் சமாதானத்திற்கான பரிசு வழங்கும் பொறுப்பு நோர்வே பாராளுமன்றத்திடமும் வழங்கப்பட்டிருந்தது.

நோர்வேயும், சுவீடினும் ஒன்றாக இணைந்த ஆட்சி முறையிலிருந்து பிரிந்து சென்று சுதந்திரமான நாடாக தாங்கள் இயங்கவேண்டும் என்று

நோர்வே விடுத்த கோரிக்கை வலுவடைந்து வந்த வேளையில் அரசாங்கத்தின் தலைநகரான ஸ்ரொக்கோமில் வெளிவந்த திரு. நோபல் அவர்களின் இறுதி விருப்ப ஆவணம் அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிலர் அவரைத் தன் நாட்டுப்பற்று இல்லாதவர் என குறைகூறினர்.

''நோர்வே நாட்டு மக்களையும் திரு. நோபல் அவர்கள் தன் இறுதிவிருப்ப ஆவணத்தில் சம்பந்தப்படுத்தி இருந்ததால் சுவீடின் நாட்டு அரசரான இரண்டாவது ஒஸ்கார் அவர்கள் இதை விரும்பவில்லை.'' ''யுத்தத்திற்குத் தயாராக வேண்டும் என்ற கருத்து நிலவுகின்ற வேளையில் சமாதானத்திற்கான பரிசை தீர்மானிக்கும்படி அவர் நோர்வே மக்களைக் கேட்டுள்ளார்'' என திரு. சோல்மன் கூறியுள்ளார்.

பரிசைப் பெறத் தேர்ந்தெடுக்கப்படுவர்கள் அவர்கள் ஸ்கன்டினேவிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன? வேறு எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன? அதைப் பெற உரித்துடையவர்கள் என்ற திரு. நோபல் அவர்களுடைய விருப்பத்தை சுவீடன் நாட்டின் விஞ்ஞானச் சமூகம் விரும்பவில்லை.

திரு. நோபல் அவர்களின் இறுதி விருப்ப ஆவணத்திறகுச் செயல்வடிவம் கொடுக்க மூன்று ஆண்டுகளாக உழைத்த திரு. ராக்நர் சோல்மன் அவர்கள்' சுவீடினிலுள்ளதும் திரு. நோபல் அவர்கள் கடைசியாக வாழ்ந்த வீட்டிற்கு அண்மையாக உள்ளதுமான கார்ல்ஸ் கோகாவிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தைப் பற்றிய பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு அதனுடன் தொடர்புள்ள அனைவரையும் இணங்கவைத்தார்.

திரு. நோபல் அவர்களின் உடைமைகளை ஐரோப்பாவின் பல தலைநகரங்களிலிருந்து பெற்றுக் கொள்ளச் சென்ற திரு. சோல்மன் அவர்கள் பாரிஸ் நகரத்தின் தெருக்களுக்கு ஊடாக குதிரை வண்டியில் செல்லும்போது தன்வசமிருந்த பெறுமதி வாய்ந்த ஆவணங்களைப் பாதுகாப்பதற்காக சன்னம் நிரப்பிய பிஸ்தோலை தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தார்.

ருசியாவிலுள்ள புனித பீற்றேஸ் பேர்க்கில் வசித்து வந்த திரு. நோபல் அவர்களின் மருமகன் எமானுவேல் அவர்களின் உதவியுடன் திரு. நோபல் அவர்கள் தன் உறவினர்களுக்கு நன்கொடையாக வழங்க எண்ணியிருந்த தொகையைவிட கூடுதலான தொகையை வழங்கியதன் மூலம் திரு. நோபல் அவர்களின் உறவினர்களின் ஆதரவை திரு. சோல்மன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தனது மாமனாரின் இறுதி விருப்ப ஆவணத்திலுள்ள நல்ல நோக்கத்தை நன்கு புரிந்துகொண்ட திரு. எமானுவேல் நோபல் அவர்கள், அதற்கு செயல்வடிவம் கொடுக்கும் ஒருவர் ''ஆத்மாவுக்குத் தலைவர்'' என்ற ருசிய முதுமொழிக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என திரு. ராக்நர் சோல்மன் அவர்களுக்கு கூறி அவரைத்திறம்படச் செயற்பட ஊக்குவித்தார்.

தருமச் சொத்தை நிர்வகிப்பதற்கான அனுமதியை சுவீடன் நாட்டு மன்னரிடமிருந்தும், அவருடைய அரசாங்கத்திடமிருந்தும் பெற்றுக்கொண்ட திரு. சோல்மன் அவர்கள் சன்மானத்தைப் பெறத் தேர்ந்தெடுப்பவர்களில் தான் தலையிடாதிருப்பதாக உறுதிமொழி வழங்கினார்.

''ஐரோப்பாவில் அன்று நிலவிய அரசியல் போக்குக்கு இது முரண்பட்டதாக விருந்தது. குறுகிய தேசியவாதம் வளர்ந்துவரும் தொழிலாகவிருக்கின்றது'' என திரு. மைக்கேல் சோல்மன் அவர்கள் கூறியுள்ளார்.

"இழிவான தேசியவாதம் எழுச்சி பெற்றுள்ளதாக நான் கருதுகின்றேன்.'' திரு நோபல் அவர்களின் உயிர்தகவு அழியாது நீடித்திருக்கும் என நான் கருதுகின்றேன். சமாதானப் பரிசுடன் இது முக்கியமாகச் சம்பந்தப்பட்டிருப்பினும் மற்றைய விடயங்களிலும் சம்பந்தப்பட்டுள்ளது'' என அவர் மேலும் கூறியுள்ளார்.

தாங்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்று கருதியதாலும், பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும் என்று கருதியதாலும் பரிசு வழங்குவதற்கு திரு. நோபல் அவர்களால் நியமிக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் தங்கள் பணியை ஆற்றுவதற்கு ஆரம்பத்தில் ஆர்வம் காட்டாதிருந்தன.

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு வழங்கும் பருவத்தை ஒக்டோபர் மாதம் 7-ம் திகதி வியாழக்கிழமையன்று ஆரம்பிக்கவிருக்கும் சுவீடன் நாட்டுக் கல்விக்கழகம், சிறந்த இலக்கியப் படைப்புக்கு பரிசு பெறுபவரின் பெயரையும் அன்றைய தினம் அறிவிக்கவிருக்கின்றது.

மருத்துவம், பொருளாதாரம், இரசாயனம் மற்றும் பௌதீகம் ஆகிய துறைகளில் பரிசு பெற்றவர்களின் பெயர்களை அடுத்த வாரம் ஸ்ரொக்கோமில் வெளியிடவிருக்கும் அதேவேளையில 1993 ஆம் ஆண்டிற்கான சமாதானப் பரிசை நோர்வேயிலுள்ள நோபல் குழுவினர் ஒக்டோபர் மாதம் 15-ம் திகதி ஒஸ்லோவில் அறிவிக்கவுள்ளனர்.

பரிசைப் பெறவிருக்கும் ஒவ்வொருவரும் இந்த ஆண்டில் 6.7 மில்லியன் கிறவுன்ஸ்சை, அதாவது 837,000 டொலர்களைப் பெறவிருப்பதுடன், ஆய்வை நடாத்தி பரிசு பெறுபவர்களைத் தேர்ந்தெடுக்கும் நிறுவனங்களும் இதே தொகையைப் பெறவிருக்கின்றன.

ஸ்ரொக்கோமிலுள்ள குறுகிய தேசியவாதத்தைத் தவிர்த்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்ட பரிசு வழங்கும் நிறுவனங்கள், ஏற்கனவே பரிசு பெற்றவர்களையும், நிரந்தரப் பிரதிநிதிகளையும், தேர்ந்தெடுப்பதில் ஆற்றல் வாய்ந்வர்களையும் பரிசு பெறத் தகுதியுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஈடுபடுகின்றன.

திரு. நோபல் அவர்கள் விரும்பியதுபோல் அழிவுறாத மனிதப் பண்பையும், தேசியப் பண்பையும் பேணுவதை நோக்கமாகக் கொண்டே இப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகத் திரு. சோல்மன் அவர்கள் கூறியுள்ளார்.

# போரும் சமாதானமும்

(விடுதலைப்புலிகள் - மாசி 94)

நீண்ட காலமாகவே தமிழீழத்தின் சமாதானக் கதவுகள் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றன. சமாதானத் தூதுவர்கள் எவராகயிருப்பினும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், இங்கு வந்து செல்ல வாய்ப்பளிக்கும் வகையில் அமைதியின் பாதையை அகலத் திறந்துவிட்டிருக்கின்றார் தலைவர் பிரபாகரன்.

இந்தச் சமாதானக் கதவுகளூடாக பலர் பல தடவைகள் இங்கு வந்து சென்றிருக்கின்றார்கள்; புலிகளின் சமாதானச் செய்தியை தென்னிலங்கைக்குக் கொண்டுசென்றிருக்கிறார்கள். ஆனால் சிங்கள தேசம் இதுவரை சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட மறுத்துவருகிறது; சண்டையை நிறுத்தி, சமாதான சூழ்நிலையை உருவாக்க பின்னடித்து வருகிறது.

புலிகளின் சமாதானக் கதவுகளூடாக முதன் முதலாக நுழைந்தது நோர்வே அரசாங்கமாகும். 1990-ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஒரு உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்தார்.; எம்முடன் பேச்சுக்களை நடாத்தினார்; சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்களை விரும்புவதாகக் கூறினார். நோர்வே 'மத்தியத்துவம் வகிக்க விரும்புகிறது; நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் பேச்சுக்களை ஒழுங்குசெய்யலாம்; சமாதானப் பேச்சுக்களுக்கு முதற்படியாக இருதரப்பினரும் போர் நிறுத்தம் செய்யவேண்டும் என வலியுறுத்தினார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். ''உண்மையில் நீங்கள் சமாதானத்தை விரும்புவதாக உலகத்திற்கு நிரூபித்துக் காட்டவேண்டுமென்றால், நீங்கள்தான் முதலில் போர்நிறுத்தம் செய்யவேண்டும். ஒருதலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தவேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால், சிறிலங்கா அரசு மீது நாம் அழுத்தத்தைப் பிரயோகித்து அவர்களையும் போர்நிறுத்தத்திற்கு இணங்கவைக்கலாம்'' என்றார். நாம் அதற்கும் இணக்கம் தெரிவித்தோம்.

1991-ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து போர் நிறுத்தம் கடைப்பிடிப்பதாக, விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. ஆனால் சிங்கள அரசு போர்நிறுத்தத்தை நிராகரித்தது; யுத்தத்தை மேலும் தீவிரமாகத் தொடர்ந்தது. ஒன்றும் தெரியாததுபோல நோர்வே அரசாங்கம் மௌனம் சாதித்தது. அந்த ஆண்டு மேற்குலகம் அதிகப்படியான உதவியை சிறிலங்காவுக்கு வாரி வழங்கியது.

அடுத்ததாக, புலிகளின் சமாதானக் கதவுகளூடாக குவேக்கர்ஸ் நல்லெண்ணக் குழு பிரவேசித்தது. பல தடவைகள் வந்துசென்றது. பிரிட்டனின் ஆசியுடன் லண்டனில் பேச்சுக்களை நடத்தலாம் என்று சொன்னது. கிட்டுவுடன் சேர்ந்து ஒரு விரிவான சமாதானத் திட்டத்தைத் தயாரிப்பதாகக் கூறியது. உபகண்டம் ஊடாக போக்குவரத்துச்செய்ய இந்தியாவும் இணங்குவதாகத் தெரிவித்தது. எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்க நாமும் ஒப்புதல் கொடுத்தோம். இறுதியில் என்ன நடந்தது? 'குவேக்கர்ஸின்' சமாதான முயற்சி முடிவில் கிட்டுவின் உயிரை அநியாயமாகப் பலிகொண்டது. இந்தத் துயரமான கதைபற்றி நாம் ஏற்கெனவே விளங்கியிருக்கிறோம். வங்கக்

**அன்ரன் பாலசிங்கம்**

கடலில் வைத்து புலிகளின் சமாதானப் படகு இந்தியாவால் மூழ்கடிக்கப்பட்டபோது, பிரிட்டனோ அல்லது மேற்குலகமோ வாய் திறக்கவில்லை. சமாதானத் தூதுவனாகவே கிட்டு தமிழீழம் நோக்கி பயணம் செய்தார் என குவேக்கர்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஆட்சேப அறிக்கையையும், உலகம் இருட்டடிப்புச் செய்தது.

இது ஒருபுறமிருக்க, 1992-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் திகதி பௌத்த பிக்குகள் அடங்கிய சமாதானக் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தது. இக்

---

**வந்தவர்கள் திரும்பி விட்டார்கள். அவர்கள் புதிதாக எதையும் கொண்டு வரவுமில்லை; புதிதாக எதையும் கொண்டு செல்லவுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். இந்தப் பழைய செய்தியைத்தான் கொண்டு சென்றுள்ளார்கள். கொழும்பிலுள்ள அரசியற் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாலும் கேட்கவா போகின்றது?**

---

குழுவிற்கு அமரபுர பௌத்த பீடத்தைச் சேர்ந்த வண. சித்தாதிய மகாநாயக்க தேரர் தலைமை வகித்தார். இவர்கள் புலிகளின் பாதுகாப்புடன் யாழ், குடாநாடு முழுவதும் சுற்றிப்பார்த்தனர். தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கேட்டறிந்தனர். யுத்த அனர்த்தங்களைக் கண்டறிந்தனர். மக்களின் அவலநிலைகண்டு அதிர்ந்துபோன இவர்கள், போருக்கு முடிவுகட்டி சமாதான சூழலை உருவாக்க தம்மாலான முயற்சிசெய்வோமென வாக்குறுதிகள் அளித்தனர். இந்தப் பௌத்த சமாதானக் குழுவினர் சில யோசனைகள் அடங்கிய திட்டத்தோடு வந்திருந்தனர். இத்திட்டத்தில் தமிழர் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்பட்டிருந்தது. நாம் இவர்களைச் சந்தித்துப் பேசினோம். எந்தத் தீர்வுக்கும் 'தமிழர் தாயகம்' அடிப்படையானது என வலியுறுத்தினோம். பேச்சுக்களுக்கு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம் எனவும் எடுத்துரைத்தோம். சிங்கள அரசியல் தலைமையுடன் பேச்சுக்களை நடத்தி, சமாதான சூழலை உருவாக்குவோம்; புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம் என்று சொன்னார்கள். ஆனால் போனவர்கள் வரவில்லை. கொழும்பு திரும்பிய இவர்களை ஆட்சிபீடத்தில் இருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் சந்திக்க விரும்பவில்லை. இதனால் இவர்களது சமாதான முயற்சி பிசுபிசுத்துப்போனது.



ஆயர் கெனத் பெர்னாண்டோவுடன் தலைவர்

இந்த நிகழ்வுகளுக்கு அப்புறமும் சமாதானக் கதவுகளைப் புலிகள் சாத்திவிடவில்லை,

அடுத்ததாக, சென்ற ஆண்டு முற்பகுதியில் அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தார். சமாதானத்தின் பருவகாலம் வந்துவிட்டது என்றார். புலிகளின் தலைவரை நேரில் சந்திக்கவேண்டும்; அவரது வாயால் அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டறியவே சிங்கள தேசம் விரும்புகிறது; ஏனையோரைச் சந்திப்பதில் அர்த்தமில்லை. அவசியமும் இல்லை என்றார். ஆயரின் அபிலாசையையும் வற்புறுத்தலையும் நாம் தலைவரிடம் எடுத்துரைத்தோம். ஆயரைச் சந்திக்க தலைவர் இசைந்தார். 1993 ஜனவரி 10-ஆம் திகதி, சந்திப்பு நிகழ்ந்தது. இரண்டரை மணி நேரமாக தலைவர் பிரபாகரன் ஆயருடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார்; எல்லா விடயங்கள்பற்றியும் மனம் திறந்து பேசினார்.

தமிழீழம் சமாதானத்தை வரவேற்கிறது. அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயார். சிங்கள தேசத்திற்கு நாம் நேசக்கரம் நீட்டிநிற்கிறோம். ஆனால் அதைப்பற்றிக்கொள்ள சிங்கள அரசு மறுக்கிறது. சண்டையை நிறுத்தி, பொருளாதாரத் தடைகளை நீக்கி சகஜ நிலையைத் தோற்றுவித்தால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இப்படிச் சொன்னார் தலைவர்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடிவிடும் சிங்கள அரசின் முயற்சியையும் தலைவர் கண்டித்தார். தமிழர் தாயகம் என்பது எமது அடிப்படையான கோரிக்கை. அதனை சிங்களதேசம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது என்பதனையும், தலைவர் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

“நீங்கள் உண்மையில் சமாதானத்தை விரும்புவதாக இருந்தால், உங்கள் நல்லெண்ணத்திற்குச் சான்றாக இரு போர்க்கைதிகளை விடுதலைசெய்து என்னிடம் ஒப்படைப்பீர்களா?'' என்று கேட்டார் ஆயர். எவ்விததயக்கமுமின்றி தலைவர் பிரபாகரன் அதற்கு இணங்கினார். ஆச்சரியத்தால் ஆயரின் முகம்மலர்ந்தது போருக்கு ஒரு முடிவு கொண்டுவர முயற்சிப்பேன். பொருளாதாரத்தடையால் தமிழ் மக்கள் படும் தாங்கொணாத்துயரைத் தென்னிலங்கையில் எடுத்து விளக்குவேன். சமாதான சூழலை உருவாக்கும்படி அரசிடம் வற்புறுத்துவேன் இவ்விதம் வாக்குறுதி அளித்தார் ஆயர்.

தலைவர் பிரபாகரனின் நேர்மைக்கு அறிகுறியாகவும் புலிகளின் சமாதானத் தேடுதலுக்கு சாட்சியாகவும், விடுதலைபெற்ற இரு போர்க்கைதிகளை அழைத்துக்கொண்டு ஆயர் கெனத் பெர்னாண்டோ கொழும்பு திரும்பினார். கொழும்பில் பத்திரிகையாளரிடம் பேசும்போது பிரபாகரனிடம் மனிதத்தின் முகத்தைக் கண்டேன். என்று கூறினார். அவ்வளவுதான், சிங்களப்பேரினவாதம் கொதித்து எழுந்தது; ஆயர்மீதும் புலிகள்மீதும் சேற்றைவாரி வீசியது. ஆயரிற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால்தான் பிரபாகரனை மனிதனாகக் கண்டார்'' என ஒருபத்திரிகை எழுதியது.

ஆயர் எவ்வளவோ முயற்சித்தும், அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவரைச் சந்திக்க மறுத்து விட்டார்.

சிங்களப் பேரினவாதம் சமாதானத்தை விரும்பாததால், மீண்டும் ஓராண்டு யுத்தத்தில் கழிந்தது. என்றுமில்லாதவாறு இராணுவத்திற்கு அடிமேல் அடிவிழுந்தது பூநகரியில் பேரடி விழுந்தது. அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும், என்பார்கள் ஆனால் சிங்களப்பேரினவாத அம்மி சிறிதேனும் நகரவில்லை.

வழமைபோல, வருட ஆரம்பத்தில் சமாதானப் பருவகாலம் பிறந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தை நோக்கிய ஆன்மீக யாத்திரைகளும் தொடங்கின. இம்முறை கிறிஸ்தவத்தின் மூன்று முக்கிய மதபீடத் தலைமைகளும் இங்குவந்து நிலமையைக் கண்டறிந்து சென்றன. இவர்களைத் தொடர்ந்து பௌத்த மாகசங்கத்தின் பிக்குகள் குழு ஒன்றும் யுத்தத்தால் சிதைந்த யாழ்ப்பாணத்தின் முகத்தைத் தரிசித்துச்செல்ல இருக்கிறது.

கத்தோலிக்க, மெதடிஸ்த அங்கிலிக்கன் திருச்சபைத் தலைவர்களை நாம் சந்தித்து எமதுநிலைப்பாட்டை விளக்கினோம்.

சமாதானப்பேச்சுக்கள் சமாதான சூழ்நிலையில் நிகழ்வதுதான் நியாயம். அப்பொழுதுதான் அது வலுக்கட்டாயமற்ற, சுதந்திரமான பேச்சாக அமையும் இராணுவ பொருளாதார அழுத்தங்களைப் போட்டவாறு, தமிழரின் தொண்டையை நெரித்து கொண்டுபேசச்சொல்வது நியாயம் ஆகாது. நெருக்குவாரத்தின் பிடிக்குள் நின்றுகொண்டு நட்புறவுடன், நல்லெண்ணத்துடன், நம்பிக்கையுடன் பேச முடியாது. எனவே, அழுத்தம் போட்டு, மிரட்டிப் பயமுறுத்தி தமிழர்மீது ஏதோ தீர்வு ஒன்றைத் திணித்து விடலாம் என்று அரசு எண்ணுவது அடிப்படையிலேயே தவறானது. முதற்படியாக சமாதான சூழ்நிலை உருவாகவேண்டும். இதற்கு போர் நிறுத்தம் அவசியம்: பொருளாதார நெருக்குதல் நீக்கப்படுவது அவசியம் தமிழர்மீது தனது நல்லெண்ணத்தைக் காண்பிக்கும்வகையில் அரசு இவற்றைச் செய்யலாம். இப்படியாக ஒருசமாதான சூழ்நிலை பிறப்பிக்கப்பட்டால் நாம் பேச்சுக்களுக்குத்தயார். இவ்வாறு நாம் எமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினோம். எமது யோசனையில் நியாயம் இருப்பதை ஆயர்களும் உணர்ந்துகொண்டனர்.

அங்கிலிக்கன் ஆயர், தலைவர் பிரபாகரனை மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்தார். ஆனால் வற்புறுத்தவில்லை ஏற்கெனவே ஒரு தடவை தலைவரைச் சந்தித்தாகி விட்டது. நேரில் வந்து, நேசக்கரம் நீட்டி, சமாதானத்திற்கு சமிக்ஞையும் காட்டியிருக்கிறார் தலைவர். அப்படியிருந்தும் சிங்கள தேசம் தான் சமாதானக் கதவுகளை இறுகப் பூட்டி வைத்திருக்கிறது. இந்த சூழ் நிலையில் மீண்டும் மீண்டும் சந்தித்து, மீண்டும் மீண்டும் சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. கொழும்பிலுள்ள அரசியல் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாற் போலும் கேட்கவா போகிறது? ஆயர் விசயமறிந்தவர். அதனால் அவர் மீண்டும் சந்திப்பை வற்புறுத்தவில்லை.

ஆயர்கள் இங்கு வந்தபோது சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவும் இங்கு வந்தார். அவரைப் புலிகளின் சார்பில் அரசியல் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சந்தித்தார். ஆயருக்குச் சொல்லப்பட்டதே அவருக்கும் சொல்லப் பட்டது.

வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்கள் எதையுமே புதிதாகக் கொண்டுவரவில்லை; எதையுமே புதிதாகக் கொண்டு செல்லவுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பழைய செய்தியைத் தான் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதைத்தான் கொழும்பிலும் சொல்லப் போகிறார்கள். கொழும்பிலும் புதிதாக எவ்வித திருப்பமும் ஏற்படப் போவதில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்பவில்லை; பொருளாதார நெருக்குதலைத் தளர்த்தவும் விரும்பவில்லை போரையும் பொருளாதார நெருக்குதலையும் அரசியல் அழுத்தமாகவே அரசு கணிக்கிறது இந்த அழுத்தங்களோடு பேச்சு என்ற பொறியை வைக்க அரசு விரும்புகிறது. புலிகள் எந்த அளவிற்கு விட்டுக்கொடுப்பார்கள், எந்த அளவிற்கு இறங்கி வருவார்கள் என்பதை நாடிபிடித்துப் பார்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். இதன்நோக்கில் தான் சமாதானத் தூதுகளையும் அரசாங்கம் ஊக்குவிப்பது போலத் தெரிகிறது.

இனிவருவது தேர்தல் யுகம். இந்தக் காலகட்டத்தில் கவனமாகக் காய்களை நகர்த்தவேண்டும் என்பது, ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு நன்கு தெரியும். இந்தக் காலத்தில், சிங்களப் பேரினவாதத்திற்குத் தீனிபோடுவதையே அரசியல்வாதிகள் விரும்புவார்கள். தமிழர்களுக்கு நீதி வழங்குவது என்பது, அரசியற் தற்கொலையாக முடியும். எனவே, இந்தக்கட்டத்தில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது, அரசாங்கத்தின் நோக்கமல்ல.

போருக்கு ஓய்வு கொடுப்பதை அரசு விரும்பாததற்குப் பல காரணங்கள் உண்டு. இராணுவம் இன்னும் மேலாதிக்க நிலையை எட்டிவிடவில்லை. தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்து படையினரின் மனவுறுதி தளர்ந்திருக்கிறது. இன்றைய சூழலில் இராணுவ சமபலம் புலிகளுக்குச் சார்பாக இருக்கிறது இந்த நிலைமையில் போரை

102652

நிறுத்திக்கொள்வது புலிகளுக்கே அனுகூலமாக அமையும் என, அரசு அஞ்சுகிறது. பலத்தின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, ஆதிக்க வலிமையுடன்-அதிகார தோரணையில் - பேசுவதையே அரசு விரும்புகிறது. அதற்கு இன்னமும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாக வரவில்லை. அதற்கு வெற்றிகள் வேண்டும்; போர்ச்சாதனைகள் புரியவேண்டும்; ஆக்கிரமிப்புவேலைகளைச் செய்யவேண்டும்; புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்தவேண்டும். இதை எல்லாம் செய்துகாட்டலாம் என இராணுவத் தலைமை நம்புகிறது. அதற்கான தயாரிப்புகளையும் செய்கிறது. ஆகவே, போருக்கு ஓய்வுகொடுப்பதை இராணுவம் விரும்பவில்லை. போரைத் தொடர்வதில் தேர்தல் அனுகூலங்கள் இருப்பதாகவும் அரசு நினைக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணாது தட்டிக்கழிக்கலாம்;' தமிழரின் பயங்கரவாதம்' என்ற கோஷத்தின் கீழ் சிங்களவரின் தேசியவாதத்தில் குளிர்காயலாம்; பேரினவாத சக்திகளைத் தனக்குச் சார்பாக அணிதிரட்டிக் கொள்ளலாம்; சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் திசைதிருப்பிவிடலாம். இதனால் போரைத் தொடர அரசு விரும்பிகிறது.

படைகளுக்கு ஏற்பட்டுவரும் பேரிழப்புகள் காரணமாக, யுத்தத்திற்கு எதிரான குரல் ஒன்றும் தென்னிலங்கையில் எழுகிறது. இது பாமர மக்கள் மட்டத்திலிருந்து எழும் அங்கலாய்ப்பு; பணத்திற்காக பிள்ளைகளை இராணுவத்திற்கு அனுப்பி, பிணத்தைக்கூடப் பார்க்கமுடியாத பெற்றோரின் அவலக் குரல். இதுமெல்ல மெல்லப் பலம்பெற்று வருகிறது. அத்துடன் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஓரளவு அழுத்தம் போடுகின்றன. புலிகளை வெல்ல முடியாத ஒரு போரில் பெருந்தொகைப் பணம் விரயமாகிறது. யுத்தமும் முடிவ்லாத கதை யாகத் தொடர்கிறது. அரசின் வலுவுக்கு இ அச்சுறுத்தலாக அமைசிறத. இலங்கையில் பெ மளவு முதலீடு செய்வதற்கோ, அன்றி இத்தீவ உலக முதலாளியத்தின் ஒரு வர்த்தக வலையம மாற்றுவதற்கோ, முடிவில்லாமல் தொடரும் போர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. னால் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர் முயலுமாறு மேற்குலகம் சிறிலங்க வுக்கு அழுத் போடுகிறது. போருக்கு எதிராக எழும் இந்த அ சேபக் குரல்களைத் திருப்திப்படுத்துவதற்கா சமாதானப் பேச்சில் அக்கறை காட்டுவது போல அரசாங்கம் நடிக்கிறது. சமாதானப் பேச்சுக்கு அரசு தயாராக இருக்கிறது; ஆனால் புலிகள் பேச்சை விரும்பவில்லை என்ற பொய்ப்பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் தலைவர் பிரபாகரன் கொழும்பிற்கு வரமாட்டார் என்பதை நன்கு தெரிந்திருந்தும், அவர் கொழும்பு வந்து தன்னுடன் பேசலாம் என ஜனாதிபதி அழைப்பு விடுவதும் ''அழைத்தாலும் அவர் வருகிறார் இல்லையே'' எனப் பின்பு புலம்புவதும்' விஷமத்தனமான பிரச்சாரமன்றி வேறொன்றுமல்ல.

உலகத்திடமிருந்து கடன்வாங்கும் பருவகாலம் நெருங்கிவிட்டது. இந்தப் பருவகாலத்தில் சமாதான தூதுக்களை ஊக்குவிப்பதும், சமாதானத்திற்கா பொய்ச் சமிக்ஞைகளைக் காட்டுவதும், வருடாவ டம் சிறீலங்கா அரசு மேடையேற்றும் அரசிய நாடகமாகும். புளித்துப்போன இந்த நாடகத்தை, மேற்குலகத்தனவந்தர்கள் சலிப்புறாமல் ரசித்துக் கொண்டிருப்பதுதான் எமக்கு வியப்பாக இருக்கிறது.

## மருத்துவர்களின் சதி (DOCTORS PLOT)

முன்னணியிலுள்ள அரசாங்க மற்றும் கட்சி அதிகாரிகளைக் கொலை செய்வதற்குப் பிரபலமான சோவியத் மருத்துவ நிபுணர்கள் சதி முயற்சியில் ஈடுபட்டனர் எனக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளனர். கட்சியில் விரும்பத் தகாதவர்களைக் கட்சியை விட்டு வெளியேற்றுவதற்கு, மருத்துவர்களின் விசாரணை முடிவைப் பயன்படுத்த ஸ்ராலின் விரும்பினார் என்பது தான் சோவியத் ஒன்றியத்தின் வெளியிலுள்ள அறிஞர்களின் அபிப்பிராயம் ஆகும்.

1953 ஜனவரி 13-ல், முக்கியமான சோவியத் தலைவர்களுக்குச் சிகிச்சை அளித்த ஒன்பது மருத்துவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் எனச் செய்தித் தாள்களான பிராவ்டாவும், இஸ்வெஸ்தியாவும் அறிவித்தன. மத்திய செயற்குழுச் செயலாளரான அன்ட்றே ஏ. ஸ்டோனோவ் 1948 இல் இறந்தார். மற்றும் சோவியத் இராணுவ பிரதான அரசியல் நிர்வாகத் தலைவரான அலெக்ஸ்சாண்டர் எஸ். இன்சொர்பேகோவ் 1945-ல் இறந்தார். இவர்கள் இருவருக்கும் நஞ்சூட்டியதாகவும், அத்துடன் பல சோவியத் இராணுவ மாஷல்களைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் இம் மருத்துவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர். மருத்துவர்களில் குறைந்தது ஆறுபேர் யூதர்களாவர். ஐக்கிய அமெரிக்க மற்றும் பிரித்தானியப் புலனாய்வுச் சேவைகளினாற் பணியில் அமர்த்தப்பட்டவர்களெனவும் அதேபோலச் சர்வதேச யூதர்களின் நலனுக்காகச் சேவையாற்றுபவர்கள் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். சகல மருத்துவர்களும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாகச் சோவியத செய்தித்தாள்கள் அறிவித்தன.

விசாரணையும் அதனைத் தொடர்ந்து கட்சியிலிருந்து விரும்பத் தகாதவர்கள் அகற்றப்படப் போகின்றார்கள் என்ற வதந்தியும், ஸ்ராலினின் மரணம் (1953 மார்ச் 05-ல்) குறுக்கிட்டதால் நடைபெறவேயில்லை. மருத்துவர்களுக்கு எதிராகச் சாட்டப்பட்ட குற்றம் பொய்யாக இருக்க வேண்டுமென்றும் இவர்களுடைய குற்ற ஒப்புதல்கள் சித்திரவதைமூலம் பெறப்பட்டவையென்றும், வழக்குகளின் மீள்பரிசீலனை எடுத்துக் காட்டுவதாக ஏப்ரலில் பிராவ்டா அறிவித்தது. மருத்துவர்கள் (விசாரணையின்போது மரணமான இருவரைத்தவிர) குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டனர். 1954 இல் அரச பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவரும் மற்றும் சில காவற்துறை அதிகாரிகளும், மருத்துவர்களுக்கு எதிராக வழக்கைச் சோடிப்பதிற் பங்குபற்றியதற்காகத் தூக்கிலிடப்பட்டனர்.



## புறப்பட்டுவா...

கார்த்திகைப் பூவினை
அடுப்படியில்
ஆகுதியாகி
தீயோடு
மௌனயுத்தம் நடத்துபவளே!
புறப்பட்டு வா,

தன் நம்பிக்கையை மட்டும்
தைரியத்துடன்
வளர்த்துக் கொள்
உன் விருப்பங்களை
உன் சிந்தனைகளை
சுயமாகச் செயற்படுத்த
சுதந்திரம் கிடைக்கின்றதா?

இல்வாழ்க்கை - இன்று
இல்லாதவர்களுக்கு
இல்லையாம்
இருபதாம் நூற்றாண்டு
இன்னமும் இதைத்தான்
இயற்றிக்கொண்டிருக்கிறது!

ஊமை கண்ட கனவுபோல
உன் உள்ளத்து உணர்வுகளும்
ஊமையாகும் போது,
உன்னைக் குட்டுபவர்கள்
குட்டக்குட்ட
நீயும் குனிந்து குனிந்து

அங்கே
குசினிக்குள்ளே சேலை
குழுதிக்கொண்டிருப்பாய்
புறப்பட்டுவா
ஒரு புதுயுகம் படைப்போம்
நாம் தூக்கிய
துப்பாக்கியின் பின்னால்

எம் இதயம் நேசிக்கும்
தேசத்து விடுதலை
எமக்கெட்டும் போது
அங்கே
பெண்ணடிமைக்கு
சமாதி கட்டப்படும்:
சமுதாயத்தின்
பிற்போக்கு சிந்தனைகளுக்கு
புதைகுழி தோண்டப்படும்

நாளைய
இந்த எழுச்சிக்காக
இன்று நீ எழுந்து வா
அதோ பார்.
உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி,
இரத்த வெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு
பிடித்துக் கொள்
அவள் ஆயுதத்தை!
பின்பற்று
அவள் சுவடுகளை

எனது
கைகள்
நாளை ஓயலாம்,
அன்றி
ஓடியலாம்
ஆனால்......
எமது பேனாவோ
ஓயப்போவதில்லை
எனது
துப்பாக்கியைப்
போல!

— கப்டன் வானதி —